# செழியர் செம்மல்

(ஒரு வரலாற்றுப் புனைந்துரை நூல்)

811/4-54

441

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1954
MADRAS

ஆக்கியோன்:
வித்துவான் V. நரசிம்மன், M. A.

V211P
N54

பழனியப்பா பிரதர்ஸ்

திருச்சி :: சென்னை-5

பதிப்புரிமை] 1954 [விலை ரூ. 1-0-0

முதற்பதிப்பு - 1954

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 104632
EGMORE, MADRAS

Asian Printers, Madras-5.

# முன்னுரை

நமது பண்டைத் தமிழகத்து மன்னர் வீரம், கொடை முதலிய நற்பண்புகளால் மேம்பட்டு விளங்கினர் என்பது யாவரு மறிந்ததே. அன்னோர் வரலாறுகள் தமிழிலக்கியங்களில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பெருக்கிப் புனைந்துரை வரலாறுகளாகக் கூறின் அன்னார் செயல்கள் நந்தமிழகத்துச் சிறார் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிய ஏதுவாகும். அது நமது சிறார்க்கு நற்பண்புகளை யூட்டி அவர்களை நன்மக்களாக ஆக்கும்.

மேற்கூறிய கருத்தை மனத்துட் கொண்டு இந்நூல் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனது வரலாற்றைப் புனைந்துரைவரலாறாகக் கூறப்பட்டதாகும். இம்மன்னனது பெருமையைத் தமிழ் கற்றார் யாவரும் மறிவர். கடைச்சங்க காலத்துப் பாண்டிய மன்னருட் சிறந்தவன் இவனே எனில் மிகையாகாது. வீரம், வள்ளன்மை, சான்றோரை நட்பினராகக் கொண்டொழுகுதல் முதலிய நற்பண்புகளில் சிறந்து விளங்கினன் இச் செழியன். அவனது அச்செயல்கள் இந்நூலில் புனைந்துரைவாயிலாக நன்கு விளக்கப்பட்டுள்ளன. மற்றும், இச் சரிதம் இலக்கியத்தை யொட்டியதாதலால் இலக்கியப் பொருட் செறிவும் பொருந்தியதாகும்.

மேற்கண்டவாற்றால் இப்புத்தகம் உயர்நிலைப்பள்ளி மாணவர்க்குப் பாடப் புத்தகமாகப் பயன்படுமென எண்ணுகின்றேன். கல்வித்துறை படிந்தோர் இதனை ஆதரித்து என்னை ஊக்குவார்களென நம்புகின்றேன்.

ஆக்கியோன்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... | 1 |
| 2. | செழியனது பிறப்பும் இளமைப் பருவமும் | ... | 11 |
| 3. | சேர சோழர் சூழ்வு | ... | 17 |
| 4. | செழியனது வெளிநாட்டுச் செலவு | ... | 24 |
| 5. | சோழ நாட்டில் செழியன் | ... | 40 |
| 6. | சேர நாட்டில் செழியன் | ... | 56 |
| 7. | செழியன் வஞ்சினம் | ... | 70 |
| 8. | வீரண்ணன் ஒற்றறிதல் | ... | 74 |
| 9. | தலையாலங்கானப் போர் | ... | 90 |
| 10. | சிறைச்சாலை | ... | 96 |
| 11. | ஒற்றுமை முயற்சி | ... | 107 |
| 12. | வெற்றிக் கொண்டாட்டம் | ... | 119 |

# செழியர் செம்மல்

## 1. தோற்றுவாய்

நிலமகளது எழிலொழுகும் வதனத்தில் திலகம் போல விளங்குவது தமிழ்நாடு. அதன் ஒரு பகுதி யாகிய **பாண்டிய நாடு** பண்டைப் பெருமை வாய்ந்தது. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மிகப்பழைய காலத் திலே அது மிக விரிந்திருந்தது. தற்போதைய தமிழ் நாட்டின் தெற்கெல்லையாகிய **குமரி முனைக்குத்** தெற்கே அது எழுநூற்றுக் காவத எல்லை விரிந்திருந்தது என் றும், அந்நிலப்பரப்பில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்றும் தமிழ் நூல்களால் அறிகின்றோம். அந்நாடுகளாவன : **ஏழ்தெங்க நாடு, ஏழ்மதுரை நாடு, ஏழ்முன்பாலை நாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ்குறும்பனை நாடு** என் பன. இவை கடல் கோள்களால் அழிந்தன.

பாண்டிய நாட்டில் உண்டான கடல் கோள்கள் இரண்டாம். அவற்றுள் முதற் கடல் கோளுக்குமுன் **குமரிமலை** என்னுமோர் மலை பாண்டிய நாட்டிற்குத் தெற்கெல்லையாயிருந்தது. அதனை யடுத்துப் **ப∴றுளி யாறு** என்னுமோராறு ஓடியது. இந்த ஆறு **நிலந்தரு திருவிற் பாண்டியன்** என்னுமொரு பாண்டியவரசனால் வெட்டப்பட்டது. ஒருகால் கடல் பாண்டிய நாட்டை அழிக்கவர, அக்காலத்தில் இருந்த பாண்டியவரசன்

தனக்குச் சிவபிரானுல் அளிக்கப்பட்ட வேலை எறிந்து அதனை அடக்கினுன்; அதனுல் பகைகொண்ட கடல் மீண்டுமொருகாற் பொங்கியெழுந்து குமரி மலையையும் பஃறுளியாற்றையும் அழித்துத் தன்னுள் ஆழ்த்தியது எனச் சிலப்பதிகார உரையால் அறிகின்ருேம். இதனுல் நிலந்தருதிருவிற் பாண்டியன் காலத்துக்கு முன் முதற் கடல்கோளும், அவன் காலத்தில் இரண்டாம் கடல்கோளும் நிகழ்ந்தன என அறியலாம்.

முதற் கடல் கோளுக்கு முற்பட்ட காலம் முதற் சங்க காலமாகும். இரண்டாம் கடல் கோளுக்கு முற்பட்ட காலம் இடைச் சங்க காலமாம். மேற்கூறிய நிலந்தருதிருவிற் பாண்டியன் இரண்டாம் கடல் கோளுக்கு முன்னும் பின்னும் இருந்தான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டுக்குக் **கவாடபுரம்** என்பது தலை நகராயிருந்தது. அந்நகரம் முத்துக்களுக்குப் பெயர்போனது என்றும், அம்முத்துக்கள் **பாண்டிய கவாடகம்** என்று புகழ்பெற்றிருந்தன என்றும் தெரிகிறது.

முதற் கடல்கோளால் சிறிது சுருங்கிய பாண்டிய நாட்டுக்குக் **குமரியாறு** தெற்கெல்லையாயிருந்தது. அது தற்போதைய குமரிமுனைக்குத் தெற்கிலிருந்தது. இவ்விரண்டிற்கு மிடையில் கவாடபுரம் இருந்தது. இராமாயணத்தில் சீதையைத் தேடுமாறு இராமர் வானரர்களை அனுப்பியதை நாமறிவோம். அப்போது அவர் தெற்குப் பக்கத்திற் கனுப்பிய அநுமார் முதலியோரை நோக்கி, "நீங்கள் தெற்கே சென்ருல், அங்குப் பாண்டியரது கவாடபுரத்தைக் காண்பீர்கள்" என்று கூறிய

தாக **வால்மீகி ராமாயணம்** கூறுகின்றது. இதனுல் தமிழகத்தின் தொன்மை நன்கறியப்படும்.

கவாடபுரம் கடல்கோளால் அழிந்தபோது நிலந் தருதிருவிற் பாண்டியன் அதற்குத் தப்பியோடினுன்; அப்போது அவன் கால் முடமாகிவிட்டது என்றும், அதனுல் அவன் **முடத் திருமாறன்** எனப்பட்டான் என்றும் சில அறிஞர் கூறுகின்றனர். இவ்வாறு கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் மூன்ருஞ் சங்கமாகிய **கடைச் சங்கத்தை** நிறுவினுன். நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து **அதங்கோட்டாசான்** முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டது என்று **பனம்பாரனுரது** தொல்காப்பியப் பாயிரத்தால் அறிகின்ருேம். இதனுல் தொல்காப்பியம் தோன்றியதும் இவன் காலத்திலேயேயாம்.

மற்றுப் பண்டைத் தமிழ் நூல்களில் **கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியன்** என்னும் ஒரு பாண்டியன் குறிக்கப்படுகின்ருன். அவன் தன் பாதங்களைக் கடல் நீர் அலம்புமாறு உயர்ந்து நின்ற காரணத்தால் அப் பெயர் பெற்ருன். மேலும் இவன் இக்காரணத்தால் **நெடியோன்** எனவும் கூறப்பட்டான். இவ்வரசனும் மேற் கூறிய நிலந்தருதிருவிற் பாண்டியனும் ஒருவனே என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவ்வாறு முடத்திருமாறன் பாண்டியர் வரலாற்று நூலில் முதலிடம் பெற்றவனுவான். இவன் சுருங்கிய தனது நாட்டை விரிவுபடுத்துமாறு வடக்கே படையெடுத்துச் சென்று பல நாடுகளை வென்ருன் என்று தெரிகின்றது. இவன் சேர சோழரை வென்று, அவர்களது புலிச் சின்

ணத்தையும் விற் சின்னத்தையும் நீக்கி, அவற்றிற்குப் பிரதியாகத் தன் மீன் சின்னத்தை ஏற்படுத்திஞன் என்று கலித்தொகையால் அறிகின்ருேம். இம் மன்னஞல் தோற்றுவிக்கப்பட்ட மதுரை நீண்ட காலமாகப் பாண்டியர்க்குத் தலைநகரா யிருந்ததோடு இன்றும் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

மதுரையும் கடைச் சங்கமும் ஏற்பட்ட விதத்தைக் கூறிஞேம். இக்கடைச் சங்கம் ஆயிரத் தெண்ணூற்று ஐம்பது ஆண்டுகள் நடைபெற்றது. முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத்தொன் பதின்மர் அதனை நடத்திவந்தனர். இவருள் மூவர் கவியரங்கேறியவர் என இறையஞர் களவியலுரை கூறுகின்றது. என்ருலும் அதற்கு மேலும் பல பாண்டிய வரசர் சிறந்த கல்வியறிவுடையோராய்க் கவியரங் கேறியவராய் இருந்தனர் என்று தெரிகிறது. அவர்களது பாடல்கள் புறநானூறு முதலிய நூல்களில் காணப்படுகின்றன.

கடைச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்த புலவர்கள் நானூற்று நாற்பத்தொன்பதின்ம ராவர். **பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு** என்னும் நூல்களும், மற்றும் **கூத்து, வரி, பேரிசை, சிற்றிசை** முதலிய நூல்களும் அவர்களாலியற்றப் பெற்றன.

கடைச் சங்க காலத்துப் பாண்டியர் நாற்பத்தொன் பதின்மர் எனக் கூறப்படினும் தற்காலத்தில் அறியப் படுவோர் பத்துப் பதினைந்து பேர்களேயாவர். அவருள்ளும் சிறிது விளக்கமான வரலாற்றையுடையோர் மிகச் சிலரே.

கடைச்சங்க காலத்தில் பாண்டிய நாடு வடக்கே **தென் வெள்ளாற்றிலிருந்து** தொடங்கித் தெற்கே **குமரித்துறை** அதாவது கன்னியாகுமரிமுனை வரையில் பரவியிருந்தது. அதாவது தற்போதைய **மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி** ஆகிய ஜில்லாக்கள் அதில் அடங்கியிருந்தன. இந் நாட்டின் மேற்குப் பகுதி மலைப்பாங்கான நிலமாகும். மற்றப் பகுதிகள் சமவெளிகளாம். அச்சமவெளிப்பகுதியில் இரண்டோரிடத்தில் சிறு குன்றுகள் காணப்படுகின்றன. **வையை, பொருநை** என்னும் இரண்டு ஆறுகள் இந் நாட்டில் பாய்கின்றன. இவ்வாற்றோரமான இடங்கள் செழிப்பானவை. இந் நாட்டில் மழை வளம் குறைவென்றே சொல்லவேண்டும். அதனால் அடிக்கடி பஞ்சமுண்டானதாகவும் தெரிகின்றது. இறையனார் களவியலில் ஒரு பஞ்சத்தைப் பற்றிய செய்தி வருகின்றது.

நிற்க. பாண்டிய நாட்டு நானில வளத்தைப் பற்றி மதுரைக் காஞ்சி நன்கெடுத்தியம்புகின்றது. அவற்றுள் மருத நிலவளத்தைப் பற்றி ஈண்டுச் சிறிதாராய்வோம். அதாவது: "மேகங்கள் கீழ்கடலில் நீரை முகந்து கொண்டு மேல் கடல் வரையில் பரவி நிரம்ப மழை பொழிய அதனால் வெள்ளம் மிகுந்து ஓடியது. அந்நீர் மடுக்களிலும், கழனிகளிலும், தாமரை நெய்தல் ஆம்பல் முதலிய பூக்கள் நிரம்பிய பொய்கைகளிலும் நிரம்பியது. அந் நீர்நிலைகளில் உள்ள மீன்களைப் பிடித்துக் கொன்று குவிக்கும் வலைஞர் ஓசையும், மற்றும் கரும்பாலைகளின் ஓசையும், களை பறிப்போர் ஆரவாரமும் மிகுந்தன. இன்னும் வயல்களில் சேற்று

நிலத்தை உழும் உழவர் எருதுகளின் வருத்தத்தை நீக்குமாறு எழுப்பும் ஒலியும், விளைந்த நெல்லை அறுப்பார் பறையடித்து எழுப்பும் ஒலியும் அங்கு மிகுந்து ஒலித்தன. மேலும் **திருப்பரங்குன்றத்தில்** விழாக் கொண்டாடும் ஆரவாரமும், வையைப் புது நீர் விழாவினைக் கொண்டாடும் மகளிர் தம் கணவருடனே மகிழ்ந்து நீராடும் ஓசையும் அங்கு நிரம்பியிருந்தன. மேற்கண்ட ஒலிகளோடு, பாணர் சேரிகளில் மரங்கள் தோறும் மீனைத்திருத்தும் பாண்மகளிரது ஆடல் பாடல்களால் உண்டாகும் ஒலியும் ஒன்று சேர்ந்து வானத்தின் மீது எழும்பி, வானுலகத்தில் வசிப்பவர்க்கு இனிமையாக இருக்குமாறு அங்குச் சென்று ஒலித்தன. இத்தகைய மருத நிலங்களால் மேம்பட்டது பாண்டிய நாடு " என்பதாம்.

நிற்க. பண்டைப் பாண்டியரது தலை நகராகிய மதுரையைப் பற்றி இப்போது சிறிதாராய்வோம். " ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் " என்னும் முதுமொழிக்கு இலக்காகாமல் மதுரை நகர் தனக்கு அணித்தாய் வையை நதியைக் கொண்டுள்ளது. அவ்வாற்றுப் படுகைகளில் மணற்குன்றுகள் மிகுதியாயிருந்தன. அவற்றில் செழிப்பாகவும் நெருக்கமாகவும் வளர்ந்திருந்த பலவகை மரங்கள் கண்ணுக்கினிய காட்சியை அளித்தன. அவற்றில் கோங்குமரங்கள் மிகுதியாயிருந்தன. அம்மரங்களின் பூக்களும், ஆங்குச் செழித்தோங்கியிருந்த பிற மரங்களின் பூக்களும் ஆற்று நீரில் மாலை மாலையாய் மிதந்து வந்தன. அப்பொழில்களிடத்து நீண்டகாலமாய்ப் **பாண்குடிமக்கள்** வாழ்ந்திருந்தனர்.

வையை யாற்றுப் **புது நீர் விழா** பண்டைக் காலத்தில் மிக்க விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. சிலப்பதிகாரம், பரிபாடல் முதலியவற்றில் அதனைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அவ்விழாக் காலத்தில் மக்கள் திரள் திரளாக வையை யாற்றுக்குச் செல்வர். அங்கு ஆரவாரத்தோடு ஆற்றில் குதித்து நீந்தி விளையாடுவர். சிங்கம், குதிரை, அன்னம் முதலியவற்றின் முகங்களைப் போன்ற முகப்புக்களை யுடைய படகுகளில் ஏறி அவற்றை நீரில் செலுத்திக் களிப்பர்.

ஆற்றிற்கும் நகர்க்கும் இடையில் தவசிகள் வாழும் **புறஞ்சேரி** ஒன்று உண்டு. கோவலனும் கண்ணகியும் கௌந்தியடிகளைத் துணைக்கொண்டு புகார் நகரினின்று புறப்பட்டு மதுரையை அடைந்தபோது முதல்முதல் இப் புறஞ்சேரியில் தங்கினர். அப்போது அது துறவிகள் வசிக்குமிடமாகையால் இல்லறத்தாராகிய கோவலனும் கண்ணகியும் அங்கு இராத் தங்கலாகாது என்று கௌந்தியடிகள் கூறினர். பிறகு அங்கு **ஆரியாங்கனைக்**குப் பாற்சோறு படைத்துப் பூசித்துவிட்டு வந்த **மாதரி** என்னும் இடைக்குல மாதினிடம் கோவலனையும் கண்ணகியையும் கௌந்தியடிகள் அடைக்கலமாகக் கொடுத்தார்.

புறஞ்சேரியை அடுத்து அகழியும் புறமதிலும் இருந்தன. அந்த அகழி மண்ணுள்ள அளவும் ஆழ்ந்தது. அதன் நீர் நீலமணிபோல விளங்கியது. கோட்டையை முற்றுகையிடுதலாகிய **உழிஞைப் போர்** புரிய வந்த பகை வேந்தர், போரில் வெற்றிபெற்று **மண்ணு**

**மங்கலம்** என்னும் வெற்றி விழாவைக் கொண்டாட இயலாதவாறு அவ்வகழி தடுத்து வந்தது. புறமதிலோ தேவருலகைத் தீண்டுமாறு உயர்ந்திருந்தது. பல கற் படைகள் அதிலமைந்திருந்தன. அதிலமைந்திருந்த வாயில்கள் மிகப் பழையனவாய் நெடுங்காலமாகப் பகைவரால் சிதைக்க இயலாதனவாய் இருந்தன. அவற்றில் தெய்வங்கள் நிலை நிறுத்தப்பெற்றுப் பூசிக்கப் பெற்று வந்தனவாதலின், அப்பூசைக் காலங்களில் நெய்யிடப் பெற்ற காரணத்தால் அவை கருமை நிறம் பெற்றிருந்தன. அவ்வாயில்களின் மீது அமைந்த மாடங்கள் மேகமுலாவும் மலைகளைப் போல உயர்ந்து விளங்கின. அவ்வாயில்களின் வழியாக மனிதரும் விலங்குகளும் வையை யாற்று நீரைப்போல இடை விடாது சென்ற வண்ணமிருந்தனர்.

மதுரை நகரில் பல தெருக்களிருந்தன. அவை வையை யாற்றையும் அதன் இருகரைகளையும் ஒத்து இடையே நீண்ட வழியும் இருபுறங்களிலும் உயர்ந்த இல்லங்களும் பொருந்தியனவாய் இருந்தன. அத் தெருக்களில் முரசொலி புயற்காற்றால் முழங்கும் கட லொலிபோல ஒலித்தது. அவ்வொலி நாட்டவர்க்கு விழாவினை யறிவிக்க எழுப்பிய ஒலியாம். மற்றும் அங்கு எழுப்பப்பட்ட பல இசைக் கருவிகளின் ஒலிகள் குளத்து நீரில் மக்கள் கைகளால் அடித்து ஓசை எழுப்பி விளையாடுவதை ஒத்திருந்தன.

மதுரையில் **நாளங்காடி**, **அல்லங்காடி** என இரண்டு கடைத் தெருக்கள் இருந்தன. நாளங்காடி யில் பகலில் வியாபாரம் நிகழும். அல்லங்காடியில் இரவில் வியாபாரம் நடக்கும். அவ்விரண்டும் அழகிய

சித்திரங்களைக் கண்ணுற்றாற் போன்ற தோற்ற மளித்தன.

மதுரை நகர்த் தெருக்களிலிருந்த மாளிகைகள் மிக உயர்ந்தவை. அவற்றில் பற்பல கொடிகள் மலைகளினிடத்து அசைந்தாடும் அருவிகளைப்போல அசைந்தாடின. அவற்றுள் சில தண்டத் தலைவர் போர்களில் பெற்ற வெற்றிகளைக் குறிப்பனவாகும். சில கல்வி, தவம், கொடை முதலியவற்றில் சிறந்து விளங்குவதைக் குறிப்பதற்காக உயர்த்தப்பட்டவை. அத்தெருக்களிடத்துச் சுழன்று திரிந்த மதயானைகள் கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பெற்ற மரக்கலங்கள் புயற்காற்றால் அலைப்புண்டு சுழல்வதை ஒத்திருந்தன. அக்களிறுகளை யடக்குவார் அவற்றின் முன்னும் பின்னும் சங்குகளை ஒலித்துக் கொண்டு சென்றனர்.

அந்நகரத்து வீதிகளில் செல்லும் தேர்கள் பல நிறக் குதிரைகள் பூட்டப்பெற்று, அன்னப் பறவைகள் நீரினைப் பிளந்துகொண்டு செல்லுவன போலச் சென்றன. இன்னும் அத்தெருக்களில் குதிரைகளைப் பயிற்றுவோர் அவற்றிற்கு ஐந்து நதிகளையும் பதினெட்டுச் சாரிகளையும் பயிற்றுதலால் அவற்றின் குளம்புகள் அழுந்தின சுவடுகள் பற்பல ஒழுங்குகளில் அமைந்திருந்தன. மற்றும் அத்தெருக்களில் மதயானை போன்ற வீரர் போரிட்டவாறு செல்லும் ஆரவாரமும் மிகுந்திருந்தது. பின்னும் அழகிய பூந்தட்டுக்களில் பற்பல சிறிய வணிகர் பூமாலைகள், பண்ணியாரங்கள், வாசனைப் பொடிகள், வெற்றிலை பாக்கு முதலியவற்றை ஏந்தி அங்குமிங்கும் திரிந்து அலுத்து ஆங்காங்குள்ள மாடங்களின் நிழல்களில் தங்கியிருந்தனர்.

மதுரைமா நகரில் பற்பல தெய்வங்கட்குக் கோயில் கள் அமைந்திருந்தன. அவற்றுள் **சிந்தாதேவி கோயில்** என்பது ஒன்று. அது கலைமகளின் கோயி லாகும். அங்கு **ஆபுத்திரன்** என்னுமொருவன் தங்கி, அத்தேவியினருளால் பெற்ற **அமுதசுரபி** என்னும் பிச்சைப் பாத்திரத்தின் உதவியால் குருடர், செவிடர், முடவர், திக்கற்றோர், வறுமையாளர் முதலியவர்களுக்கு அன்னமளிப்பதாகிய அறஞ் செய்தவாறு இருந்தான். அவன் பெற்றிருந்த அப்பாத்திரத்தினின்று உணவு எடுக்க எடுக்கக் குறையாத தன்மை வாய்ந்திருந்தது.

நிற்க. கடைச் சங்க காலத்துப் பாண்டிய வரசருள் தலை சிறந்தவன் **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்பவனாவான். இவனை **மாங்குடி மருதனார்**, **நக்கீரர்** முதலிய பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். பத்துப் பாட்டில் **மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை** என்னும் இரண்டு பாடல்களும் இவன்மீது பாடப்பட்டவைகளாம். இவைகளைத் தவிர இவனைப்பற்றிப் பல புலவர்கள் பாடிய பல பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. இள வயதிலேயே வீரமும் கல்வியும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பெருமை யுடையவன் இவன். இவன் எக்காலமும் போரிட்டவண் ணமாகவே இருந்தான் என்றும், சேர சோழரையும், வேளிர் பலரையும் வென்றான் என்றும் நூல்கள் வாயி லாக அறிகின்றோம். இவனது வரலாற்றை விரிவாக இதன் பின்னர்க் காண்போம்.

## 2. செழியனது பிறப்பும் இளமைப் பருவமும்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடிகளுள் ஒன்றாகிய பாண்டியர் குடியில் கடைச்சங்க காலத்தில் **நன்மாறன்** என்றொரு மன்னன் தோன்றினான். கோவலனை ஆராயாது கொல் வித்தவனாகிய ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் மதுரையில் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் இந் நன் மாறன் **கொற்கையில்** இளவரசனாக ஆண்டுகொண் டிருந்தான். கண்ணகி வழக்குரைத்தகாலை தன் செங்கோல் கோடியதை உணர்ந்து செழியன் அரசு கட்டிலின்று கீழே வீழ்ந்திறந்தான். இச்செய்தியை யறிந்த நன்மாறன் கொற்கையினின்று மதுரைக்கு வந்து மதுரை யரசைக் கைக்கொண்டான்.*

நன்மாறன் சிறந்த வீரன்; கொடையாளி; பொய்யே யறியாதவன். இவன் முத்து மாலைகள் அணிந்த அழகிய மார்பை யுடையவன் என்றும், முழங்கால் வரை நீண்ட கைகளை யுடையவன் என்றும் **மதுரைக்**

---

*இவனே சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன். 'சித்திர மாடத்துத் துஞ்சிய' என்றால் 'சித்திரமாடத்தில் இறந்த' என்பது பொருள். சித்திர மாடமாவது சித்திரங்கள் தீட்டப்பெற்ற மாளி கையாம். இவன் தனது அரண்மனையைச் சார்ந்த சித்திரமாளிகை யில் எக்காரணத்தாலோ இறந்துபட்டிருக்கலாம். அன்றிச் 'சித் திரமாடம்' என்பதற்கு 'அழகிய மாளிகை' எனப் பொருள் கொண்டு, தனது அழகிய அரண்மனையில் இயற்கை மரணம் எய்தி னான் எனவும் கொள்ளலாம்.

கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இவனைக் குறித்துப் புகழ்ந்து பாடியிருக்கிறார். இன்னும் அவர், இவன் யாவர்க்கும் அருள்புரிபவன் என்றும், பகைவரோடு போரிட்டு வென்று விளங்குதலில் ஞாயிறு போன்றவன் என்றும், பரிசில் கொடுத்து இன்பஞ் செய்தலில் திங்கள் போன்றவன் என்றும் கூறியிருக்கின்றார்.

இம்மாறனுக்கு நெடுநாள் புத்திரப் பேறில்லாதிருந்தது. அதனால் வருந்திய இவன் ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு முதலிய முப்பத்திரண்டு அறங்களையும் முறைப்படி நடத்தினன். ஆயினும் பயனில்லாது போயிற்று. அன்றியும் நாட்டில் கொடும் பஞ்சம் வந்துற்றது. மழையே யில்லா தொழிந்தது. ஆறுகுளங்கள் வறண்டன. விளை நிலங்களில் பசுமையே காணப்படவில்லை. நிலமெங்கும் பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்தது. எங்கும் 'சோறு! சோறு! தண்ணீர்! தண்ணீர்!' என்னும் கூக்குரலே மிகுவதாயிற்று. அது கண்ட நன்மாறன், "ஆ! என் செய்வேன்! எவ்வாறு உய்வேன்! குடிகட்கு ஆன பயம் ஐந்தும் போக்கி அறங் காப்பவன் அன்றோ அரசன்! இத் துன்பத்தை எங்ஙனம் நீக்குவேன்!" என்று வருந்தினான். இறுதியில் ஆன்றவிந்தடங்கிய சான்றோரை வருவித்து, அவர்கள்பால் தனக்குற்ற இன்னலைக் கூறி அதற்குச் செய்யத் தக்கது யாது என்று அவர்களை வினவினான். அவர்கள் தமதறிவின் திறத்தால் காலநிலையை நன்காராய்ந்து, "மன்னவ, மதுரை மூதூரின் மீது சினங் கொண்ட கண்ணகியின் கோபக் கனல் இன்னும் மதுரையை விட்டு நீங்கிற்றிலது. அப் பத்தினித் தெய்வத்தின் சினந் தணியுமாறு நீ விழா வெடுத்

தனேயாயின் யாவும் நன்மையாம்'' என்றனர். அங்ஙனமே விழா வெடுக்க முற்பட்டனன் மன்னவன்.

மன்னவனேவலால் வள்ளுவன் யானைமீது முரசேற்றி, "நாட்டவரே, நகரத்தவரே, கேண்மின்! கேண்மின்! பத்தினித் தெய்வத்தின் சினத் தீ இன்னும் தணிந்திலதாகையால் நமது நாட்டில் கொடிய வறகடம் வந்துற்றது. அதனுல் நம் மன்னர் அத்தெய்வத்திற்கு விழா வெடுக்க முற்பட்டனர். ஆதலின் நாட்டவர், நகரவர் ஆகிய யாவரும் தத்தம் இல்லங்களைத் தூய்மைப் படுத்தி அணிசெய்வீராக! மன்றங்களிடத்தும் தெருக்களிடத்தும் பழமணல் மாற்றிப் புது மணல் பரப்புக! தெருக்களைத் தூய்மைப்படுத்திக் கோலம்முதலியவற்ருல்அழகு செய்க! ஆங்காங்கு உரிய இடங்களில் பந்தரிட்டு, மகர தோரணங்களையும், பழுக்காயும் விழுக்குலையும் நாட்டி அலங்கரிக்க! பூரண கும்பங்களையும் பொலம்பாலிகைகளையும் உரிய இடங்களில் அமைக்க! யாவரும் தூய நீராடிப் புனைவன புனைந்து பூசுவன பூசித் தூய மனத்தோடு பத்தினிக் கடவுளின் கோயிலை யடைந்து வழிபடுமின்! ஆடல் பாடல்களின் இனிய ஓசை நகரெங்கும் நாடெங்கும் மேம்பட்டு எழுவதாக!'' என்று கூவி முரசறைந்தனன்.

அது கேட்டு யாவரும் விழாக் கொண்டாடத் தொடங்கினர். எங்கும் விருந்து! எங்கும் ஆடல் பாடல்! எங்கும் மகிழ்ச்சி! எங்கும் தூய்மை! எங்கும் அழகு! எங்கும் தெய்வ பூசை! எங்கும் பத்தினிக் கடவுள் வழிபாடு! பட்டி மண்டபங்களில் சொற்போர்! பந்தய விளையாட்டிடங்களில் விற்போர், வாட்போர், மற்போர்!

ஆடரங்குகளில் ஆடல் பாடல்! அத்தாணி மண்டபங் களில் அரிய தமிழாராய்ச்சி! இங்ஙனமாக நகர முழுவதும் சில நாட்களுக்குக் கொண்டாட்ட ஆரவாரம் மிகுந்தது.

விழா முடிவில் மழை சோவெனப் பொழிந்தது. ஆறு குளம் முதலிய நீர் நிலைகள் நீரால் நிரம்பின. அவற்றில் வாடி மண்ணோடு மண்ணாய்க் கிடந்த கொட்டியும், ஆம்பலும், நெய்தலும், தாமரையும் செழித்துத் தலைதூக்கி மலர்களாகிய தமது முகங்களைக் காட்டித் தமது மகிழ்ச்சியை அறிவித்தன. நீரற்றமை யால் வேற்று நாடுகளுக்குச் சென்றிருந்த நீர்ப்பறவைக ளாகிய அன்னம், தாரா, நீர்க்கோழி முதலியவை மீண்டு வந்து தமது பழைய இருப்பிடங்களை அடைந்து இன்புற்றன.

இங்ஙனம் நாடு நலமுற்ற சில காலத்திற்கெல்லாம் மகப்பேறில்லாது வருந்திய நன்மாறனுக்கு ஒரு நன் னாளில் ஒரு மகன் பிறந்தான். அக்காலை நிமித்திகர் கோள்கள் நின்ற நிலையை ஆராய்ந்து, "இம்மகன் பிற்காலத்தில் சிறந்த வெற்றி வீரனாய்ப் பல அரசரை வென்று உலக முழுதும் ஒரு குடைக் கீழ் ஆளுவான்" என்றனர். பெரியோர் அவனுக்கு **நெடுஞ்செழியன்** எனப் பெயரிட்டனர்.

குழந்தையாகிய நெடுஞ்செழியன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலானான். தனது இனிய நகைமுகத்தாலும் மழலைச் சொல்லாலும் யாவரையும் மகிழ்வித்தான். இன்னும் குறுகுறு நடந்து. சிறுகை நீட்டி, உணவுக் கலங்களில்

உள்ள உணவை இட்டும், தொட்டும், கௌவியும், துழாவியும், உடம்பிற் படுமாறு வீசி எறிந்தும் பெற்றோருக்குத் தெவிட்டா இன்ப மூட்டினன்.

இங்ஙனமாக ஐந்தாண்டுகள் நிரம்ப, பெற்றோர் அவனுக்குக் கல்வி கற்பிக்க முற்பட்டனர். மதுரை மூதூர்க்குச் சிறிது தொலைவில் வையை யாற்றங்கரையில் அழகியதொரு பொழிலிடத்து, தூய வாழ்க்கையிலீடுபட்டு வாழ்நாளைப் பயனுடையதாகச் செய்துவந்த **வேள்முருகனார்** என்பவர்பால் நெடுஞ்செழியன் கல்வி கற்க விடப்பட்டான். அவ்வாசிரியர் அறிவுக் கலை, எழிற் கலை, நுண் கலை, போர்க் கலை முதலியவற்றில் சிறந்து விளங்கியவர். அவரிடம் கல்வி கற்குமாறு பல்வேறிடங்களினின்று பற்பல மாணவர் வந்திருந்தனர்.

அப்பெரியாருக்குக் **கார்வண்ணன்** என்றொரு மகன் உண்டு. அவன் நெடுஞ்செழியனோடு ஒத்த வயதுடையவனாயிருந்தான். செழியன் ஆசிரியரையடைந்ததுமே கார்வண்ணன் அவனுக்கு நண்பனாயினன். தன்மகன், ஆசான் மகன், மன்னன் மகன், பொருள் நனிகொடுப்பேன், வழிபடுவோன், விரைந்து கற்கும் ஆற்றலுடையவன் ஆகியோர்க்கு நூல்களைக் கற்பிக்க வேண்டும் என்பது விதி. ஆதலால் வேள்முருகனாரும் அத்தகைய தமது மாணவர்க்குத் தாம் கற்ற கல்வியை ஒளிக்காது மனமுவந் தளிப்பாராயினர்.

அன்னத்தைப் போலும், ஆவினைப் போலும் திறம் வாய்ந்த தலை மாணாக்கராகிய நெடுஞ்செழியன், கார்வண்ணன் ஆகிய இருவரும் ஆசிரியர் பாடஞ்

சொல்லுங்காலே, பொழுதொடு சென்று வழிபட்டு, ஆசிரியரது குணத்தொடு பழகி அவரது குறிப்பிற் சார்ந்து, இரு என இருந்து, சொல் எனச் சொல்லி, செவி வாயாக நெஞ்சு களனுகக் கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்துக் கொள்வர். பிறகு பாடம் போற்றுவர்; கேட்டவை நினைப்பர்; ஐயமுற் றவைகளை ஆசானை அடைந்து அமைவரக் கேட்பர்; தம்மை யொத்த மாண்புடைய மாணவரோடு பயில்வர். ஒருவரையொருவர் வினவுவர்; வினய வற்றிற்கு விடை யிறுப்பர். இங்ஙனமாக நன்கு பயின்ற தால் அவர்களது கல்வி வளர்மதி போல நாளும் வளர்வதாயிற்று. நாளாக ஆக, நெடுஞ்செழியனுக்கும் கார்வண்ணனுக்கும் நட்பு முதிர்வதாயிற்று. சிறிது காலத்திற்கெல்லாம் கார்வண்ணன் நெடுஞ்செழிய னுக்கு உயிர் நட்பினன் ஆயினன்.

# 3. சேர சோழர் சூழ்வு

கொல்லிமலைச் சாரலில் வலிய அரண் ஒன்றில் காவலையுடையதோர் அறையில் மூவர் ஒரு புறமும், மற்றொருவர் அவர்க்கு எதிர்ப்புறமுமாக உயர்ந்த இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். அவ்வறை உயரமும் திண்மையுமுடைய சுவர்களையுடையதாய், உள்ளிருப்பாரை வெளியிலிருப்பார் காண இயலா வகையில் வளைந்த சாளரங்களையுடையதாய் இருந்தது. அது இரகசிய மந்திராலோசனைக்குரிய இடமாகும். அங்கிருந்த நால்வருள் ஒருவர் சேரவரசராகிய **கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை** என்பவர். அவருக்கு இருபுறங்களிலும் அமர்ந்திருக்கும் இருவர் முறையே அவரது அமைச்சரும் தானைத் தலைவருமாவர். இம் மூவருக்கும் எதிரிலமர்ந்திருப்பவர் சோழவரசர். அவருள் முதல் முதல் சோழவரசர் சேரவரசரை நோக்கி, "நண்பரே, இங்கென்னை வருமாறு அழைத்தன் காரணம் யாதோ?" என்றார்.

**சேரமான் :** காரணமின்றிக் காரியம் நிகழுமோ? அமைச்சரே, ஒற்றர் கொணர்ந்த செய்தியைக் கூறுவீர்.

**அமைச்சர் :** பாண்டியர் நன்மாறர் அவரது அரண்மனையிலுள்ள சித்திர சாலையில் சிறந்த ஓவியக்காரரைக் கொண்டு பழஞ் சித்திரங்களைப் புதுக்கியும், புதிய சித்திரங்கள் பலவற்றைத் தீட்டுவித்தும் அச்சாலையைப் புதுப்பித்தனர். பின்னர் அவர் அதனைப் பார்வையிட்டு வருங்கால் திடீரெனக் கீழே விழுந்து இறந்துபட்டனராம். இதுவே செய்தி.

**சோழர் :** ஆ! அங்ஙனமா? அவர் தமது அரண் மனையில் இயற்கை மரணம் எய்தினர் என்றன்றே கேள்வியுற்றேன்!

**சேரர் :** அவர்கள் அங்ஙனமே கூறி வருகின்றார் கள். ஆயினும் உண்மையில் நிகழ்ந்த செய்தி இதுவே.

**சோழர் :** நன்று. அதற்கும் இங்கு என்னை வர வழைத்ததற்கும் தொடர்பு யாதோ?

**சேரர் :** தொடர்பு உண்டு. கூறுவேன், கேட்பீர்: பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியனும், அவனுக்குப் பின்னர் வந்த இந் நன்மாறனும் எம்மைச் சிறிதும் மதித்தனரில்லை. எம்மைப் பற்றி இகழ்ந்து பேசியதாகக் கேள்வியுற்றேம். வடவாரியரை வென்றேமென்ற செருக்கால் முடம் பெற்றான் முன்ன வன். பின்னவனே தன்னை யெதிர்ப்பார் எவருமிலர் என்று தருக்கி நின்றான். அதனால் யான் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கத் துணிந்தேன். அதற் காகவே சிறந்த ஒற்றர்களையும் அங்கு அனுப்பி வைத் தேன். அதனாலன்றே இச்செய்தி தெரியவந்தது? இந் நிலையில் இப்போது இவன் இறந்துவிட்டான். அன்றி யும் சில மாதங்களுக்கு முன் இவனது தானைத் தலைவ ருள் முதல்வனாகிய **ஏனாதி பால்வண்ணனும்** இறந்து பட்டான். போர்வன்மையிலும் சூழ்ச்சியிலும் வல்லவ னாகிய அத் தானைத் தலைவனும் அரசனும் இறந்து விட்டனராகையால் இப்போது பாண்டிய நாட்டை எளிதாகக் கைப்பற்றிவிடலாம் என்று தோன்றுகிறது. ஆயினும் வெற்றி நிச்சயமாகக் கிட்ட வேண்டும் என்

னும் கருத்துடனே நுமது துணையை நாடி நும்மை இங்கே வரவழைத்தேன்.

**சோழர் :** அரசராவார் "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்னும் பொது விதிக் கிணங்க அடங்கியிராது, மாற்றார்மேல் படையெடுத்துச் சென்று அவர்களை வென்று வலியால் மேம்பட வேண்டும் என்னும் சிறப்பு விதிபற்றி, நீவிர் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்க எண்ணியது சரியே. யானும் இவ்வாறு எண்ணியதுண்டு. ஆயினும் ஒன்று: எதனையும் நன்காலோசித்தே செய்ய வேண்டும். பாண்டியவரசரும் பால்வண்ணரும் இறந்து பட்டனரேனும் அங்குச் சிறந்த தானைத் தலைவரும், சூழ்ச்சித் திறன் வாய்ந்த அமைச்சரும் இல்லாது போக வில்லை. அங்கு முதலமைச்சராயுள்ளவர் மிக்க திறமை வாய்ந்தவர். தன் வலியும், மாற்றான் வலியும், படைவலியும், துணை வலியும் தூக்கிச் செயல் புரிய வேண்டும். நுண்ணிய கருமமும் எண்ணித் துணிதல் வேண்டும். அதற்கேற்ப நீவிர் எம்மைத் துணையாகக் கொள்ளத் துணிந்ததும் சரியே. நிற்க. நுமது போரேற்பாடுகள் எம்மட்டிலுள்ளன ?

**சேரர் :** போரேற்பாடுகள் பெரும்பாலும் முடிந்து விட்டன. ஆயினும் அடுத்துச் சின்னாளில் வரும் **ஓண நன்னாள் விழா** முடிந்த பின்பே போரைத் தொடங்க வேண்டும். அது நிற்க. நீவிர் ஏதேனும் போரேற்பாடுகள் செய்துள்ளீரோ ?

**சோழர் :** பிற நாட்டின்மீது படையெடுக்க என்னிடம் எப்போதுமே பெரும்படை சித்தமாக உண்டு.

ஆயினும் படையெடுக்கப் புகுமுன் சில்லறை ஏற்பாடு கள் சில செய்தல் வேண்டும். நீவிர் ஓண நன்னுட்குப் பின்பே படையெடுத்தல் வேண்டும் என்பதால் அதற் குள் அச்சில்லறை ஏற்பாடுகளையும் முடித்துவிடுதல் கூடும்.

**சேரர் :** நன்று. தானைத் தலைவரே, போரை நடத்தும் முறை பற்றி ஆலோசித்து விரைவில் ஒரு முடிவு கூறுவீராக. நமது படையும் சோழர் படையும் ஒன்றுகூடிப் பாண்டிய நாட்டை மேற்குப்புறமிருந்து தாக்குதல் நலமென்றெண்ணுகிறேன். நும் கருத்து யாதோ?

**தானைத் தலைவர் :** இரு படைகளும் ஒன்றுகூட முயற்சிக்குங்கால் பகைவர் ஒற்றர் மூலம் செய்தி யறிந்து எச்சரிக்கையாகி அம்முயற்சியைத் தடுத்து விடுதல் கூடும். சோழ நாட்டுக்கும் நமது நாட்டுக்கும் இடையேயுள்ள மலைப்பாங்கான இடம் பகைவர் ஒளிந் திருந்து பாண்டியர் படையைச் சிதைப்பதற்குத் துணை புரியும். ஆதலின் தனித்தனியாக எதிர்ப்பதே நல மென்றெண்ணுகிறேன்.

**சேரர் :** ஆம்; அது சரியே. எமக்கோரெண்ணம் தோன்றுகிறது: ஒரே காலத்தில் நாம் மேற்கிலிருந்தும், சோழர் வடக்கிலிருந்தும் பாண்டிய நாட்டைத் தாக்கி ஞல் விரைவில் அது பணிந்துவிடும் என்றெண்ணு கிறேன்.

**தானைத் தலைவர் :** ஆம்! அதுவே தக்கது. அதுவே தக்கது!

**சோழர் :** நன்று. அது நிற்க. வெற்றி கிட்டிய பின் நாட்டை நமக்குள் எவ்விதம் பங்கிட்டுக் கொள்வ தென்பதைப் பற்றி இப்போதே ஓர் முடிவுக்கு வருதல் நலமென்றெண்ணுகிறேன். பின்னர் நமக்குள் சச்சர வேற்படாமலிருக்க வேண்டுமன்றோ ?

**சேரர் :** ஆம். அதுவும் ஆலோசிக்க வேண்டி யதே. ஒன்று தோன்றுகிறது: அவரவர் வேறு வேறு திசைகளினின்று படையெடுப்பதால் அவரவர் வென்று கொண்ட பகுதிகள் அவரவரைச் சார்ந்தனவாகக் கொள்ளலாம்.

**சோழர் :** நன்று. அது நேர்மையே. அவரவர் முயற்சிக்கும் வலிமைக்கும் தக்கவாறு பயனும் கிட்டு கின்றது. அது நிற்கப் படையெடுத்தற்குரிய நாளையும் இப்போதே குறித்து விடுதல் நலமென்றெண்ணு கின்றேன்.

**சேரர் :** அதுவும் சரியே. அங்ஙனமே செய் வோம். அமைச்சரே, நமது நிமித்திகரை இங்கு விரைந்து வரச் செய்வீர்.

**அமைச்சர் :** இங்ஙனம் நேரக்கூடு மென்றுன் னியே முன்னெச்சரிக்கையாக அவரை வரவழைத்து ஈண்டழைக்கத் தக்காரை இருக்கச் செய்தற்குரிய அறையில் இருக்கச் செய்துள்ளேன். இதோ காவ லனை விளித்து அழைத்துவரச் செய்கின்றேன்.

இவ்வாறு கூறி அமைச்சர் எழுந்து சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவரும் நிமித்திகரும் அங்கு வந்து சேர்ந்தனர். உடனே சேரர் அந்நிமித்திகரை ஓர் இருக்கையில் அமரச் செய்து அவரை நோக்கி,

"நிமித்திகரே, யாம் இதுபோது சோழவரசருடன்கூடிப் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கக் கருதியுள் ளோம். ஒரே நாளில் யாம் மேற்கிலிருந்தும், அவர் வடக்கிலிருந்தும் தாக்க வேண்டும். அதற்குரிய நன் ளை விரைவில் தேர்ந்தெடுப்பீராக!'' என்றார்.

நிமித்திகர் கையோடு கொணர்ந்திருந்த பஞ்சாங்க ஏடுகளைப் புரட்டினார். ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல்விட்டு எண்ணினார். செவ்வாய் நான்காமிடம், குரு எட்டாமிடம், சூரியன் ஐந்தாமிடம், சனி செவ்வா யைப் பார்க்கிறான், செவ்வாய் சூரியனைப் பார்க்கிறான், இருவரும் சேர்ந்து குருவைப் பார்க்கிறார்கள் என்று ஏதேதோ முணுமுணுத்தார். சிறிது நேரம் வானத்தை நோக்கினார். சிறிது நேரம் தலைகுனிந்து பேசாதிருந் தார். பிறகு பக்கவாட்டில் தலையை யசைத்தார். மீண் டும் ஒன்று, இரண்டு என்று எண்ணினார். மீண்டும் இராகு, கேது, சனி என்று ஏதோ முணுமுணுத் தார். முடிவில் இன்னும் ஆறு திங்களுக்கு நன்னா ளில்லை. ஆயினும் ஒன்று: அடுத்த மாதத்திற்கு அடுத்த மாதம் அமாவாசையன்று சில கோள்கள் ஒன்றுகூடு கின்றன. அப்போது மூன்றே முக்கால் நாழிகைக்கு ஒரு நற்காலம் தோன்றுகின்றது. அந்தக் காலத்தில் போர் தொடங்குதல் நலமென் றெண்ணுகின்றேன்.

**சோழர் :** ஆறு மாதத்திற்குப் பின்னர்ச் சிறந்த நன்னாள் உள்ளதோ?

**நிமித்திகர் :** அதனைப்பற்றி ஆராய்தல் வேண்டும்! வேண்டுமானால் ஆராய்ந்து கூறுகின்றேன்.

**சேரர் :** அது வேண்டா! விரைந்து செயலாற்று தலே தக்கதென்றெண்ணுகின்றேன். மூன்றே முக்கால்

நாழிகை போதாதா? அக்காலத்தில் **குடைநாட்கோளும், வாணுட்கோளுமா**கிய சடங்கைத் தொடங்கிவிடுவோம். நன்று. நிமித்திகரே, அந்நற்காலம் எம் இருவருக்கும் பொருந்துகின்றதன்றோ ?

**நிமித்திகர் :** ஆம்; பொருந்துகின்றது. அது நிற்க. அந் நற்காலத்தைப் பற்றிய விசேடச் செய்தியொன் றுள்ளது. அதனையும் கூறிவிடுகின்றேன். அதாவது, அம்மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளும் ஒரு நாழிகைப் பொழுது மிகச் சிறந்தது. அதற்குள் குடைநாட்கோள், வாள்நாட்கோள் தொடங்கிவிடின், வெற்றி கிட்டுதல் திண்ணம். அவ்வொரு நாழிகைப் பொழுது கழிந்து விட்டால் சிறந்த பெரிய வெற்றி கிட்டும் என்று சொல் வதற்கில்லை. ஆனால் எதிரியின் கதியும் அதுவே. மற்று இன்னென்றும் உண்டு: ஒருகால் எதிரியின் கையில் சிக்கினும் தப்பி விடுதல் நிச்சயமாம்.

**சேரர் :** சரி, சுருங்கக் கூறின் பெரிய வெற்றி கிட்டாவிடினும் பெரிய தோல்வியோ, கெடுதலோ நேராதென்று கூறுகின்றீர் ! அவ்வளவுதானே !

**நிமித்திகர் :** ஆம் ! அதுவே தான் !

**சேரர் :** அது கிடக்க! நமது நிமித்திகர் இது போது தேர்ந்து கூறிய நன்னாளிலேயே போரைத் தொடங்கிவிடுவோம். நண்பரே, நுமது கருத்து யாதோ?

**சோழர் :** எமது கருத்தும் அதுவே ! நம்மிருவர் படையும் சேர்ந்து தாக்கும்போது வெற்றிகிட்டாமல் போகாது.

இவ்வாறு கூறிச் சோழர் எழுந்தார். மந்திரா லோசனை முடிவுற்றது. யாவரும் தத்தம் அலுவலிற் சென்றனர்.

# 4. செழியனது வெளிநாட்டுச் செலவு

வேள்முருகனாரிடம் கல்வி பயின்றுகொண்டிருந்த செழியனுக்கு வயது பதினாருகியது. தமிழ்க் கல்வியிலும், மற்றும் யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், மற்போர், வாட்போர் முதலிய போர்க்கலைகளிலும், ஆடல் பாடல் முதலிய நுண்கலைகளிலும் செழியன் ஒப்புயர்வற்றவனாக விளங்கினான்.

இந்நிலையிலோர் நாள் திடீரெனத் தந்தையிறந்த செய்தி வந்துற்றது. அவர் சித்திரமாடத்து யாதொரு காரணமுமின்றி இருந்தாற்போலிருந்து இறந்துபட்டனர் என அமைச்சர் வந்தறிவித்தனர். உடனே இடி விழுந்தாற்போலவானான் செழியன். 'அப்பாவோ!' என்றலறினான்; "எந்தையே! என்னைவிட்டு நீங்கினீரோ! இனி என் செய்வேன்! எவ்வாறு உய்வேன்!" எனப் புலம்பியழுதான்.

உடனே அருகிலிருந்த ஆசிரியர், "குழந்தாய்! ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் மீளார். பிறந்தார் இறப்பது இயற்கையாம். ஆதலின் அறிவுடையோர் அதற்கு வருந்தார். நீ விரைந்து சென்று தந்தைக்குரிய ஈமக்கடன்களை முடித்து அரசையேற்றுக் குடிகளைக் காப்பாயாக!" என்றார்.

ஆசிரியரது தெளிவுரையால் ஒருவாறு தேறப்பெற்ற செழியன் விரைந்து அரண்மனை சார்ந்தான். தந்தைக்குரிய ஈமக்கடன்களை முடித்தான். அரசையேற்றான். அக்காலை ஆசிரியர் வேள்முருகனார் அவனுக்கு அறவுரை புகல்வாராய், "மாநிலங்காவல் என்பது

எளிதன்று. நாட்டில் மழை வளம் குறைந்தால் மிகுந்த அச்சம்; மக்கட்குத் தவறு நேர்ந்தால் அதனினும் மிகுந்த அச்சம்; மக்கட்கோர் குறையுண்டானால் அது மன்னவன் கோல் கோடியதால் உண்டாயிற்றென்றே உலகம் கூறும். ஆதலின் அரசர் குடியிற் பிறப்பது துன்பத்திற்குக் காரணமாகுமேயல்லாது இன்பந்தருவ தன்று. செங்கோல் வழுவாதவராயினும் உனது பாட்டனார் சிறியதொரு தவறுதலால் கோல் கோடி உயிர் நீத்தார். இதனை மனத்துட் கொண்டு எப் போதும் செவ்விய நெறியிலேயே செல்வாயாக!" என்றார்.

அது கேட்ட செழியன் அவரையும், மற்றும் அரு கிருந்த அமைச்சர், புலவர் முதலானோரையும் நோக்கி, "ஐயன்மீர், யானோ சிறியன். அரசியலைப்பற்றியோ உலகியலைப்பற்றியோ அறிவு நிரம்பப் பெறாதவன். இந் நிலையில் குருவியின் தலையில் பனங்காயை வைத்தாற் போல் என் பிடரியில் இந்நிலவுலகத்தைக் காக்கும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. ஆதலின் இக்காவற் சாகாட்டைச் செலுத்தும் வகையில் எனக்குத் துணையா யமைந்து என்னை நன்னெறியிற் செலுத்துமாறு வேண்டுகின்றேன்!" என்றான். பின்னர் அவன் அரு கிருந்த முதலமைச்சரை நோக்கி, "உலகியலறிவு பெறு மாறும், நாட்டு நடப்புக்களை அறியுமாறும் நான் நமது நாட்டிலும், வேற்று நாட்டிலும் மாறு வேடத்திற் பிர யாணம் செய்து வர விரும்புகிறேன். அதுவரை நீவிர், யான் நாட்டிலில்லை என்னும் செய்தி வெளிவரா வகை யில் ஆட்சிப் பொறுப்பை யேற்று நடத்திவருக!" என்று

கூறி அவரிடம் அரசை ஒப்புவித்தான். அருகிருந்த சான்ருேரும் அது தக்கதே எனத் தமது உடன் பாட்டை யறிவிக்கச், செழியன் தனது பயணத்தைத் தொடங்கினுன்.

செழியன் பயணத்தைத் தொடங்கியதும், அவனது உயிர்த் தோழனுகிய கார்வண்ணனும் அவனுடன் சேர்ந்து புறப்பட்டான். இருவரும் குடி மக்கட்குரிய உடையணிந்து குதிரையேறிச் செல்லலாயினர். அவர்கள் வடக்கு நோக்கிச் செல்வாராய், வையையாற்றைக் கடந்து செழித்த வயல்கள் இருபுறமும் நெருங்கிய சாலை வழியாக இன்னுரையாடியவாறே பரிமாக்களை மெதுவாக நடத்திச் சென்றனர். அப்போது செழியன் கார்வண்ணனை நோக்கி, "நண்பா, இதோ இருபுறமும் கண்ணுக்கெட்டிய வரையில் வயல்களில் நெற்பயிர் விளைந்திருப்பதைப் பார். அது கட்டமிட்ட பச்சை இரத்தினக் கம்பளம் நிலத்தில் விரித்தாற் போன்று காணப்படவில்லையா?" என்ருன்.

**கார்வண்ணன் :** ஆம். அதோ, நீலவானில் வெள்ளிய முகில்கள் இடம் விட்டுவிட்டுப் படைபடையாய் அமைந்திருப்பது நீலக் கடலையும் அதில் சுருண்டுவரும் அலைகளையும் தோற்றுவிக்கின்றதன்ருே?

**செழியன் :** நன்று கூறினுய். இதோ, கரும்பு ஆட்டும் எந்திர ஓசையும், களையெடுப்பவரது குரவைக் குரலும் நமது மனத்தை ஈர்க்கின்றன. இதோ, இங்குள்ள பொய்கையில் தாமரைப் பூக்கள் தலை தூக்கி நின்று விளக்குச் சுடர்களைப் போலக் காணப்படுகின்றன. அம்மலர்களிலும், பொய்கைக் கரையில் உள்ள வேறு

செடிகளில் உள்ள மலர்களிலும் வண்டுகள் செய்யும் ஓசை இன்னிசை போல விளங்குவதைக் காண் !

**கார்வண்ணன் :** இங்குள்ள தண்ணிய பொழில்களிடத்து மயில்கள் ஆட, பொய்கைகளிடத்துத் தாமரைகள் தமது பூக்களாகிய விளக்குகளைத் தாங்கி நிற்க, மேகங்கள் முழவினைப் போல ஒலிக்க, குவளைகள் தம் பூக்களாகிய கண்களை விழித்து நோக்க, நீர் நிலைகளிடத்துத் தோன்றும் அலைகள் நடன வரங்கிற்குரிய திரைகளாய் அமைய, வண்டுகள் மருத யாழிடத்துத் தோன்றும் மருதப் பண்ணைப்போல இசைபாட, இங்கு மருதமென்னும் அரசன் வீற்றிருந்து நாடக வரங்கில் நிகழும் நடனத்தைக் காண்பதுபோலத் தோன்றும் அழகினைப் பார்.

**செழியன் :** நண்பா, மருதநிலப் பண்பை உள்ளது உள்ளபடி மனத்தில்சித்திரித்துக்காட்டிவிட்டாயே! அது நிற்க. இவ்வழகுகளில் ஈடுபட்டுப் பொழுதைப் போக்கி விட்டோம். நாம் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டுமன்றோ ? பரிகளை விரைந்து செலுத்துவோம்.

பிறகு இருவரும் குதிரைகளை நாலு காற் பாய்ச்சலில் செல்ல விட்டனர். அதனால் இருபுறங்களிலுமுள்ள மரங்களும் புதர்களும் ஆகிய நிலையியற் பொருள்கள் இயங்கியற் பொருள்களாய் அவர்கள் செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் விரைந்தோடத் தொடங்கின. மேலும் அப்போது அக் குதிரைகளின் காலடிகள் தமக்குக் கீழ் உள்ள சாலையை விழுங்கிக் கொண்டே ஓடுவதுபோலக் காணப்பட்டது.

இவ்வாறு அவர்கள் சில நாழிகைப் பொழுது விரைந்து செல்ல உச்சிப்பொழுது நெருங்கியது. வழியில் அப்போது நீர் நிறைந்த ஏரி ஒன்று காணப்பட்டது. அதன் கரையிலோர் இடத்தில் ஆலமரங்கள் உயர்ந்தோங்கி வளர்ந்திருந்தன. குளிர் தூங்கும் பரப்பினையுடைய அவ்வேரிக்கரையில் குளிர்நிழலைத் தந்த அவ்விடம் அருள் விளங்கும் ஆன்றோர் மனத்தைப் போலக் காணப்பட்டது. அது கண்ட செழியன், "வெய்யோனது வெம்மை தீருமளவும் நாம் இங்கிருந்து இளைப்பாறிப் பின் பயணத்தைத் தொடங்குவோம்!" என்றான். கார்வண்ணனும் அதற்கிசைய, அவர்கள் அங்குப் பரிமாக்களை விட்டிறங்கி, அவ் வேரியில் நீராடி உணவுண்டு அவ்வாலமர நிழலிற் படுத்துறங்கலாயினர்.

அவர்கள் உறக்கம் நீங்கி எழுந்து நோக்க இருபத்தைந்து நாழிகைப் பொழுதாகியிருந்தது. உடனே மீண்டும் பயணமாயினர். குதிரைகளை விரைந்து பாய்ந்தோடச் செய்தனர். அப்போது அவர்கட் கெதிரில் தொலைவில் உயர்ந்து நீண்டுருண்டதொரு குன்று காணப்பட்டது. அதன் தோற்றம் மதயானை படுத்துக் கிடப்பதுபோல விருந்தது. அது கண்ட கார்வண்ணன், "அதோ தோன்றும் குன்று சற்றுத் தொலைவிலுள்ளதேயாயினும் மாலைப்பொழுதிற்குள் அதனை யடைந்து விடலாமென் றெண்ணுகிறேன். அதனருகில் ஊரொன்று உள்ளது. இன்றிரவு அங்குத் தங்குவோம்!" என்றான். செழியனும் 'சரி' என்ன, இருவரும் பின்னும் சற்று விரைந்து பரிமாக்களைச் செல்ல விட்டனர். அப்போது மருத நிலம் மறைந்து முல்லை

நிலம் காணத் தொடங்கியது. நிலம் வர வர மேடா யிற்று. விசாலமான புல் வெளிகள் காணப்பட்டன. இடையிடையே முட் புதர்களும் கற்பாறைகளும் ஆங் காங்குத் தோன்றின. அப்பாறைகளை யடுத்துக் கொன்றை, காயா, குருந்தம் முதலிய மரங்கள் காணப்பட்டன. அப்போது செழியன் கார்வண்ணனை நோக்கி, "நண்ப, இதோ, இப் பாறைகளின் மீது அவற்றை யடுத்து வளர்ந்துள்ள கொன்றை மரங் களின் பூக்கள் பொன்னிறப் பாயைப் பரப்பினாற்போல விளங்கும் அழகினைப் பார்!" என்றான்.

**கார்வண்ணன் :** இதோ, இப் பாறைகளினிடை யில் தோன்றும் இக்குட்டையில் தெளிந்த நீர் நீலமணி போல விளங்க, அதன் கரையில் தொய்யிற் கொடி யுடனே நெய்தற் பூக்கள் தோன்றும் அழகினை நோக்கு வாய். மற்றும் இதோ, ஒருசார் முல்லைக் கொடி அரும்புகளோடு கூடி அருகிலுள்ள மரத்தினை அணைந்து நின்று அசைந்தாடுகின்றது. அது முல்லை நிலம் உன்னைப் புன்முறுவலோடு மகிழ்ந்தழைப்பது போலவன்றோ காணப்படுகின்றது.

**செழியன் :** அது கிடக்க. அதோ, தொலைவில் ஊர் காணப்படுகின்றது. இங்கு வழி இரண்டாகப் பிரி கின்றது. இப்புறமாகச் செல்லும் வழியில் அதோ, சிறிது தொலைவில் பொழில் ஒன்று காணப்படுகின்ற தன்றோ? யான் அங்குச் சென்று தங்கியிருப்பேன். நீ இதோ, ஊர்ப்புறமாகச் செல்லும் பிரிவின் வழியா கச் சென்று ஊரையடைந்து நாம் இன்றிரவு தங்குதற் குரிய இடத்தைச் சித்தம் செய்து அங்கு வருக!

செழியன் இவ்வாறு கூறக் கார்வண்ணன் அவனைப் பிரிந்து சென்றான். அப்போது மாலைப்போது நெருங்கியது. கதிரவனது பொன்னிறக் கதிர்கள் பரிசவேதி போலத் தோட்டத்தை யெல்லாம் பொன்னாக்கின. செழியன் தான் குறிப்பிட்ட வழியே சென்று பொழிலை யடைந்தான். அவன் அவ்விடத்தை யடைந்ததும் ஆங்கோர் பொய்கை அவனை வரவேற்றது. அதன் கரையில் இடையிடையே செழித்து வளர்ந்த செடிகளிருக்கச் சுற்றிலும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற புல் தரை மெத்தெென விருந்தது. அதன் தெளிந்த நீரில் சில வாத்துக்கள் படகுகளைப் போல நீந்திச் சென்றுகொண் டிருந்தன. செழியன் அப் புற்றரையிலோரிடத் துட்கார்ந்து அவ்வாத்துக்கள் நீந்தும் அழகினைப் பார்த்தவா றிருந்தான்.

அப்போது அப் பொய்கையின் மற்றொரு புறத்தில் பன்னீராட்டைப் பிராயத்தளாகிய நங்கை யொருத்தி தோன்றிக் கரையில் நின்றவாறேநீரில் சிறிது தூரத்தில் தலைதூக்கியிருந்த குவளை மலரைப் பறிக்க முயன்றாள். செழியனிருந்த விடத்திற்கும் அவளிருந்த விடத்திற்கும் இடையில் செடியொன்றிருந்ததாலும், அவள் தன் காரியத்திலேயே கண்ணுயிருந்ததாலும் செழியனை அவள் பார்க்கவில்லை. அவளது செவ்விய முகம் அப் பொய்கை நீரில் காணப்பட்ட தோற்றம், நீலவானில் முழுமதி விளங்கும் தோற்றத்தை ஒத்திருந்தது.

அவளைப் பார்த்த செழியன் தனக்குள், 'ஆ! இந் நங்கையின் எழில்தான் என்னே! இவள் விண்ணுலக மாதோ? அன்று அன்று! இவளது கால்கள் நிலத்தில் படிகின்றன. கண் இமைத்தல் செய்கின்றன.

ஆதலின் மண்ணுலக மடந்தையே யாவாள்! இவள் யார் மகளோ? இவளது முகம் இத்தெளிந்த நீரிடத்தே தோன்றுவது தூய வானில் நிறை மதி தோன்றுவது போலவன்றோ காணகின்றது! பாவம்! அம் மலரைப் பறிக்க இயலாது வருந்துகின்றாள்! யான் அதனைப் பறித்து அவளுக்களிப்பேன்,' என்று எண்ணினான். அவளை நோக்கி, "நங்காய், வருந்துதல் வேண்டா! அப் பூவை யான் உனக்குப் பறித்துத் தருகின்றேன்" என்று கூறியவாறு அருகிற் சென்றான்.

செழியனது குரல் கேட்ட நங்கை தன் வேலையை விட்டு அவனை நோக்கினாள். அவனது பெருமிதத் தோற்றமும் மனத்தை ஈர்க்கும் எழிலும் அவளைத் திகைக்கச் செய்தன. 'இவர் யாவரோ? யான் இது காறும் இத்தகைய சிறந்தவரைக் கண்டதில்லை. இவரைக் கண்டதும் ஏதோ என்னுள் மிகுந்த நாணமும் பற்றுள்ளமும் ஏற்படுகின்றன. இவரை விட்டுச் சென்று விடுவதே தக்கது. ஆயினும் உள்ளம் அதற்கு இடம் தரவில்லை,' என்று எண்ணினாள். பின் ஒன்றும் கூறாமல் தலை குனிந்து நின்றாள். அவளது ஒரு காற் பெரு விரல் நிலத்தைக் கீறி நின்றது. ஒரு கணம் இருவர் கண்களும் ஒன்றையொன்று நோக்கின. அதற்குள் அந் நோக்கின் வழியாக ஒருவரது உருவம் மற்றொருவரது உள்ளத்தில் பதிந்தது. சில விநாடிகள் இருவரும் செயலற்று நின்றனர். பின்னர்ச் செழியன், தான் அவளுக்குப் பூப் பறித்துத் தருவதாகக் கூறியதை நினைவு கூர்ந்தான். கரையிலிருந்தவாறே தனது நீண்ட கைகளை நீட்டினான். பூவும் உடனே அவனது கைகளில் வந்துற்றது. அதனை அவன் அவள் முன் நீட்டி

ஞன். நாணத்தின் சிகரமாக விளங்கினளாயினும் நங்கை அதனை யேற்ருள். பின்னர் விரைந்து அவ் விடம் விட்டகன்ருள்.

நங்கையும் நம்பியும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்தனர். ஆயினும் இருவரது மனமும் ஒன்றை விட்டு ஒன்று பிரியவில்லை. அவள் கண்ணுக்கு மறை யும் வரை செழியன் அவளைப் பார்த்தவாறு நின்ருன். பின்னர், 'ஆ! அவளை இன்னுர் என்று அறியாது போனேனே!' என வருந்திஞன். கிடைத்தற் கரிய பொருள் கிடைத்து அதனைப் போக்கிவிட்டது போல வருந்திற்று அவனது உள்ளம். "அவளை மறக்கு தில்லையே என் நெஞ்சம்!" என்று வாய் விட்டுக் கூறிஞன்.

உடனே, "யாரை மறக்குதில்லை உன் நெஞ்சம்?" என்று கூறியவாறு கார்வண்ணன் அவன் பின்வந்து நின்ருன். உடனே திடுக்கிட்டுத் திரும்பிஞன் செழியன். கார்வண்ணனைக் கண்டு, "ஆ! நீயா! போன காரியம் என்னவாயிற்று? இடம் பார்த்து வந்தனையா?" என்ருன்.

**கார்வண்ணன்:** அது கிடக்கட்டும்! இப்போது நீ யாரையோ உனது நெஞ்சம் மறக்குதில்லை என்ருயே, அது யார்?

**செழியன்:** அதுவா! சிறிது நேரத்திற்குமுன் இங்கு ஓர் இள நங்கை வந்தாள். அவள் உலகிலெங் கும் காணுத எழில் வாய்ந்தவள். அவள் அதோ, அங் குக் கரையிலிருந்தவாறே நீரில் சிறிது தூரத்திலிருந்த குவளை மலரொன்றைப் பறிக்க முயன்ருள். முடியா

மல் வருந்தினள். யான் அதை அவளுக்குப் பறித்துக் கொடுத்தேன். அதைப்பெற்றுக் கொண்டதும் மின் னல்போல மறைந்துவிட்டாள். அவளை மறக்க என் னால் இயலவில்லை. அதனையே அவ்வாறு கூறினேன்.

**கார்வண்ணன் :** ஓ! காதல் வந்து புகுந்து கொண்டுவிட்டதுபோலும். அதைத் துரத்து! அது மிகப் பொல்லாதது! மனத்தை உருக்கிவிடும்! உடலை வாட்டிவிடும்! துயிலை ஓட்டிவிடும்! எச்செயலையும் செய்யவிடாது. நீ ஆற்றவேண்டிய அலுவலோ நிறைய உள்ளது. அவ்வளவையும் அது கெடுத்துவிடும். ஆத லின் அதனை உடனே மனத்தைவிட்டு ஓட்டு! ஓட்டு!

**செழியன் :** நண்பா, ஏளனம் செய்யாதே! அந் நங்கை கிடைத்தற்கரியவள்! விலைமதிக்க வொண்ணு மாணிக்கம்!

**கார்வண்ணன் :** சரி! சரி! பித்தம் தலைக்கேறிவிட் டது! இனித் தெளியாது! அது கிடக்கட்டும்! நான் சென்று வந்த செய்தியை அறிவிக்கின்றேன். அச்சீரு ரிடத்து வசிக்கும் செல்வர் ஒருவரது மாளிகையில் இருக்க இடம் தேடியுள்ளேன். இருட்டும் நேரமாகி விட்டது. வா போகலாம்! மற்ருெரு செய்தி! நாளை அவ்வூரில் ஏறு தழுவுதல் விழா நிகழப் போகின்றது. அங்குள்ள மற்ருெரு செல்வரிடம் முற்றாட்டாய் வளர்ந்த காளை யொன்று உள்ளதாம். அதனையடக்கு வார்க்கு அவர் தம் மகளை மணஞ் செய்து கொடுப்ப தாகக் கூறியுள்ளாராம். அம்மகள் இணையற்ற எழில் வாய்ந்தவளாம். அதனால் இரண்டு மூன்ருண்டுகளாக அவ்வேற்றையடக்கி அவளை மணம் புரியப் பலர்

முயன்றனராம். பாவம்! சிலர் இறந்துபட்டனர். சிலர் படுகாய மடைந்தனர். நாளை நீ இங்கிருந்தால் ஒரு வேளை ஏற்றையடக்க முற்படுவாய்! ஆதலின் இன்றிரவுமட்டும் தங்கி யிருந்து விடியலில் நாம் புறப்படுவதே தக்கதென் றெண்ணுகிறேன்.

**செழியன் :** உதவாது! உதவாது! அவ் விழா நிகழ்ச்சியை யான் காணல் வேண்டும். அவளை மணந்தாலும் மணக்காவிட்டாலும் ஏற்றை யடக்கியே தீருவேன்!

**கார்வண்ணன் :** வந்து விட்டாயே வழிக்கு! நான் ஏன் இதை உன்னிடம் கூறினேன்! உன் பிடிவாதம் அறிந்தும் இதை மறதியால் உன்னிடம் கூறிவிட்டு இப்போது வருந்த வேண்டியிருக்கிறது! இப்படி நீ ஒவ்வோரிடத்திலும் ஏதாவது செய்துகொண்டிருந்தால் நாம் எப்போது ஊர் திரும்புவது? அரசு என்னுவது?

**செழியன் :** எல்லாம் அதது ஒழுங்காகவே நடக்கும்! நீ ஒன்றும் கவலைப்படவேண்டாம்! வா, போகலாம்.

பிறகு இருவரும் அவ்விடம் விட்டுச் சென்று சீரூரை யடைந்து அங்குக் கார்வண்ணன் சித்தஞ்செய்திருந்த விடத்தில் தங்கினர். மறுநாள் மாலை ஏறு தழுவுதல் தொடங்கியது. அக்காலை ஊரார் யாவரும் ஒருங்கு திரண்டு ஊரை யடுத்து ஏறு தழுவுதற்கென அமைந்த வெளியிடத்தில் வந்து கூடினர். ஆங்குச் சுற்றிலும் உயர்ந்த பரண் அமைக்கப்பெற்றிருந்தது. அதன் மீது யாவரும் ஏறியமர்ந்துகொண்டனர். ஏறு தழுவுவோர் காயா, பிடலம், செங்காந்தள், குல்லை, முல்லை,

கொன்றை, குருந்தம் முதலிய மலர் மாலைகளைச் சூடி யிருந்தனர். சிவந்த ஆடைகளை அணிந்திருந்தனர்.

அங்கு ஓர் புறம் அவர்கள் தழுவி யடக்குதற்கான ஏறுகள் கொணரப்பட்டிருந்தன. அவற்றுட் சில வானில் விளங்கும் திங்களைப் போலவும், திருமாலினது கரத்தில் விளங்கும் சங்கினைப் போலவும் நெற்றியில் வெண்மை நிறம் பொருந்திய கருநிறக் காளைகளாக விருந்தன. வேறு சில கரிய மலைச்சரிவில் வெள்ளிய மலை யருவிகளைப்போன்ற வெண்ணிறக் கோடுகள் அமையப்பெற்ற காரிகளாம். மற்றும் சில செவ்வானத்தில் விண் மீன்கள் விளங்குவதுபோல வெண்ணிறப் புள்ளிகளோடு கூடிய சிவலைகளாம். இன்னும் சில சிவப்புப் புள்ளிகளோடு கூடிய வெள்ளைகளாம். இவற்றைத் தவிர ஒன்று தூய வெண்ணிற முடையதாய் மற்றெல்லாவற்றினும் சிறந்ததென்று சொல்லுமாறு காணப்பட்டது. அதுவே கார்வண்ணன் குறித்த காளையாயிருக்க வேண்டுமெனச் செழியன் ஊகித்துக் கொண்டான்.

அக் காளைகள் மதயானைகளைப்போலச் சினங்கொண்டவைகளாகக் காணப்பட்டன. அவற்றின் கொம்புகள் சிவபெருமானது கணிச்சிப் படையைப் போலக் கூரியனவாயிருக்குமாறு சீவி விடப்பட்டிருந்தன. அவை குளம்பால் நிலத்தை வெட்டி வானத்தில் துகள் எழுப்பின. கொம்புகளால் மண் கட்டிகளைப் பெயர்த்து உயரத் தூக்கி எறிந்தன.

குறித்த நேரத்தில் பறை கொட்டினர். முழவு முழக்கினர். கொம்பு ஊதினர். மற்றும் பல இசைக்

கருவிகளையும் இசைத்தனர். அவ்வொலிகளோடு மக்களின் ஆர்ப்பும் சேர்ந்து கடலொலிபோல விருந்தது. ஒவ்வொரு காளையாகப் பரணுக்கு நடுவிலுள்ள வெளியிடத்திற்குக் கொணர்ந்தனர். அததற்குரியார் அதனை யடக்குவார்க்குத் தமது மகளை மணஞ்செய்து கொடுப்பதாகக் கூறினர். அந்நங்கையரைக் காதலித்தோர் அவற்றைத் தழுவியடக்க முற்பட்டனர். அவர்கள் அவற்றின்மேல் புலிகளைப்போலப் பாய்ந்தனர். அவற்றைத் தழுவி நின்ற சிலர் நீரில் படகின்மீதிருந்து அதனைச் செலுத்துபவர்போ லிருந்தனர். கரிய ஏற்றைத் தழுவியடக்கிய வொருவன் கூற்றுவனை யுதைத்து அவன் வலியை யடக்கிய சிவபெருமானை யொத்துக் காணப்பட்டான். சிவந்த ஏற்றைத் தழுவியடக்கியவன் கஞ்சனால் ஏவப்பட்டுப் போந்த குதிரையாகிய அரக்கனது வலியை யழித்த கண்ணனை யொத்துக் காணப்பட்டான்.

இவ்வாறுக ஏறுகள் பல அடக்கப்பட்டன. சில வேறுகள் தம்மை யடக்கவந்த வீரரைக் கொம்பால் குத்திக் குடரைச் சரியச் செய்தன. இறந்துபட்டாரும், பெருங்காயமுற்றருமாய், சில வீரர் துன்புற்றனர். நிற்க, இறுதியில் வெள்ளைக்காளை கொணரப்பட்டது. அதனை யடக்குவார்க்குத் தம் மகளைக் கொடுப்பதாகக் கூறி ஒரு செல்வர் முன்வந்தனர். அவரருகில் அவரது மகள் நின்றாள். அவள் நாணத்தால் தலை குனிந்து அவரது பின்புறம் மறைந்து நின்றாள். எழிலே வடிவெடுத்தது போன்ற அவள் தான் பொய்கை யிடத்துக் கண்டவளே யென்பதைச் செழியன் அறிந்தான்.

செல்வர் கூறிய சொற்களை எவரும் செவியுற்ற தாகத் தெரியவில்லை. அவ்வேற்றையடக்க எவரும் முன் வந்திலர். அப்போது பரணின்மீது கூட்டத்தோடு கூட்டமாக விருந்த செழியன் பரணைவிட்டு வெளி யிடத்தில் குதித்தான். தான் அவ்வேற்றை யடக்குவ தாகக் கூறினன். உடனே ஒளி யிழந்திருந்த அச்செல் வர் முகம் ஒளி பெற்று விளங்கியது. மக்கட் கூட்டத்தி னின்று பேரொலி யெழுந்து வானைப் பிளந்தது. அக் கூட்டத்துட் சிலர் தமக்குள் மெதுவாக, “இவன் இக் காளையை அடக்க மாட்டுவானே? காளையோ மிகக் கொடிது. இதுவரை இதனை யடக்கியவர் எவருமிலர். ஏதோ ஆண்டவன் செயல். இவன் இக்காளையை யடக்கி அப்பெண்ணைக் கைப்பற்றுவானுனல் அவளுக் கேற்ற கணவனேயாவான்,” என்றனர். வேறு சிலர் “பாவம்! பாவம்! இவன் யார் பெற்றமகனே? இன்று இவ்வேற்றுக்குப் பலியாகப் போகின்றான்,” என்றனர். வேறு சிலர், “இவனைப் பார்த்தால் இவன் எடுத்த காரி யத்தை முடிப்பானென்றே தோன்றுகின்றது. வயதிற் சிறியவனுயினும் மிக்க திறமையுள்ளவன் போலும் காணப்படுகின்றான்,” என்றனர்.

நிற்க, வாடிய பயிர்மீது மழைத்துளி விழுந்தாற் போலச் செழியனது செய்கையால் செல்வர் களிப்புற்ற னர். ஆயினும், செழியனை நோக்கி எச்சரிக்கை செய் வாராய், “வீரனே, நீ யாவனே யானறியேன். இக்காளையோ மிகக் கொடியது. இதுவரை இதனை யடக்க முற்பட்டுச் சிறந்த வீரரெல்லாம் உயிரிழந்தனர். எண்ணித் துணிக கருமம் என்பது ஆன்றோர் வாக்கு. ஆதலின் நன்காராய்ந்து செயலிலிறங்குக” என்றார்.

செழியன், "யான் முன்னரே துணிந்தாயிற்று. சொன்ன சொல் தவறேன். இவ்வேறு எனக்கொரு துரும்பு. வெற்றி பெற்றால் பெருமை, புகழ். இன்றேல் இறந்தொழிவேன். இதுவே என் உறுதி" என்றான்.

மீண்டுமொருமுறை மக்களின் ஆரவாரம் வானைப் பிளந்தது. ஏறு அவிழ்த்து விடப்பட்டது. அது பயங்கர மாக முக்காரமிட்டுக் கொண்டு செழியனை நோக்கி நாலுகாற் பாய்ச்சலில் ஓடிவந்தது. பாதிவழியில் திடீ ரென நின்றது. ஒருபுறம் தலையைச் சாய்த்து கொடூரப் பார்வை பார்த்தது. காலால் நிலத்தை வெட்டித் துகளை எழுப்பியது. பிறகு மீண்டும் நாலுகாற் பாய்ச் சலில் பாய்ந்தோடி வந்தது.

காளை அவிழ்த்து விடப்பட்டதுமே செழியன் அதனை எதிர்க்கச் சித்தமானான். தனக்குச் சௌகரிய மான தோரிடத்தில் எச் செயலையும் சமாளிக்கத் தக்க நிலையில் நின்றான். ஏறு அவனை யடைந்ததும் என்ன செய்தது? அப்போது அவன் என்ன செய்தான்? நடந்தது இன்னதென்று அறியுமுன்னே ஏற்றின் மீது ஏறியிருந்தான் செழியன். திங்களினிடத்து மறுப் போல அவன் அதன் மீது காணப்பட்டான். அவனது ஒரு கை அதன் கொம்பைப் பற்றியிருந்தது. மற்றொரு கை அதன் திமிலைப் பிடித்திருந்தது. அது தன் வலி கொண்டமட்டும் அவனை உதறித் தள்ள முயன்றது. துள்ளித் துள்ளி அங்குமிங்கும் ஓடிற்று. அவனோ பிடித்த பிடியை விடவில்லை. மேலும் மேலும் இறுக் கினவாறிருந்தான்.

போராட்டம் ஒருநாழிகைப் பொழுது நீடித்தது. மக்கட் கூட்டம் வாய் பேசாது முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. சிறிது சிறிதாக எருதின் வலி யடங்கத் தொடங்கிற்று. அது ஓரிடத்தில் விழுந்தது. அப்போது அதன் முதுகின் மேலிருந்த செழியன் வயிற்றுப் புறமாக வந்தான். ஆயினும் பிடித்த பிடியைச் சிறிதும் தளர்த்தவில்லை. ஏறு வலியழிந்தது; செயலடங்கி வாளாவிருந்தது. வெற்றி! வெற்றி! மக்கள் முழக்கம் திசைகளைச் செவிடுபடச் செய்தது.

ஏற்றைவிட்டு அப்பால் குதித்தான் செழியன். அது தட்டித் தடுமாறி எழுந்தது. உடனே அதற்குரியார் வந்து அதனைப் பிடித்து அப்பாற் கொண்டுசென்றனர். மகிழ்ச்சியால் பொங்கினர் செல்வர். உவகைக்கடலுள் ஆழ்ந்தாள் நங்கை. மகிழ்ச்சி வெள்ளத்தில் புரண்டனர் மக்கள். செல்வரின் அழைப்பிற்கிணங்கிச் செழியனும் கார்வண்ணனும் அவரது இல்லம் சேர்ந்தனர். செல்வர் தமது மகளை மணந்துகொள்ளுமாறு செழியனை வேண்டினர். அவனைப் பற்றிய வரலாற்றைக் கேட்பாராயினர். செழியன் தன் வரலாற்றை யுரைத்து மணவினை உடனே நடத்தற்கியலாது என்றும், தான் வெளிநாடு சென்று தன் அலுவலை முடித்து மீண்டதும் மணம் செய்து கொள்வதாகவும் கூறினன். செல்வரும் அதற்கிசைந்து அவர்களைச் சில நாளங்கிருந்து செல்லுமாறு வேண்டிக் கொண்டனர். அவ்வாறே அங்குச் சிலநாள் தங்கியபின் அவர்கள் அங்கிருந்து சோழநாடு நோக்கிச் சென்றனர்.

## 5. சோழநாட்டில் செழியன்

செழியனும் கார்வண்ணனும் சோழநாட்டை யடைந்தனர். அப்போது அங்குள்ள பசிய வயல்களில் கதிர்களைத் தாங்கி நின்ற செழித்த பயிர்கள் தமது தலைகளை அசைத்து மகிழ்வோடு அவர்களை வரவேற்றன. பலவகைப் புள்ளினங்கள் பற்பலவாறு ஒலித்து மங்கல வாத்திய ஒலியோடு அவர்களை வரவேற்பது போலக் கூட்டங் கூட்டமாய்ப் பறந்து வந்தன. அவ் வயல்களைக் கண்ட செழியன், "**சோழ வளநாடு சோறுடைத்து** என்பது சரியாகவே காணப்படுகின்றது" என்றான். கார்வண்ணன், "ஆம். இந்நாடு **புனல் நாடு** என்பதற்கேற்ப எங்கும் வாய்க்கால்களில் நீர் நிறைந்து செல்கின்றது" என்றான். இவ்விதமாக அவர்கள் பற்பல செய்திகளைப் பற்றிப் பேசியவாறே நடந்து சென்று **சிராமலை**யை அடைந்து அதனையடுத்துக் காவிரிக் கரையில் இருந்ததோர் பொழிலைச் சேர்ந்தனர்.

அப்பொழிலினோர்புறம் பெரிய மாமரமொன்று செழித்தோங்கி வளர்ந்திருந்தது. அதனடியில் சில சிறுவர் வில்லும் அம்பும் கொண்டவராய் ஆரவாரித்திருந்தனர். அவர்கள் அம்மரத்தின் மீது அம்பெய்து கனிகளை வீழ்த்தும் செய்கையிலீடுபட்டிருந்தனர். அவர்களுள் ஒரு சிறுவன் மற்றவர்களை நோக்கி, "அதோ அந்த உச்சாணிக் கிளையில் இருக்கிறதே, அந்த மாம்பழத்தை அடித்து வீழ்த்தவேண்டும்! யார் செய்கிறார்களோ, பார்ப்போம்!" என்றான். மற்றொருவன், "அது நம்மால் முடியாது; ஒருவேளை

நமது ஆசிரியர் அதையடித்து வீழ்த்தக்கூடும்; வேறு எவராலும் முடியாது" என்றான். வேறொருவன், "முடியாதா, பார்ப்போம், இதோ நான் அம்பெய்கிறேன்" என்றான். பிறகு மற்றும் பலரும் அம்பெய்ய முன் வந்தனர். அவர்கள் யாவரும் பலமுறை அம்பெய்தும் பயன்படவில்லை. ஏதோ சில கனிகளும், காய்களும், இலைகளும், சிறு கொம்புகளும் உதிர்ந்தனவேயன்றிக் குறித்த கனி அங்ஙனமே இருந்தது. அம்பெய்து அம்பெய்து அவர்கள் அலுத்தனர்.

செழியனும் கார்வண்ணனும் அவர்களையடைந்து அவர்கள் செய்கையைப் பார்த்துக்கொண்டு நின்றனர். சிறுவர் தமது அலுவல் மும்முரத்தில் அவர்கள் வந்ததைக் கவனிக்கவில்லை. பிறகு சற்றுப் பெரியவனாயிருந்த ஒருவன் அவர்களைப் பார்த்தான். அதே சமயத்தில் மற்றொரு பெரிய பையன் அந்தக் கனியின் மீது அம்பெய்தான். அது கனியிருந்த விடத்திற்குச் சற்றுத் தூரத்திற்கு அப்பால் வானில் சென்றது. அது குறியை விட்டு அதிகமாக விலகிச் சென்றதைக் கண்டு யாவரும் கொல்லென்று சிரித்தனர். செழியனும் கார்வண்ணனும் கூடச் சிரிக்கலாயினர். அப்போது எல்லாச் சிறுவரும் அவர்களைப் பார்த்தனர்.

அக்காலை முதலில் அவர்களைப் பார்த்த சிறுவன் அவர்களை நோக்கி, "சிரிக்கிறீர்களே, நீங்கள் அதை வீழ்த்துங்கள் பார்ப்போம்! எல்லாரைக் காட்டிலும் பெரியவர்களாக இருக்கிறீர்களே! அதை வீழ்த்தி விடுங்கள் பார்ப்போம்!" என்றான். கார்வண்ணனும் செழியனும் ஒருவரை யொருவர் பார்த்துக்

கொண்டனர். பிறகு கார்வண்ணன் அவர்களை நோக்கி, "இந்தக் கனியை நான் ஒரே அம்பால் வீழ்த்தி விடுகிறேன்; என்ன தருகிறாய்?" என்றான்.

**சிறுவன் :** ஒரே அம்பில் வீழ்த்தி விடுவாயோ! அது எங்கள் ஆசிரியர் ஒருவரால்தான் முடியும்! ஒரே அடியில் வீழ்த்துகிற ஆளைப் பாரு!

**மற்றொரு சிறுவன் :** ஒரு அம்பில் வேண்டாம்! பத்து அம்புகளில் வீழ்த்திவிடு, போதும்!

**கார்வண்ணன் :** ஒரே அம்பில் வீழ்த்தி விடுகிறேன், என்ன தருகிறீர்கள்?

இத்தருணத்தில் சிறிது தூரத்தில் அவர்களது ஆசிரியர் வந்தார். அவரைப் பார்த்த சிறுவர், "அதோ ஆசிரியர் வருகிறார். அவரும் வரட்டும். அவரிடம் இதைப்பற்றிச் சொல்லுவோம்" என்றான். பிறகு ஆசிரியர் வந்ததும் அவ்வாறே செய்தியறிவித்தனர். அதற்குள் ஒரு சிறுவன், "நீ அந்தக் கனியை ஒரே அம்பில் வீழ்த்திவிட்டால் நான் இந்தக் காதையறுத்துக் கொண்டு போகிறேன்!" என்றான். கார்வண்ணன், "காதை அறுக்க வேண்டாம்! பத்துத் தோப்பிக்கரணங்கள் போடு, போதும்" என்றான். அதற்கு அச்சிறுவன் "நீ அவ்வாறு வீழ்த்தாவிட்டால் பத்துத் தோப்பிக் கரணங்கள் போடவேண்டும்" என்றான். "சரி" என்றான் கார்வண்ணன்.

அப்போது ஆசிரியர், செழியன், கார்வண்ணன் இருவரையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தனர். "பிறகு நீங்கள் யார்? எந்த ஊர்!" என்றார்.

**கார்வண்ணன் :** எங்கள் ஊர் மேலூர். என் பெயர் கறுப்பன். இவன் எனது நண்பன். இவன் பெயர் சிவப்பன். இருவரும் தல யாத்திரையாக வந்தோம். திருவானைக்கா செல்கின்றோம்.

**ஆசிரியர் :** நீங்கள் விற்போர், வாட்போர் முதலியவற்றில் பயிற்சி பெற்றிருக்கிறீர்களா ?

**கார்வண்ணன் :** ஆம், சிறிது பெற்றுள்ளோம்.

**ஆசிரியர் :** உங்கள் ஆசிரியர் யாவர் ?

**கார்வண்ணன் :** மதுரையாசிரியர் வேள்முருகனார்.

**ஆசிரியர் :** ஆ! அப்படியா ! தமிழ் நாட்டுத் தலை சிறந்த ஆசிரியருள் அவரும் ஒருவர். ஆயின் சிறந்த பயிற்சி பெற்றிருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. நிற்க, நீ கூறுகிறபடி ஒரே அம்பில் அக்கனியை அடித்து வீழ்த்திவிடுவாயா ?

**கார்வண்ணன் :** செய்ய மாட்டுவேன் என்றே எண்ணுகின்றேன்.

**ஆசிரியர் :** எங்கே செய், பார்ப்போம்.

கார்வண்ணன் அச்சிறுவருள் ஒருவனிடமிருந்த வில்லையும் அம்பையும் வாங்கிக் குறிபார்த்து ஓரம்பு எய்தான். அது விர்ரென்று பறந்து சென்று கனியைத் தாங்கி நின்ற அதன் காம்பின் மீது பட்டது. கனி கீழே விழுந்தது. அது தரையைச் சாருமுன் கார்வண்ணன் அதைக் கையிலேந்திக் கொண்டான். இதைப் பார்த்த சிறுவர் யாவரும் "ஆ ! ஆ ! அற்புதம் ! அற்புதம் !" என ஆரவாரித்தனர். ஆசிரியர், "நல்லது

கறுப்பா, நீ சிறந்த வில் **வீரன்!** உனது வாட்போர்த் திறனையும் காண்போம். வா, சிலம்பக் கூடத்திற்குச் செல்வோம். அது அருகில்தான் உள்ளது. வாருங்கள் எல்லோரும்" என்றார்.

யாவரும் சிலம்பக்கூடம் சென்றனர். அங்குப் பலர் மற்போர், வாட்போர் முதலியவற்றைப் பயின்று கொண்டிருந்தனர். ஆசிரியர் **வீரப்பன்** என்னுமொருவனைக் கூவியழைத்து, "இவன் இங்குள்ள மாணவர் எல்லோரினும் வாட்போரில் மிக்கவன்; இவனோடு நீ வாட்போரிடு, பார்க்கலாம்" என்று கார்வண்ணனை நோக்கிக் கூறினார்.

கார்வண்ணனும் அதற்கிணங்கி அவனோடு போரிடலானான். சிறிது காலம் சாதாரணமாகப் போரிட்டனர். பிறகு வீரப்பன் விரைந்து சில வீச்சுக்களை வீசினான். கார்வண்ணன் தற்காப்பிலிறங்கினான். பிறகு கார்வண்ணன் சில புதிய வீச்சுக்களை வீசவே, வீரப்பன், "நீ திறம்படைத்தவனே; இந்த வீச்சுக்களுக்கு என்ன சொல்கிறாய்?" என்று கூறி வேறு சில புதிய வீச்சுக்களை வீசினான். கார்வண்ணன் வாய் பேசாமல் அவற்றைத் தடுத்து நின்றான். பிறகு வீரப்பன், "இவ்வீச்சுக்கு இதுவரை யாரும் தப்பியதில்லை; நீ என்ன செய்கிறாய், பார்ப்போம்" என்று சொல்லிப் புதிய வகையில் கத்தியை வீசினான். கார்வண்ணன் அதனைத் தடுத்துவிட்டு மின்னலைப்போல ஒரு வீச்சு வீசி வீரப்பனது வாள் வானத்திற் பறக்குமாறு செய்தான். வீரப்பன் செயலற்றுத் தலை குனிந்து நின்றான்.

ஆசிரியர் "மிக நன்று! மிக நன்று! கறுப்பா, உண்மையில் நீ மிகச் சிறந்த பயிற்சி பெற்றிருக்கிருய்! வீரப்பா, நீ வருந்தவேண்டா. யான் இன்னும் உனக்கு அந்தப் புதிய வீச்சைக் கற்றுத் தரவில்லை. விரைவில் கற்றுத் தந்துவிடுகிறேன். அது நிற்க, கறுப்பா, நீ மற்போரிலும் பயிற்சி பெற்றிருக்கிருயன்ருே?" என்ருர். கார்வண்ணன் "ஆம் சிறிது பயிற்சியுண்டு" என, ஆசிரியர் **வெள்ளையன்** என்னுமொருவனை யழைத்தார். அவன் உருண்டு திரண்ட தோள் களையும் மதயானை போன்ற சீற்றத்தையும் உடையவ ருகக் காணப்பட்டான். அவன் அருகில் வந்ததும் ஆசிரியர் "கறுப்பா, இவனேடு மற்போரிடுகிருயா?" என்ருர். கார்வண்ணனும் அதற்கிசைய இருவரும் போரிடலாயினர்.

பருத்த உடலுடன் கூடிய வெள்ளையனுடன் சற்று மெலிந்தவனுன கறுப்பன் போரிடுவது சற்றும் பொருந் தாதது போலவே காணப்பட்டது. வெள்ளையன் மிக்க வீராவேசத்துடன் கறுப்பனை நசுக்கிவிடுபவன் போல அழுத்திப் பிடித்து அவனைக் கீழே தள்ளி அவன் வலியையடக்க முயன்ருன். அந்த ஒவ்வொரு தடவை யும் கறுப்பன் எவ்வாருே சமாளித்து அவன் பிடிகளி னின்று நழுவிக்கொண்டே வந்தான். ஆசிரியரும் அவனது செய்கைகளைக் கூர்ந்து நோக்கியவாறு இருந்தனர்.

நேரம் ஆக ஆக வெள்ளையன் சற்று அதிகமாக மூச்சு வாங்கத் தொடங்கினுன். அப்போதும் கறுப்பன் அவனைக் கீழே தள்ள முயற்சிக்கவில்லை. பின்னும்

சற்று நேரமாகியது. வெள்ளையன் மிகவும் களைத்துத் தடுமாறினான். கறுப்பனை எப்படியும் வென்றுவிட வேண்டும் என்று மிக்க முயற்சி செய்து தன் வலிமை முழுவதையும் சேர்த்து இறுதியாக அவனைப் பிடித்து நெருக்கினான். அப்போது கறுப்பன் மின்னல் போலத் திரும்பி அவனைப் பிடித்துத் தள்ள அவன் அடியற்ற மரம்போல மல்லாந்து விழுந்தான். மீண்டும் அவன் எழுந்து போரிட முடியாதென்பது புலப்பட்டது. கறுப்பன் அவன் மீண்டெழுந்தால் மறுபடியும் தள்ளுவதற் காயத்தமாக நின்றான். அது கண்ட ஆசிரியர், "நல்லது போதுமானது; கறுப்பா, வெள்ளையன் தோற்றுவிட்டான்; இன்று நீ இவ் வூரிலேயே சிறந்த மற்போர் வீரனை வென்றுவிட்டாய். சிறிது அல்ல, சிறந்த பயிற்சி பெற்றிருக்கிறாய் நீ; அது நிற்க. நீங்கள் பெற்ற பயிற்சியை வீணாக்காமல், இங்கே எமதரசர் படையில் சேர்ந்து பணியாற்ற வருவீர் களாயின், உங்கள் தகுதிக்கேற்பப் படையில் சிறந்த பதவி கிடைக்குமாறு செய்வேன்; என்ன சொல்லு கிறீர்கள்?" என்றார்.

**கார்வண்ணன்:** நாங்கள் எங்கள் வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் பிறரிடம் பணியாற்ற வேண்டிய நிலையுடையவர்களல்லர். வீரம், பெருமை, புகழ் இவற்றிற்கே பணியாற்றுவோம். இப்போது நாங்கள் நாடு காண விழைந்து வந்துள்ளோம். எங்கள் கருத்து முடிந்த பின்னரே, நீவிர் கூறும் பணியில் இறங்க இயலும்.

**ஆசிரியர்:** நன்று; அவ்வாறே செய்க. அண்மைக் காலத்தில் சேர நாட்டில் ஓண நன்னாள்

விழா நேரப்போகின்றது. அதனை யொட்டிப் பற்பல போட்டிப் பந்தயங்கள் நிகழப் போகின்றன. அங்குச் செல்லுங்கள்! வீரம், பெருமை, புகழ் இவை கிடைக்கலாம்.

**கார்வண்ணன்** : நன்று; அங்ஙனமே செய்கின்றோம்! வணக்கம்; சென்று வருகின்றோம்.

பிறகு செழியனும் அவனும் அவ்விடம் விட்டுச் சென்றனர். அவர்கள் காவிரியில் நீராடிவிட்டு உறையூர் சென்று அவ்வூரிலுள்ள உணவு விடுதி யொன்றில் உணவுண்டு அதனையடுத்திருந்ததொரு சாவடியிற் படுத்துறங்கலாயினர். அப்போது உச்சிப்பொழுதாகியது.

ஐந்தாறு நாழிகைப் பொழுது கழிந்தது. அருகில் நிகழ்ந்த ஆரவாரம் அவர்களது தூக்கத்தைக் கலைத்தது. திடீரென விழித்தெழுந்த அவர்கள் தங்களைச் சூழ்ந்து, அரசகாவலர் பதின்மர் நிற்கக் கண்டனர். அவர்கள் எழுந்ததைக் கண்டதும் காவலருள் சிலர் அவர்களுக்கு நேராக வேல்களை நீட்டினர். வேறு சிலர் அவர்களைச் சங்கிலிகளாற் பிணித்தனர். பிறகு அவர்கள் அரண்மனைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

அரண்மனையினொருபுறம் ஒரு அறையில் வயது சென்ற ஒருவர் உயர்ந்ததோர் இருக்கையில் வீற்றிருந்தார். சிறைப்பட்டவர் இருவரும் அவரது முன்னர்க் கொணரப்பட்டனர். முதியவர் அவர்களை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். "நீங்கள் யார்? எந்தவூர்? உங்கள் பெயரென்ன?" என்று கேட்டார். அவருக்கு

மறுமொழியாகக் கார்வண்ணன் முன் சிலம்பக்கூட ஆசிரியரிடம் சொன்னதையே சொன்னான்.

**முதியவர் :** உங்கள் ஊர் மேலூரா? நன்று; அது 'உயர்ந்த ஊர்' எனவும் பொருள்படும். உங்கள் உறையூரினும் எங்கள் ஊர் உயர்ந்த ஊர் என நீங்கள் கூறியதாக அதற்குப் பொருள் கொள்ள இடமிருக்கிறது. உங்களில் ஒருவன் கறுப்பன்; மற்றவன் சிவப்பவன் அல்லவா? 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள்' என்பது சூத்திரம். அதனால் கறுப்பு, சிவப்பு என்னும் இரண்டும் சினம் என்னும் பொருளை யுடையன. நீ கறுப்பன்; அதாவது, எங்கள்மீது சினங்கொண்டவன்; அவன் சிவப்பன்; அதாவது, அவனும் எங்கள்மீது சினங்கொண்டவன். ஆதலால் நீங்கள் இருவரும் எங்கள் பகைவர். நீங்கள் பாண்டி நாட்டிலுள்ள மேலூரை உங்கள் ஊராகக் குறிப்பிடுவதால் ஐயத்திற்கிடமின்றி நீவிர் பாண்டிய நாட்டு ஒற்றராவீர். அது நிற்க, நீவிர் கூறியது ஒருகால் உண்மையாகவு மிருக்கலாமன்றோ? அது உண்மையா, அன்று என்பதை எங்கள் ஆட்கள் மேலூர் சென்று ஆராய்ந்து வருமளவும் நீங்கள் சிறையில் இருக்க வேண்டியதே. உங்கள் கூற்று உண்மையாயின் உங்களை விட்டுவிடுவோம். பொய்யாயின் உயிரிழப்பீர். காவலர்காள்! கொண்டு செல்லுங்கள் இவர்களைச் சிறைச்சாலைக்கு!

கார்வண்ணனும் செழியனும் சிறையிலடைக்கப் பட்டனர். அப்போது மாலைப் பொழுதாகியது. சிறைச்சாலையில் அவர்கள் தனித்தனி யறைகளில் அடைக்கப் பட்டிருந்தனர். இரண்டறைகளும் ஒன்றையொன்று

அடுத்து இருந்தது. இரண்டிற்கும் இடையில் சிறிய தொரு பலகணியிருந்தது.

அறைகளில் தனித்து விடப்பட்டதும் இருவரும் இடையே யிருந்த சாளரத்தின் வழியாகப் பார்த்து இரகசியமாகப் பேசத் தொடங்கினர்:

**கார்வண்ணன் :** அரசே, எதிர்பாரா வகை வந்து சிக்கிக்கொண்டு விட்டோம். நாம் இரு பொருள்படப் பேசியதை அப்பெரியார் அறிந்து கொண்டார். தவரு மல் அவர்கள் மேலூருக்குச் சென்று ஆராய்வார்கள். நமது பொய்யை அறிந்து நம்மைக் கொல்வது நிச்சயம். அதற்குள் நாம் இங்கிருந்து தப்பிச் செல்ல வழி தேட வேண்டும்.

**செழியன் :** அதற்குள் என்ன ! இன்றிரவே தப்பிச் சென்றுவிடவேண்டும்.

**கார்வண்ணன் :** இன்றிரவிற்குள்ளா! ஏதோ பார்ப்போம்.

**செழியன் :** அது கிடக்கட்டும். காவலர் எத்தனே பேர் உள்ளனர்?

**கார்வண்ணன் :** நமது இருவர் அறைகளேப் பொறுத்த மட்டில் இருவர் உள்ளனர்.

**செழியன்:** அவர்கள் சிறிது நேரத்திற்கொரு முறை முன்னும் பின்னும் உலாவிய வண்ணம் இருக் கின்றனர். நமது செயல்களே அவர்கள் கவனித்த வாறே யிருப்பார்கள். நல்லது இருக்கட்டும். உனது அறையும் என் அறையைப் போலவே காணப்படுகிறது. இங்கே என் அறையில் இந்தச் சாளரத்தைத் தவிர

இரண்டாள் உயரத்தில் பெரியதொரு சாளரம் உள்ளது. உன் அறையிலும் அப்படி ஒன்று உள்ள தன்றோ?

**கார்வண்ணன்:** ஆம்!

**செழியன்:** அதன் கம்பிகளினிடைவெளி சற்றுப் பெரிதாய் இருக்கிறது. அதற்குள் நாம் நுழையலாம் என்றெண்ணுகிறேன். உன் அறையிலும் அப்படித் தானே!

**கார்வண்ணன்:** ஆம்.

**செழியன்:** அதுவே நாம் தப்புவதற்குள்ள வழி!

**கார்வண்ணன்:** அதற்குச் செல்வது எப்படி? சுவர்கள் கற்சுவர்கள். பள்ளம் செய்ய இயலாது. தொத்தி ஏறுவதற்குரிய மார்க்கம் ஒன்றும் காணப்பட வில்லையே!

**செழியன்:** நாம் இருவரும் ஓரறையிலிருந்தால்...?

**கார்வண்ணன் :** ஒருவர்மீதொருவர் ஏறிச் சாளரத்தை யடையலாம். இரு அறைகளுக்கும் இந்தப் பலகணி இருந்தல்லவா கழுத்தை அறுக்கிறது!

**செழியன்:** அதன் கழுத்தை நாம் அறுக்க வேண்டும்.

**கார்வண்ணன்:** கம்பிகள் மிகவும் உறுதியாய் ஈயம் பாய்ச்சிப் பதிக்கப்பட்டிருக்கின்றனவே!

**செழியன்:** அதைத் தவிர வேறு வழியில்லையே!

**கார்வண்ணன் : மனமுண்டானால் வழியுண்டு என்கிருய்!** நல்லது, மனத்தை வைப்போம்.

104632

**செழியன்:** எப்படியும் இக்காவலர் நள்ளிரவில் சற்றுக் கண்ணயராமலிரார். அப்போது இதோ இவ்விதமாக இவ்விரு கம்பிகளைப் பிடித்து வலித்திழு! நான் இதோ இவ்விதமாக வலித்திழுக்கிறேன். நம்மிருவர் வலியும் இவ்வகையில் ஒன்று கூடுகிறதல்லவா? அதற்கு இக்கம்பிகள் பணிகின்றனவா, இல்லையா, பார்ப்போம்.

**கார்வண்ணன்:** பணியலாம். முயற்சி மிகுதியும் வேண்டும் என்றெண்ணுகிறேன்.

**செழியன்:** "தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்."

**கார்வண்ணன்:** நன்று, நன்று, அங்ஙனமே!

பிறகு இருவரும் தங்கள் அறைகளில் படுத்துறங்குவது போலப் பாசாங்கு செய்தனர். இரவு பத்து நாழிகைக்குப் புதிய காவலர் இருவர் காவலுக்கு வந்தனர். அவர்கள் நள்ளிரவுவரையில் உலாவியிருந்து, பின் கீழே உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கண்ணயரலாயினர். தருணம் நோக்கியிருந்த செழியனும் கார்வண்ணனும் உடனே எழுந்தனர். இருவர் அறைகளுக்கு மிடையில் இருந்த சாளரக் கம்பிகளைத் தங்கள் வலிமை கொண்ட மட்டும் இழுத்தனர். ஒரு நாழிகை போராடிய பின் கம்பிகள் பெயர்ந்தன. நடுவில் ஆள் நுழையத் தக்க இடைவெளி யுண்டாயிற்று. செழியன் கார்வண்ணனிருந்த அறையிற் புகுந்தான்.

உடனே இருவரும் காவலர் நிலை எவ்வாறிருக்கிறதென நோக்கினர். காவலர் முன் போலவே உறக்க

நிலையில் இருந்தனர். அவர்களது ஈட்டிகளிலொன்று அறையை யடுத்துச் சுவரில் சார்த்தப்பட்டிருந்தது. அது முயன்றால் கைக் கெட்டும் வகையில் இருந்தது. எதற்கும் அது கையில் இருப்பது நல்லதென்று சொல்லிக் கார்வண்ணன் அதை மெதுவாக ஓசைப் படாமல் எடுத்துக் கொண்டான். பிறகு அவன் அவ் வறையில் உயரத்திலிருந்த பலகணிக்குக் கீழாகச் சுவரின்மீது கைகளை ஊன்றி நின்றான். செழியன் அவன் மீதேறிச் சாளரத்தை யடைந்தான். அப்பால் சாளரக் கம்பியொன்றில் தன் தலைப்பாகைத் துணி யைக் கட்டிக் கீழே தொங்கவிட, கார்வண்ணன் அதனைப் பிடித்து ஏறிச் சாளரத்தை யடைந்தான்.

அங்கிருந்து அப்புறமாகக் கீழே பார்க்கையில், நிலம் சுமார் இருபதடி ஆழத்தில் இருந்தது. சந்திர வெளிச் சம் மிகப் பிரகாசமாக இராவிடினும், சிறிது தூரத்தி லுள்ள பொருள்கள் தெரிந்தன. தெரிந்தவரையில் அவர்கள் ஆராய்ந்து பார்க்க, கீழுள்ள தரை பாறை யாகவும் மேடு பள்ளமாகவும் இருக்கக் கண்டனர். அப்பாறை நிலம் சுமார் நாலைந்தடி அகலமிருந்தது. அப்பால் அகழி. எதிர்க்கரை நன்கு புலப்படவில்லை. அகழியின் நீர்ப்பரப்பு சுமார் அறுபதடி யிருக்கும்போல் தோன்றியது. “அகழியை நீந்திக் கடக்க வேண்டும். அதில் முதலை, சுறா முதலியன இருக்கலாம். வேலை எடுத்து வந்தது நல்லதாயிற்று” என்றான் செழியன்.

பிறகு அவர்கள் கம்பியில் கட்டிய தலைப்பாகைத் துணியை அறையின் புறமிருந்து வெளிப்புறமாக எடுத்துவிட்டனர். அதைப் பிடித்துக்கொண்டு கீழிறங்

கிப் பாறை நிலத்தை யடைந்தனர். பிறகு ஓசைப்படா மல் அகழி நீரிலிறங்கி நீந்தி அக்கரை சென்றனர். அவர்கள் கிட்டத்தட்ட அக்கரையடைந்தபோது, ஒரு முதலை அக்கரையிலிருந்து நீரில் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. அது அவர்களைச் சமீபித்ததும் செழியன் வேலை ஓங்கினான். முதலை ஆவென வாயைப் பிளந்தது. உடனே மின்னல் வேகத்தில் அதன் வாய்க்குள் வேலைப் பாய்ச்சினான் செழியன். முதலை தடுமாறிச் சிறிது நேரம் துள்ளி இறந்தது. பின்னர் இருவரும் கரை சேர்ந்தனர்.

கரையேறி அப்பால் பார்க்கையில் தாங்கள் கடந்த அகழி அரண்மனையைச் சுற்றியிருந்த அகழி என்பது புலப்பட்டது. அப்பால் நகரத்தின் பகுதிகள் காணப்பட்டன. தாங்கள் நகரத்தை விட்டுச் செல்ல வேண்டுமானால் நகரத்துக் கோட்டைச் சுவரையும் அகழியையும் கடக்க வேண்டும் என்று கண்டனர். அப்போது கார்வண்ணன், "அரசே, விடியலில் எப் படியும் நாம் தப்பியது அவர்களுக்குத் தெரிந்துவிடும். அதற்குள் நகரத்தைவிட்டு வெளிச் செல்ல இயலாது. மேலும் நாம் வேடம் மாற்றியாக வேண்டும். ஆதலால் இப்போது நாம் இவ்வூரிலுள்ள நமது ஒற்றர் அலுவ லகத்தை யடைவோம். பிறகு தக்கபடி யோசித்து நகரைவிட்டுத் தப்பிச் செல்லுவோம்" என்றான்.

செழியனும் அதற்கிசையவே, அவர்கள் நகரக்காவ லர் கண்ணிற்படாமல் ஒளிந்து ஒளிந்து சென்று அந்நக ரின்மேற்குப் புறத்திலிருந்த ஒரு தெருவை யடைந்தனர். அங்குப் பெரிய மாளிகை யொன்றின் பின் புறத்தோட்

டச் சுவர் காணப்பட்டது. அச்சுவர் சுமார் பத்தடி உயர மிருந்தது. சுவரின் புறத்தை யடைந்ததும் கார் வண்ணன் சுவரில் சாய்ந்து நிற்கச் செழியன் அவன் மீதேறிச் சுவரின் மேற்புறத்தையடைந்தான். பிறகு அதன்மேல் படுத்துத் தன் ஒரு கையைத் தொங்க விட்டான். கார்வண்ணன் அக்கையைப்பற்றிக்கொண்டு மேலேறினுன்.

பிறகு அவர்கள் சுவரின் மீதிருந்து தோட்டத்தி லிறங்கினர். அப்போது நாயொன்று குரைத்துக் கொண்டு அவர்களை நோக்கி ஓடி வந்தது. அதைப் பின் தொடர்ந்து தோட்டக் காவலனொருவன் வந்தான். கார் வண்ணன் வேலை நீட்டி நாயை அடக்க முயன்ருன். செழியன் தன் வலது கையை உயரத் தூக்கிக், "குமர னும் இடும்பனும் வந்திருப்பதாக உனது தலைவனுக்கு அறிவிப்பாய்" என்ருன். காவலன், "குமரனும் இடும் பனுமா! வாருங்கள்! வாருங்கள்!" என்று மரியாதை யாக அழைத்துச் சென்று மாளிகையை யடைந்து அதன் பின்புறத்திலுள்ளதொரு அறையைத் திறந்து அதனுட் சென்று தங்குமாறு கூறிவிட்டுச் சென்ருன். அவ்வறை விருத்தினரைத் தங்கியிருக்கச் செய்வதற் கென்றே அமைந்ததுபோலக் காணப்பட்டது. படுக்கை வசதி நன்கமைந்திருந்தது. செழியனும் கார்வண்ண னும் உட்சென்று தாளிட்டுக்கொண்டு படுத்துறங்க லாயினர்.

விடியலில் காவலன் வந்து கதவைத் தட்டினுன். உடனே இருவரும் விழித்தெழுந்து கதவைத் திறந் தனர். காவலனுடன் வந்திருந்த ஒற்றர் தலைவன் வணக்கம் தெரிவித்துவிட்டு, " அரசே, தாங்கள் வரப்

போவதை எனக்கறிவியாது திடீரென வந்துவிட்டீர்களே; தெரிவித்திருந்தால் தக்க ஏற்பாடுகள் செய்திருப்பேனே! அது கிடக்க. இப்போது எளியேனுக்குக் கட்டளை யாதோ?" என்ருன்.

**செழியன் :** நாங்கள் இன்றே இந்நகர் விட்டுச் செல்லல் வேண்டும். அரச காவலர் எங்களைத் தேடியலைந்து கொண்டிருக்கின்றனர். அவர்களறியாது யாங்கள் செல்ல வேண்டும்.

**ஒற்றர் தலைவன் :** நல்லது. இன்னும் சிறிது நேரத்தில் கோட்டை வாயிற் கதவுகள் திறக்கப்படும். உடனே வெளிச் செல்ல வாணிகச்சாத்து ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது. அதனுள் ஒரு பகுதியாக எளியேனது சரக்குகளும் பணியாட்களும் அமைந்துள்ளன. அப்பணியாட்களுள் இருவரை இப்போதே தருவிக்கின்றேன். அவர்களுக்குப் பதிலாக தாங்கள் அமைந்து வெளியேறிவிடுங்கள்.

**செழியன் :** நன்று, அங்ஙனமே!

பிறகு ஒற்றர் தலைவன் தான் கூறியவாறே செய்தான். கார்வண்ணனும் செழியனும் வாணிகச் சாத்துடன் கலந்தனர். அவர்கள் கோட்டை வாயிலை அணுகியபோது, அரச காவலர் அங்கு வந்து, அச்சாத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஆராய்வாராய், அவர்களது சரக்குகளையும், பணியாட்களையும்பற்றி ஆராய்ந்தனர். சாத்தின் தலைவனிடம் அதனைப் பற்றிய பட்டியலை வாங்கி அதன்படி யாவும் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பார்த்தனர். கார்வண்ணனும் செழியனும் பட்டியலிற் கண்ட முனியனும் இருளனு

மாக விருந்தனர். அதனால் யாவும் சரியாகக் காணப் படவே, வாணிகச் சாத்து வெளியிற் செல்லவிடப் பட்டது. மேற்கண்டவாறு நகரைவிட்டு நீங்கிய அவர் கள் மேற்கு நோக்கிச் சேரநாட்டிற்குச் செல்ல வழி நடக்கலாயினர்.

## 6. சேரநாட்டில் செழியன்

செழியனும் கார்வண்ணனும் வழி நடந்து சில நாட்களில் சேரநாட்டை யடைந்தனர். அப்போது ஓணநாள் விழா ஆரம்பமாகும் நிலையில் இருந்தது. நாட்டுப்புறங்களிலிருந்து மக்கள் கூட்டங் கூட்டமாக வஞ்சிமாநகரை நோக்கிச் சென்றவாறிருந்தனர். ஆங் காங்கிருந்த இலஞ்சிகளும், தென்னந் தோப்புக்களும் புத்தழகு பெற்று வரப்போகும் விழாவை எதிர்நோக்கி மகிழ்ச்சி கொண்டிருப்பன போலக் காணப்பட்டன.

தலை நகராகிய வஞ்சிமா நகர் சிறந்தவகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மகர தோரணங்கள், பூரண கும்பங்கள், பொலம்பாலிகைகள், பூம்பந்தர்கள் இவை ஆங்காங்குத் திகழ்ந்தன. அரண்மனை மிக்க அலங் காரமாக விளங்கியது. அதனெதிரில் மிகப் பெரிய பந்தரொன்று காணப்பட்டது. அதனுள் அமைந்த பரண், தவிசுகளின் வரிசை முதலியவற்றை நோக்க அது பந்தய விளையாட்டுக்கள் நிகழ்தற்குரியவிடமெனத் தெற்றெனப் புலப்பட்டது. பிரயாணிகளிருவரும், அவ் வூர் ஓரமாக அமைந்திருந்ததொரு உணவு விடுதியில் தங்கலாயினர்.

மறு நாள் விழா தொடங்கியது. அரண்மனைக்கு எதிரில் இருந்த பெரிய பந்தலில் மக்கள் குழுமி யிருந்த னர். ஆங்கோர் புறமாக விருந்த உயர்ந்த இருக்கை களில் அரசர், ஐம்பெருங் குழுவினர், எண்பேராயத் தார், அரச குடும்பத்தார், எட்டி, காவிதி என்னும் பட் டங்கள் பெற்றுயர்ந்த செல்வக் குடும்பத்தார் முதலி யோர் அவரவர்க்கெனக் குறித்த விடங்களிலமர்ந்திருந் தனர். செழியனும் கார்வண்ணனும் பொதுமக்க ளோடு பொதுமக்களாய்ப் பரணில் உட்கார்ந்திருந் தனர். மக்கள் ஆரவாரம் கடலொலிபோல முழங் கியது. பற்பல வாத்தியங்களின் ஒலிகள் காதுகளைத் துளைத்தன.

குறித்த நேரத்தில் பந்தய நிகழ்ச்சிகள் தொடங் கின. முதலில் குறிபார்த்து அம்பெய்தல் நிகழ்ந்தது. வில்லேந்திய வீரர் பந்தலின் நடுவிலமைந்திருந்த வெளி யிடத்திலோர்புறம் வரிசையாக நின்றனர். அவர்கட் கெதிரில் குறி இருந்தது. அக்குறி நடுவில் புள்ளியும், அதனைச் சுற்றி வட்டத்திற்குமேல் வட்டமாகப் பல வட் டங்களும் கொண்டதாய் இருந்தது. வீரர் விற்களை வளைத்து அம்பெய்தனர். வட்டங்களுக்கு நடுவிலுள்ள புள்ளி அவர்களுக்கு இலக்கு. அவர்கள் எய்த அம்பு களில் எதுவும் புள்ளியின்மீது பாயவில்லை. அவற் றுள் ஒன்று புள்ளியைச் சுற்றியிருந்த வட்டத்திற்குள் தைத்திருந்தது. அதுவே கூடியவரையில் புள்ளிக் கருகில் தைத்த அம்பாகும். ஆகவே அதனை யெய்த வீரண்ணன் என்பான் வில்லாளிகளுக்குள் முதல்வ னாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றான்.

பின்னர் வாட்போர் தொடங்கியது. இருவர் இருவராக நூற்றுவர் வாட்போரில் இறங்கினர். அவருள் தோற்ருர் நீங்க நீங்க இறுதியில் எஞ்சிநின்றவன் முன் கூறிய வீரண்ணனே. பின்பு ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. அப்பால் இரவு பத்து நாழிகைப் பொழுதிற்கு அப்பந்தலை விட்டுக் கூட்டம் கலைந்தது. ஆயினும் தெருக்களில் ஆங்காங்குச் சாக்கைக் கூத்து, கதகளி, பொய்க்கால் குதிரையாட்டம் முதலியன விடிய விடிய நடந்துகொண்டிருந்தன.

மறுநாள் பிற்பகல் மீண்டும் பந்தலில் பந்தயங்கள் தொடங்கின. அன்று மற்போர். யானைக்குட்டிகள் எனத் தோன்றிய வீரர் இருவர் இருவராய் இருபது பெயர்கள் போட்டியிட்டனர். அவர்களில் முற் கூறிய வீரண்ணனும் ஒருவனுயிருந்தான். அவன் உருவில் சற்று மெலிந்தவனுகக் காணப்பட்டாலும் உரத்தில் மிகுந்தவனு யிருந்தான். முன்போலவே தோற்றவர் நீங்க நீங்க இறுதியில் வெற்றி வீரனுய்த் திகழ்ந்தான் வீரண்ணன்.

இவ்வாறு வீரண்ணன் எல்லாப் போர்களிலும் மேம்பட்டு விளங்கவே சேரவரசன் **கோச்சேரமான் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை** அவன் மீது மிக்க அன்புகொண்டு, அவனைத் தன்னிடம் வரவழைத்து இன்சொற் கூறிப் பரிசில் மிகுதியும் அளித்தான். அன்றியும் தன் படை முழுவதிற்கும் அவனைத் தலைவனுக ஆக்கினுன்.

விழா பின்னர்த் தொடர்ந்து எட்டுநாளைக்கு நடந்தது. அந்த எட்டுநாளும் பற்பலவகையான கொண்

டாட்டங்கள் கொண்டாடப்பட்டன. கோயில்களில் இறை பூசை சிறப்பாக நிகழ்ந்தது. இல்லங்களிலும் அவரவர் தகுதிக் கேற்பவும், செல்வத்திற்கேற்பவும் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். விழாக்காலம் முடிந்தபின்னர்க் கார்வண்ணனும் செழியனும் அந்நகரி லிருந்த தங்கள் ஒற்றர் அலுவலகத்துக்குச் சென்றனர். அங்கிருந்த ஒற்றர் தலைவன் தானறிந்ததை அவர் கட்கு அறிவிப்பானாய், **சேரர், சோழர், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன்** ஆகிய வேளிர் ஐவர் ஆகியோர் மறுநாள் நள்ளிரவில் அரண்மனைக்குள்ளிருக்கும் இரகசிய ஆலோசனை அறையிற்கூடி ஏதோ செய்தியைக் குறித்து ஆலோசனை நிகழ்த்தப்போவதாக அறிவித்தான்.

**செழியன் :** அவ்விடம் அரண்மனையின் எப்பக் கத்திலுள்ளது ? அதன் அமைப்பு முதலிய விவரங்கள் ஏதேனும் அறிந்திருந்தாற் சொல்லுக.

**ஒற்றர் தலைவன் :** அது அரண்மனைக்குள் தென் புறக் கோட்டைச் சுவரின்பக்கமாக உள்ளது. சுவருக் கும் அதற்கும் இடையில் பத்தடி அகலமாக நடை பாதை உண்டு. நடைபாதையை அடுத்து அக்கட்டி டத்தின் தோட்டச் சுவர் இருக்கிறது. அச்சுவரினின்று உள்ளே அமைந்த கட்டிடம் சுமார் ஐம்பதடி தூரத்தில் இருக்கிறது. தோட்டத்தில் நாய்கள் காவலிருக்கும். அரண்மனைக் கோட்டைச் சுவருக்குச் செல்ல அகழி யைக் கடக்கவேண்டும். தெற்குப்பக்கத்தில் அந்த இடத்திற்கு நேராக அகழியின் கரையில் சாவடி ஒன்று உள்ளது. அதில் இரவு வேளைகளில் எப்போதும்

பதின்மர் காவல் புரிந்துகொண்டிருப்பர். வேறு வழியாக அதனை அடையவேண்டுமானல் அரண் மனைக்குட் புகுந்து செல்லவேண்டும். வழியில் பற்பல வாயில்களும் முற்றங்களும் தாழ்வாரங்களும் உண்டு. அங்கெல்லாம் காவலர் உண்டு. மற்று அங்குச் செல் வோர்க்கு அனுமதிச் சீட்டும் குறிப்புச் சொல்லும் வழங் கப்படும். குறிப்புச்சொல் தடவைக்குத் தடவை மாறு படும்.

**செழியன் :** நன்று. இந்நகரில் நமக்குதவியாக மிக்க நம்பிக்கைக்கு உரியவராக இருப்பவர் யாவர்?

**ஒற்றர் தலைவன் :** அரண்மனைக்குள் அரண் மனைத் தோட்டக்காவலன், அரசியின் பணிப்பெண் களிலொருத்தி, மேற்குக் கோட்டைச் சுவரின் மீதுள்ள கொத்தளங்களில் மூன்ருவது கொத்தளத்தின் தலை வன், பிரதானிகளுள் ஒருவனது உறவினன் ஆகியோர் நம்பிக்கைக்கு உரியவர்கள்.

**செழியன் :** அவர்களுக்கு நமது குறிப்புச் சொல் யாதோ?

**ஒற்றர் தலைவன் :** மறு கட்டளைவரையில் சேந்த னும் பூதனும் என்பது.

**செழியன் :** நமக்கு உண்மையாக உழைக்கக் கூடிய பணியாளர் உன்னிடம் எவ்வளவு பேர் உள்ள னர்?

**ஒற்றர் தலைவன் :** ஆறுபேர் உளர்.

**செழியன் :** அவர்களை நாளையிரவு என்னுடன் வருமாறு சித்தம் செய்க.

**பணியாளன் :** கட்டளைப்படியே.

மறுநாளிரவு பத்து நாழிகைப் பொழுதிற்குச் செழியன், கார்வண்ணன், பணியாளர் அறுவர் ஆகியோர் நகரக் காவலர் வேடம்பூண்டு தெற்குப் பக்கத்து அகழியை அடுத்த சாவடியை நோக்கிச் சென்றனர். அதனருகடைந்ததும் அங்குக் காவலிருந்த காவலர் பதின்மரும் அவர்களை நோக்கி வந்தனர். வந்தவர்களுக்குத் தலைமை வகித்தவன் செழியன் முதலியோரை நோக்கி, "நீங்கள் எப்படையைச் சேர்ந்தவர்கள்? இங்கு வந்த காரணமென்ன?" என்ருன். செழியன் மறு மொழி கூறத் தொடங்கி, "நாங்கள் நான்காவது படை வகுப்பைச் சேர்ந்தவர்கள். இன்று இவ்விடத்தைக் காவல் புரியுமாறு அரசர் எமக்கு உத்தரவிட்டார்" என்ருன். காவலர் தலைவன், "நான்காம் படை வகுப்பின் தலைவர் எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர் தம் படைஞரை இங்கு அனுப்புவதாயின் முன்னரே எனக்கறிவித்திருப்பார். அது நிற்க. அனுமதிச் சீட்டு ஏதேனும் உளதா?" என, செழியன் தன் வாளை உருவிக் கொண்டு, "இதோ அனுமதிச் சீட்டு!" எனப் போருக்கு முற்பட்டான்.

இரு திறத்து வீரரும் வாட்களை யுருவிக் கொண்டு போரிடலாயினர். வாட்கள் மின்னல்போல் மின்னிப் பாய்ந்தன. போர் நீட்டித்தால் வேறு பக்கங்களிலிருந்து காவலாட்கள் உதவிக்கு வரக்கூடும் என்று எண்ணிச் செழியன் சில புதிய அபூர்வ வீச்சுக்களை வீசினன். இதோ ஒரு குத்து! அதோ ஒரு வெட்டு! இங்கொரு வீச்சு! மூவர் எதிரிகள் வீழ்ந்தனர். இக் குறிப்பையறிந்த கார்வண் ணனும்அவ்வாறே இமைக்கு

மளவில் மூவரை வீழ்த்தினன். உடனே மிகுந்திருந்த நால்வர் ஓடத் தொடங்கினர். பணியாட்கள் அவர்களை ஓடவொட்டாது நிறுத்தி அவர்களது கைகால்களைக் கட்டினர். வாயில் துணிப் பந்து அடைத்தனர். யாவரும் சாவடிக்குள் கொண்டு செல்லப்பட்டு அங்கோர் மூலை யில் கிடத்தப்பட்டனர். கார்வண்ணன் பணியாள ரோடு அங்கிருந்து காவல் புரிந்துகொண்டிருக்கச் செழி யன் அகழியைக் கடக்க முற்பட்டான்.

சாவடியில் சிறியதொரு படகு கிடந்தது. அதனை நீரிலிழுத்துவிட்டு அங்கிருந்த துடுப்பொன்றால் அதைச் செலுத்திக் கொண்டு அக்கரை சென்றான் செழியன். சுவரினடியைச் சேர்ந்ததும் தான் ஆயத்தமாகக் கொணர்ந்திருந்த கயிற்றை நுனியில் சுருக்கிட்டுச் சுவர் மீது பற்கள் போல நீட்டிக்கொண்டிருந்த உறுப்புக் களில் ஒன்றின்மீது மாட்டிக்கொள்ளுமாறு வீசினான். அது குறித்த விடத்தைச் சார்ந்து நன்கு பற்றிக் கொண்ட பின் அதன் வழியாய்த் தொத்தி யேறிச் சுவரின் உச்சியை அடைந்தான்.

அங்கிருந்து குறித்த கட்டிடத்தை நோக்கி அதனுட் புக வழி ஏதாவது உளதா என்று கூர்ந்து நோக்கினான். தோட்டச் சுவரின்மீதே மேற்குப் புறமாகச் சென்றால் ஒரு மரத்தை யடையலா மென்றும், அதன்மீதேறி அதன் கிளைகளில் ஒன்றின் வழியாகச் சென்றால் கட்டிடத்தின் மாடியை அடையலா மென்றும் புலப் பட்டது. திரும்பி வருங்கால் மீண்டும் சுவரின்மீது ஏறுவதற்காகக் கயிற்றைப் பத்திரமான, மறைவான இடத்தில் தொங்க விட்டுவிட்டு அவ்விடத்தின் அடை

யாளங்களை மனத்தில் நன்கு பதிய வைத்துக்கொண் டான். பிறகு கயிற்றின் வழியாகக் கீழிறங்கித் தோட்டச் சுவரை யடைந்தான். அது ஓராள் உயரமே யிருந்ததாகையால் அதன்மேல் தாவி யேறினன். அச் சுவரின் வழியாய் மேற்குப் புறம் சென்று அங்கிருந்த மரத்தின்மீதேறிக் கட்டிடத்தின் உச்சியை யடைந்தான். கட்டிடம் அமைதியாய் உள்ளே ஓசை யொன்றும் கேட்காமையாலும், விளக்குகள் இல்லாமையாலும், தோட்டத்தில் நாய்கள் இல்லாமையாலும் கூட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை என்பது தெரிந்தது. பிறகு மாடியினின்றும் கட்டிடத்திற்குட் புக வழியிருக் கிறதா வென்று பார்க்க, அங்கோர் புறத்துக் கூரை தாழ்ந்து ஒரு முற்றத்தின் பக்கமாகச் சென்றது. அதன் வழியாக இறங்கினல் மீண்டும் திரும்புகாலில் விரைந் தேற வழியுண்டா என்று பார்க்க அங்கு ஏதோதோ தட்டுமுட்டுச் சாமான், பேழைகள் முதலியன கிடப்பது தெரிந்தது. உடனே கூடியவரையில் ஓசைப் படா திறங்கி மீண்டும் மேலேற அப்பொருள்களைக்கொண்டு ஒரு வழி செய்து கொண்டான். பிறகு அங்கோர் புறத்திலிருந்த பலகணியைக் கண்டு அதன் வழியே உள்ளே நோக்க, உள்ளே இருட்டாயிருந்தது. அதனல் அங்கிருந்த பொருள்கள் ஒனறும் புலப்படாவிட்டாலும் அந்த அறை பெரிதாயிருக்க வேண்டு மென்று புலப் பட்டது. அதனல் அங்கேயே காத்திருந்து பார்ப்பது என்று தீர்மானித்து அங்கேயே யிருந்தான் செழியன்.

இரண்டு நாழிகை கழிந்தது. ஆள் அரவம் கேட்டது. காவலர் சிலர் வந்து கதவைத் திறந்து விளக்கேற்றி அறையைச் சுத்தம் செய்து தவிசுகளை

ஒழுங்குபட அமைத்துச் சென்றனர். அப்பால் அரை நாழிகைக்குப் பின் **சேரர், சோழர், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்** என்னும் வேளிர் ஐவர் ஆகியோர் உட்புகுந்தனர். யாவரும் தத்தமக்குரிய இருக்கைகளில் அமர்ந்தபின், சேரர், "நண்பர்களே, நாம் முன்னர்க் கூடிப் பாண்டிய நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென உறுதி கொண்டோ மன்ருே? அதனை மிக விரைவில் முடிக்க வேண்டும். ஏனெனில், செழியன் வரவர வலிமை மிகுந்து வருவ தாகத் தெரிகின்றது. அவன் தனது குணங் கொடை முதலியவற்ருல் நாட்டு மக்களது நன்மதிப்பைப் பெற்று வருகின்ருனும். மாங்குடி மருதனுர், குறுங்கோழி யூர் கிழார், குடபுலவியனுர், கல்லாடனுர், இடைக் குன்றூர் கிழார் முதலிய புலவர் பெருமக்கள் அவனது அவைக்களத்துக் கூடி யுள்ளனராம்.

"இளை தாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து"

என்பது பொய்யா மொழியன்ருே? ஆதலால் இப் போதே தக்க திட்ட மிட்டுத் தாக்குதலைத் தொடங்கி விடவேண்டும்" என்ருர்.

**சோழர்:** ஆம். இச் செய்தியை யானே கூற விருந் தேன். அதற்கு முன்னே நீவிரே கூறிவிட்டீர். நிற்க, மற்ருெரு செய்தி! சின்னுட்களுக்கு முன்னர்ச் செழிய னும் அவனது நண்பனெருவனும் கறுப்பன், சிவப்பன் என்னும் புனைபெயர் பூண்டு எமது நகரை யடைந்த னர். எமது நகர்ச் சிலம்பக்கூட ஆசிரியர், அவர்களது செயல்கள் சிலவற்றைக் கண்டு ஐயுற்று, அவர்கள்

பாண்டிய நாட்டு ஒற்றர்களாயிருக்க வேண்டுமென ஊகித்தனர். பின்னர் அவர் அச்செய்தியை எனக் கறிவிக்க, அவர்களை உடனே சிறை செய்தோம். சிறைக் காவலர் சிறிது கவனக் குறைவாயிருக்கவே அவர்கள் தப்பியோடிவிட்டனர். மற்று, அவர்கள் விற்றிறம், வாட்போர் இவற்றில் சிறந்து காண் கின்றனர். ஆகவே குருளை பெரிதாகிச் சிங்க வேறு ஆகுமுன் விரைந்து அதனைப் பிடித்தடக்க வேண்டும்.

**சேரர்:** அது கிடக்க! அவன் திறம் நம்மை என்ன செய்யமாட்டும்? உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

**சோழர் :** அவனை யார் பொருட்படுத்துகிறார்கள்? முட்டிக்காற் கழுதை பட்டவர்த்தனப் பரியாமா? மேலும் நாம் யாவரும் கூடி யெதிர்க்கையில் அவன் என்ன செய்யமாட்டுவான்?

**திதியன் :** பாண்டியன் கிடக்க. அவனது படையில் சிறந்த பல தானைத் தலைவர் உள்ளனர். அவர்களால் பயிற்றப்பட்டதால் சிறந்த போர்ப் பயிற்சி பெற்ற படையும் அவனிடம் உள்ளது. ஆதலின் நன்கு ஆலோசித்துச் சிறந்த திட்டமிட வேண்டும்.

**எழினி :** நம்மிடமில்லாத சிறந்த படை அவனிடம் என்ன உள்ளது? நமது படைஞர் போர்ப் பயிற்சி பெற்றிருக்கவில்லையா? மற்று, நாமே முன்னின்று போரை நடத்தப் போகின்றோம். நாமென்ன வலியில் அப்படைத்தலைவர்க்குக் குறைந்தவர்களா?

**எருமையூரன் :** அவன் எத்துணைப் பெரிய படையோடு வரினும், அவன் படைத் தலைவர் யாவரும்

ஒன்று கூடி எதிர்த்து வரினும் அஞ்சாது கற்சிலை போல் எதிர் நின்று யாவரையும் ஒரு நொடியில் அழிக்க நமக்கு ஆற்றல் இல்லையா ?

**இருங்கோவேள் :** ஒரு சிறுவன் வலியை இவ்வாறு மிக மதித்துப் பேசுவானேன் ? போர்த் திட்டத்தைப் பற்றிப் பேசுவோம்.

**பொருநன் :** அவன் இன்னும் ஐம்படைத் தாலியை அவிழ்க்கவில்லை. கிண்கிணி களையவில்லை. ஏதோ சில படைத்தலைவர் துணை கொண்டு என்ன செய்துவிட இயலும்? போரை நடத்தும் முறைமையை ஆராய்வோம்.

**சேரன் :** நன்று. பாம்பு சிறிதாயினும் வலிய மூங்கில் தடி கொண்டு அடிக்க வேண்டும். யாவரும் ஒன்றுகூடி ஒருமுகமாகத் தாக்கினால் நொடியில் அவனது நாடு முழுதும் நமதாகிவிடும்.

**சோழர் :** இந்தப் பெரிய பகைக்கு யாவரும் ஒன்றுகூடி யெதிர்த்தல் வேறு வேண்டுமோ? கோழியடிக்கக் குண்டாந்தடியா ? ஆளுக்கொருபுறம் நின்று தாக்கி அவரவர் கைப்பற்றிய இடங்களை அவரவர் கைக்கொள்ளுவோம். இதுவன்றோ முன்னர் நாம் ஆலோசித்தது !

**இருங்கோவேள் :** நம்மில் வேறுபாடு இருத்தலாகாது. தனித் தனியே நின்று போரிட்டால் ஒருக்கால் ஒருவர் தோற்கவும் கூடும். அந்நிலையில் முடிவில் வெற்றி கண்டால் தோற்றவருக்கு என்ன பங்கு தருவது என்பது பற்றிச் சச்சரவு எழுதல் கூடும். எல்லாவற்றையும் ஆலோசித்தல் நல்லது.

**சேரர் :** பல பல யோசித்தல் வேண்டா. யாவரும் ஒன்றுகூடி ஒருபுறமிருந்து எதிர்த்தல் எல்லாவற்றுக்கும் நல்லது. அதனால் எதிரி வீழ்வது திண்ணம்.

**பொருநன் :** அதுவே எனக்கும் சரியெனப் படுகின்றது.

**சோழர் :** நன்று. அதுவே பெரும்பாலோர் கருத்தாதலின் அவ்வாறே செய்வோம். தாக்குதலைப்பற்றி ஒன்று செய்யலாமெனத் தோன்றுகின்றது. எமது ஒற்றர் வந்து தெரிவித்த மட்டில், நாம் தலையாலங் கானத்து வழியாகச் சென்று தாக்குதல் நலமெனப் புலப்படுகின்றது. ஏனெனில் அந்தப் பக்கம் அவன் வலிமை குறைவு. அவன் தன் தலைநகரினின்று படையை அங்குச் செலுத்திவருமுன் நாம் பலவிடங்களைக் கைப்பற்றிவிடலாம். மற்றும் அங்கு நமது படைகள் தங்கியிருந்து போரைத் திறம்பட நடத்துதற்கும் வசதியிருக்கிறது.

> " கடலோடா கால்வல் நெடுந்தேர் ; கடலோடும்
> நாவாயும் ஓடா நிலத்து "

ஆதலால் வசதியான இடம் வேண்டுமன்றோ ?

**சேரர் :** அங்ஙனேயாக! நண்பர்களே, நுமது கருத்து யாது ?

**எருமையூரன் :** தக்க இடம் என்றால் சரியே! அது நிற்க. வெற்றி பெற்றபின் நாட்டைப் பங்கிட்டுக் கொள்வது எப்படி ?

**பொருநன் :** நாம் யாவரும் சமமேயன்றோ ? முயற்சியும் சமமாகவே செய்யப்படுகின்றதன்றோ ?

**சேரர் :** அதிலென்ன ஐயம்! யாவரும் சமமாகவே பங்கிட்டுக் கொள்வோம்! இதில் தடையுண்டானுல் இப்போதே தெரிவித்துவிடுங்கள் !

**மற்றவர்கள் :** தடையொன்றுமில்லை. அங்ஙனே யாக !

ஆலோசனை முடிந்தது. யாவரும் எழுந்து சென்றனர். செழியனும் தானிருந்த விடத்தைவிட்டு எழுந்தான். தனக்குள், 'யான் சிறுவன் என்பது பற்றி ஏளனமா? சிறுவன் செய்தி என்னவென்று தெரிவிக்கின்றேன். ஆலங்கானத்து வழியாகப் படை யெடுக்கப் போகின்றீர்களோ? எடுங்கள் ! எடுங்கள் ! நாட்டை வென்றடைவதற்குள் பங்கு போடத் திட்டமா? பார்க்கின்றேன் ஒருகை ! உங்களையடக்காவிட்டால் யான் அரச குடியிற் பிறந்தவனு?' என்று பொருமினன். பிறகு வந்த வழியே திரும்பிச் செல்ல லானுன்.

அவன் மதிற் சுவரிலிறங்கி அதன்மேல் ஓடுகையில் தோட்டத்தில் நாய்கள் குரைத்தன. அங்குக் காவ லிருந்த வீரர் நாற்புறமும் ஆராய்ந்து பார்த்து, மேற்குப் புறச் சுவரின் மீது செழியன் ஓடுவதைக் கண்டு, அப்பக்கமாக ஓடிவந்தனர். அவர்களுக்கு முன் நாய்கள் குரைத்துக்கொண்டு ஓடிவந்தன. அவர்கள் தன்னையணுகுமுன் செழியன் சுவரின் கோடியை அடைந்துவிட்டான். அப்போது வீரருள் ஒருவன் அவன் மீது தன் வேலை எறிந்தான். அது செழியனது அங்கியைக் கிழித்துச் சென்றது. பிறகு மற்றும் பலர் அவன் மீது தன் வேல்களை எறிந்தனர். அவை

யெல்லாம் அவனையணுகுமுன் செழியன் சுவரினின்று கீழே குதித்து கோட்டை மதிற்புறமாக ஓடினன். காவலர் மதில் மீதேறி அவன் சென்றவிடத்தை ஆராய்ந்தபோது அவன் முன்னர்த் தொங்கவிட்டிருந்த கயிற்றைப் பற்றிக் கொண்டு சுவரில் பாதியளவு ஏறி விட்டான். அவர்கள் கீழே குதித்து அங்குக் கிடந்த வேல்களை எடுத்து அவன் மீது எறிவதற்குள் அவன் மதிலின் உச்சியை அடைந்துவிட்டான்.

காவலர் அவன் மீது விடாது வேல்களை எறிந்தனர். அவையெல்லாம் தன் மீது படாமல் அவன் சமாளித்துக்கொண்டு கயிற்றை மேலே இழுத்து மறுபுறம் தொங்கவிட்டு அதன் வழியாகக் கீழிறங்கத் தொடங்கினன். அது கண்ட காவலர், "பிடியுங்கள்! பிடியுங்கள்! யாவரும் மறுபக்கம் செல்லுவோம். வாருங்கள்!" என்றனர். ஒருவன், "இங்கே தப்பி விட்டால் ஆயிற்ரு? அகழி யிருக்கிறது. அப்பால் காவற் சாவடி இருக்கின்றது! பிடிபடாமல் போகின்ருனு? பார்ப்போம்! வாருங்கள், காவற் சாவடிக்குச் செல்லுவோம்" என்ருன். யாவரும் அப்பாற் சென்றனர்.

நிற்க. செழியன் காவற்சாவடியை அடைந்தான். அங்கு யாதொன்றும் நடைபெறவில்லை. கட்டிப் போடப்பட்டவர் அங்ஙனமே யிருந்தனர். அவர்களில் ஒருவனது கைகளை மட்டும் அவிழ்த்துவிட்டு, செழியன் யாவரையும் கூட்டிக்கொண்டு ஒற்றர் அலுவலகம் சென்ருன்.

## 7. செழியன் வஞ்சினம்

சேரநாட்டினின்று திரும்பிய செழியன் தன் அவைக்களம் அடைந்தான். சேரன் முதலியோர் மந்திராலோசனையில் அவனைப்பற்றிக் கூறிய செய்திகள் அவன் மனத்துள் அடிக்கடி தோன்றி அவனை வருத்திக் கொண்டிருந்தன. அதற்கு எதிரிடையாகச் சரியான வகையில் ஏதேனும் செய்யாமலிருந்தால் அவனுள்ளம் வெடித்துவிடும்போல் இருந்தது. விரைந்து அவையைக் கூட்டினான். அதில் அமைச்சர், புரோகிதர் முதலிய ஐம்பெருங் குழுவினரும், கரணத்தியலவர், கருமவினைஞர் முதலிய எண்பேராயத்தினரும், நகர மாந்தர் யாவரும் அவரவர்க்குரிய இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். யாவரும் சூழ அரியணையில் அமர்ந்திருந்த செழியன் மனத்துள் அடக்கிவைத்திருந்த ஆத்திரம் அவ்வளவினையும் வெளியிற் கொட்டலானான்:

"அவைக்களத்துப் பெருமக்களே, கேளுங்கள்!

நமது அயல் நாட்டு வேந்தராகிய சேர சோழர் மற்றும் சிற்றரசராகிய வேளிர் சிலர் ஆகியோரது மனப்பான்மையும் செயல்களும் மிக இழிந்தனவாயிருக்கின்றன. அந் நாடுகளினின்று நாளும் நமது ஒற்றர் கொணரும் செய்திகள் மனவருத்தத்தை மிகுவிக்கின்றனவா யிருக்கின்றன. எமது தந்தை இறந்த அன்றே அவர்கள் நமது நாட்டைத் தமதெனக் கருதிவிட்டனர். எமது தந்தை மைந்தரில்லாது இறந்தனரா? அன்றி, நாடு அரசில்லாமல் தவிக்கின்றதா? கூறுங்கள்!" என்றான்.

உடனே இடைக்குன்றூர்கிழார் எழுந்து, "பாண்டிய நாடாளும் உரிமை பார் தோன்றிய நாள் தொட்டுப் பாண்டியர்க்கு உரிமையாயிருக்கப் பிறர் அதனைக் கவர நினைக்கின்றார்களோ? அதுவும் உரியவர் இருக்கையில் கவர நினைக்கின்றார்கள்! அழகிது! அழகிது!" என்றார். பின்னர்க் குடபுலவியனார் எழுந்து, "வேந்தர் பிற நாட்டின் மீது படை யெடுத்தல் இயல்பே. 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பது பழமொழியானாலும் அவ்வாறு அடங்கியிருப்பவன் அரசனாகான் என்று அரசநீதி புகல்கின்றது. ஆயினும் அவ்வாறு படையெடுத்தல் எதற்கு எனச் சிந்தித்தல் வேண்டும். வேற்று நாட்டு வேந்தரினும் தான் மேம்பட்டு விளங்குதற்கே அவ்வாறு செய்யவேண்டுமன்றி அவர்களது நாட்டைக் கவருவதற்கன்று. அங்ஙனம் கவர நினைப்பாரே யானால் அது அவர்களுக்கு நன்மையைத் தராது," என்று கூறி யமர்ந்தார்.

பிறகு செழியன் தொடர்ந்து, "நமது நாட்டைக் கவர மட்டுமல்லாது அக்கயவர் எம்மைச் சிறியன் என இகழ்ந்தனர். நமது நாட்டின் மேம்பாட்டைப் பற்றியும், எமது குணஞ்செயல்கள் சிலவற்றைப் பற்றியும், அவர்களது நாட்டுப் பொதுமக்கள் சிலர் ஏதோ சிறப்பாகக் கூறினராம். அதுபொழுது அவர்கள், தமது அவைக்களங்களில் வெளிப்படையாக நமது நாட்டைப் பற்றியும், எம்மைப்பற்றியும் கண்டவாறு இகழ்ந்து கூறி எள்ளிநகையாடினராம். அது மட்டுமல்ல; எம்மோடு அளவளாவும் புலவர் பெருமக்களாகிய உங்களைக் குறித்தும் ஏதோ சொல்லினராம்:

'செழியன் புலவரைப் பெருமைப்படுத்துவதனுல் என்ன ஆகிவிடப் போகின்றது? அவர்கள் சமாதானம், ஒற்றுமை என ஏதாவது பிதற்றுவார்கள். அவற்றிற் கெல்லாம் யார் செவி கொடுக்கப் போகின்ருர்கள்? அந் நாடு இப்போதே எமதாய் விட்டதென்பதில் ஐயமில்லை' என்று அவர்கள் பேசியதாகத் தெரிய வருகின்றது."

இச்சமயத்தில் **கல்லாடனுர்** எழுந்து, "நாடு உரியவர் வசம் இருக்கும்போதே தங்களிடம் இருப்பது போலக்கருதி விட்டனர் போலும்!" என்ருர். அது கேட்ட செழியன், "ஆம்; யான் சிறியன். ஆகையால் நாட்டைக் கைப்பற்றுவது கிள்ளுக் கீரைபோல மிக்க எளிமையானதாகக் கருதி விட்டனர். அவைக்களத்தில் எம்மைப் பற்றிய பேச்சு வந்தபோது ஒருவர் எமது வலிமையைச் சிறிதுமிகுத்துக் கூறினராம். அவ்வளவில் சேரர், **உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந் தாகுமா?** என்ருர். சோழர், **தும்பு தூணுகுமா?** என்ருர். வேளிரிலொருவர், **விரல் உரலாஞல் உரல் என்ன வாகும்?** என்ருர். மற்ருெருவர் **முட்டிக்காற் கழுதை பட்டவர்த்தனப் பரியாமா?** என்ருர்.

அப்போது காவிதிப்பட்டம் பெற்ற ஒரு பெரி யார் எழுந்து, "அது கிடக்கட்டும். நமது நாட்டில் சிறந்த படைத்தலைவர் இருப்பதை அவர்கள் அறியார் போலும்!" என்ருர். செழியர், "படைத்தலைவரைப் பற்றிய பேச்சும் அவர்களது அவையில் எழுந்தது. அப்போதவர்கள் 'ஏதோ சில படைத்தலைவர்களால் என்ன செய்துவிட இயலும்! பெரிய படையன்ருே

வேண்டும்! அன்றியும் அரசன் வலிமைவாய்ந்திருக்க வேண்டும். படைத்தலைவரைப் பட்டம், பதவி, பணம் இவற்றால் பிறர் வசப்படுத்தி விடுதலும் கூடுமன்றோ?" என்றனராம்.

அக்காலை படைத்தலைவருள் தலைமைதாங்குகின்றவர், "படைத்தலைவர்கள் என்றால் அவர்களுக்கு நேர்மை இல்லை என்று கருதிவிட்டனர் போலும். பட்டம், பணம், பதவி ஆகிய எவற்றையும் விரும்பாமல் **உப்பிட்டவரை உள்ளளவும் நினை** என்பதற்கிணங்கச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பவர் இல்லை என்று எண்ணிவிட்டார்களோ? யாங்கள் வழி வழியாகப் பாண்டியரது படைத்தலைவர்கள் என்பதைப் போர் நேரும்போது அவர்களுக்குத் தெரியக்காட்டிப் புத்தி புகட்டுவோம்" என்றார்.

செழியர், "பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டும் சுற்றத்தார்களாகிய உங்களது நேர்மை உலகறிந்ததே! அதுபற்றி வருந்தல் வேண்டா! அது நிற்க. யாவரும் கேளுங்கள்! கேளுங்கள்! மேற்கண்டவாறு நம்மையெல்லாம் இகழ்ந்து சிறு சொற் சொல்லிய அந்த வேந்தரை, நாளைப் போரில் அவர்கள் சின்னபின்னமாகுமாறு தாக்கி, அவர்களது முரசங்களோடு யாவரையும் ஒருங்கே வெல்லாமற் போவேனேயானால், 'எனது குடைக்கீழ் வாழும் எனது குடிகள், எம்மைப்பிறர்க் கடிமையாக்கிய கொடியன் எமது அரசன்' என என்னை இகழ்வாராக! அவ்வாறிகழ்ந்து கண்ணீர் விட்டழுது எமது குடியைத் தூற்றுமாறு செய்த கொடுங்கோலனாக யான் ஆவேனாக! மற்றும் உலக முழுதும் புகழும் **மாங்குடி மருதனார்** முதலாக,

தோலா நாவின் நல்லிசைப் புலவர் எவரும் எனது நாட்டைப் பாடாது ஒழிக! இன்னும் என்னால் காக்கப் படும் எனது சுற்றத்தார் துன்பமடையும் வண்ணமும், ஈயென இரப்பார்க்கு இல்லை என்னும் வண்ணமும் யான் மிக்க வறுமைத்துன்பத்தை அடைவேனாக" என்று வீராவேசத்தோடு பேசினான்.

இவ்வஞ்சினத்தைக் கேட்ட அவையோர் யாவரும் 'ஆ! ஆ!' என்று அஞ்சினர். ஆங்காங்குக் கூட்டங் கூட்டமாய் முணு முணுத்தவாறு, "ஆ! என்ன ஆகப் போகின்றதோ தெரியவில்லையே! பகைவரோ படை யெடுக்கத் துணிந்து விட்டனர். அரசரோ வஞ்சினங் கூறிவிட்டனர். விளைவு யாதாகுமோ?" என்று பேசலாயினர்.

## 8. வீரண்ணன் ஒற்றறிதல்

சேர நாட்டில் செழியன் ஒற்றறிந்து சென்றபின், சேரன் முதலியோர் மீண்டுங் கூடி ஆராயலாயினர். "நமது இரகசிய ஆலோசனைச் செய்தியை எதிரியின் ஒற்றனொருவன் அறிந்து சென்று விட்டானே! அதனால் நமது திட்டங்களை மாற்றி யமைக்க வேண்டியது அவசியமன்றோ?" என்று ஒருவர் கூறினார். சேரர், "அது அவசியமில்லை என எண்ணுகின்றேன். ஏனெனில் ஒற்றனை நாம் தோட்டச் சுவரின் மீதன்றோ கண்டோம். நமது ஆலோசனைக் கூடம் எவ்வளவு பாதுகாப்பானது! அதனால் நமது உரையாடலை அவன் கேட்டிருக்க இய லாது. ஒருகால் அவன் அப்போதுதான் அங்கு வந்திருப்பான்" என்றார். சோழர், "இரகசிய

ஆலோசனைக் கூடத்தின் இருப்பிடத்தை யறிந்தவன், அந்த எங்ஙனமோ நமக்கு முன்னால் வந்து ஒட்டுக் கேட்டிருத்தலும் கூடும்! எதற்கும் திட்டத்தை மாற்று வதே நல்லதென எண்ணுகின்றேன்" என்றார்.

அப்போது அருகிலிருந்த வீரண்ணன் இரும் பொறையை நோக்கி, "அரசே, அடியேனுக்குக் கட்டளையிடுங்கள்! யான் பாண்டிய நாடு சென்று, இங்கே ஒற்றறிய வந்தது யார்? அவன் ஒற்றறிந் தானா இல்லையா? ஒற்றறிந்திருந்தால் நமது திட்டங் களுக்கு எதிராக அவர்கள் போடும் திட்டங்கள் யாவை? என்பனவற்றைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து வருகின்றேன்" என்றான். அது கேட்ட சேரன், "அதுவும் சரியே! வேந்தரே, நமது வீரண்ணர் திறத்தை முன்னர் நாம் நேரிற் கண்டோமன்றோ? அவர் சென்று ஒற்றறிந்து வரட்டும். அதுவரை நமது திட்டங்கள் அப்படியே யிருக்கட்டும்" என்றார். உடனே **இருங்கோவேள்** எழுந்து, "நாம் அமாவாசையன்று நாளைக் குறித்திருக்கின்றோமே! அதற்குள் வீரண்ணர் ஒற்றறிந்து வராவிட்டால் என்ன செய்வது?" எனச் சேரர், "அதற்குள் அறிந்து வந்துவிடக் கூடுமென்றே எண்ணுகிறேன். ஏனெனில் நமது திட்டத்தை அவர்கள் அறிந்து அதற்கேற்றவாறு செயலாற்ற முற்பட்டால், அமாவாசைக்குள் அவர்களது மந்திராலோசனை முடிந்துவிடும். அப்போது வீரண்ணர் திரும்பிவிடக் கூடும். வீரண்ணர் திரும்பிவராவிட்டால் அவர்கள் நமது திட்டத்தை அறியவில்லை; ஆலோசனையும் நிகழ்த்தவில்லை என்பதே பொருளாம். நாம் நமது திட்டப்படி அமாவாசையன்று போரைத் தொடங்க

முற்பட்டு விடுவோம்" என்றார். அதுகேட்ட யாவரும், "அதுவே சரி" எனக் கூட்டம் கலைந்தது. வீரண்ணன் ஒற்றறியப் பாண்டிய நாடு சென்றான்.

வீரண்ணன் வீரனே; வீரங்கூறி வந்துவிட்டான். ஆயினும் செயலாற்றுவதில் கடினம் தென்பட்டது. பகைவர் மந்திராலோசனை மறைவிடம் எங்குள்ளது? அவ்விடத்திற்குப் போய் அபாயமில்லாமல் மீள வழி யாது? இவ்வகையால் நமக்கு உதவக்கூடியவர் யார்? என நெடிது நினைந்தான். புறப்படுகையில் சேரர், "மதுரையிலுள்ள நமது ஒற்றர் தலைவனது உதவியை வேண்டுமானால் பெறுக" என்று கூறியது நினைவிற்கு வந்தது. ஆகவே மதுரையிலுள்ள சேர நாட்டு ஒற்றர் அலுவலகத்தை அடைந்தான். அங்குள்ள ஒற்றர் தலைவன் பாண்டியர் மறைவாக ஆலோசனை நடத்தும் இடம் இருக்குமிடத்தையும் அதன் சுற்றுப்புற அமைப்புக்களையும் விரிவாக எடுத்துக் கூறி, தன்னால் இயன்ற உதவியைத் தான் செய்வதாகவும் அறிவித்தான்.

பிறகு மறுநாள் ஒற்றறிய முற்பட்ட வீரண்ணன், இரவு பத்து நாழிகைப் பொழுதிற்கு மதுரையில் ஏழை மக்கள் குடியிருக்குமிடத்தை அடைந்து அங்குக் குடியில்லாததொரு குடிசையின் திண்ணையில் சற்றுப் படுத்தான். அப்போது சிலர் தெருவழியாக ஆடிப் பாடிச் செல்லலாயினர்.

ஒருவன், "முள்ளு முனையிலே மூணுகுளம் வெட்டினேன்; இரண்டு குளம் பாழ்; ஒன்றில் தண்ணீரே யில்லை!" என்று பாடினான். மற்றொருவன்,

"சாலையிலே ரெண்டு மரம்! சர்க்காரு வச்சமரம்! ஓங்கி வளர்ந்த மரம்! உனக்கேற்ற தூக்குமரம்" என்று பாடினான். வேறொருவன், "காடை கவுதாரி மைனா வாங்கலியோ ஆயாளோ! கட்டிப் போட்டுத் தீனி போட்டால் குட்டி போடும் ஆயாளோ!" என்று பாடினான்.

வீரண்ணன் அவர்களுள் ஒருவனைப் பார்த்து, "என்னசெய்தி? இப்படி எல்லாரும் பாடுகிறீர்களே!" என்றான். அதற்கவன், "நீ இந்த ஊருக்குப் புதியவன் போலும்! உனக்கொன்றும் தெரியவில்லை! இதோ இத்தெருக்கோடியில் சில தினங்களாகக் கூத்து நடைபெறுகிறது. இன்றும் கூத்து உண்டு. அக்கூத்தில் பாடப்பட்ட பாடல்களே இவை. வேண்டுமானால் போய்ப்பார்! கூத்து மிக நன்றாயிருக்கும்!" என்றான். வீரண்ணன், "இன்றைக்கு என்ன கூத்து?" என, "கண்ணன் திருவிளையாடல்" என்றான் அவன்.

பிறகு வீரண்ணன் தெருக் கோடியிலுள்ள வெளியிடத்தை அடைந்தான். அங்கு ஒருபுறம் ஓரமாக ஒரு பந்தல் போட்டிருந்தது. அதனடியில் ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அம்மேடை பந்தலின் உட்புறம் மேற்புறம் எல்லாம் திரை, தோரணம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பந்தலின் எதிர்ப்புறம் வரிசை வரிசையாகச் சுமார் ஆயிரம் மக்கள் அமர்ந்திருந்தனர். வீரண்ணனும் கூட்டத்தோடு கூட்டமாக ஒருபுறம் போய் உட்கார்ந்தான்.

கூத்து தொடங்கும் நேரம் வந்தது. அப்போது, அவனருகில் இருவர் வந்து உட்கார்ந்தனர். அவர்களுள்

ஒருவன் மற்றெருவனைப் பார்த்து, "உன் மனைவிக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்றான். மற்றவன், அப்படியே தானிருக்கிறது" என்றான்.

**முதல்வன் :** மருத்துவன் என்ன கூறுகிறான்?

**இரண்டாமவன் :** சித்த வைத்திய முறைப்படி ஏதோ பற்பம் செய்துதர வேண்டுமாம். அதற்கு பத்துப் பணம் செலவாகும் என்றான். அதற்கு நான் எங்கே போவேன்?

**முதல்வன் :** உன் சம்பளம் என்னவாயிற்று? அதில் ஒன்றும் மிச்சம் பிடிக்க முடியவில்லையா?

**இரண்டாமவன் :** **எங்கள் வீட்டுக்காரருக்கும் அரண்மனையில் சேவகம்** என்றபடி எனக்கு அரண்மனையில் வேலை. ஏற்பட்ட சம்பளத்தை அவர்களும் ஒழுங்காகவேதான் தருகிறார்கள். அது ஒரு கடை வாய்க்குக் கூடப் போதவில்லை. என்ன செய்வது?

**முதல்வன் :** அப்படியானால் வியாதி தீருவது எப்படி?

**இரண்டாமவன் :** ஏதோ கடவுள் விட்ட வழி.

இச்சமயத்தில் திரை தூக்கப்பட்டது. அதனுள் ஒரு வீடு காணப்பட்டது. அது ஒரு இடையன் வீடு. இடையன் பால் கறந்து கொண்டிருந்தான். அவன் மனைவி ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு அருகில் நின்றுகொண் டிருந்தாள். வீட்டின் பின்புறமிருந்து கிருஷ்ணன் கையில் புல்லாங்குழலுடன் வந்தான். உடனே இடையன் மனைவி, "ஏ திருட்டுக் கிருஷ்ணு!

இங்கே எங்கே வருகிருய்? போ! போ! இங்கே உன் திருட்டு வேலை ஒன்றும் நடக்காது!" என்ருள்.

**கிருஷ்ணன் :** இங்கே ரங்கன இருக்கிருனு?

**மனைவி :** அவன் இங்கே இல்லை. இருந்தாலும் அவனுக்கு வேலையிருக்கிறது. அவன் உன்னேடு வரமாட்டான். போ!

**இடையன் :** அவனைத்தான் முழுவதும் கெடுத்து விட்டாயே! இன்னும் கெடுக்க வேண்டுமா, என்ன? எந்த வீடு திறந்திருக்கிறது. எந்த உரியிலிருந்து எப்படி வெண்ணெய் திருடலாம் என்று நல்ல பாடம் கற்பித்திருக்கிருயே! இதைவிட இன்னும் என்ன வேண்டும்?

**கிருஷ்ணன் :** சரி சரி. நான் வரவில்லை போகிறேன்!

இவ்வாறு சொல்லிவிட்டு மற்ருெரு புறமாக வீட்டினுள் நுழைகிருன். ஒரு தட்டியை நகர்த்தி வீட்டின் உட்புறம் காட்டப்படுகிறது. உள்ளே கம்பத்தில் ஒரு சிறுவன் ஒரு தூணில் கட்டப்பட்டிருக்கிருன். கிருஷ்ணன் உள்ளே சென்று அவனது கட்டுக்களை அவிழ்த்து விடுகிருன். இருவருமாக அங்கு ஒரு உரியிலுள்ள பானையை இறக்கிக் கீழே வைக்கிருர்கள். அச்சமயத்தில் வீட்டுக்காரி உள்ளே வருகிருள். வீட்டுக்காரி மகன் ஓடிவருகிருன். கிருஷ்ணன் பானையிலுள்ள வெண்ணெயை எடுத்து அவள் மேல் வீசுகிருன். வெண்ணெய் அவள் முகத்தில் ஒட்டிக்கொள்கிறது. கிருஷ்ணன் ஓடுகிருன். கூத்துப் பார்ப்பவர் யாவரும் சிரிக்கின்றனர்.

இச்சமயத்தில் முன் பேசிய இருவரில் முதல்வன், “கண்ணபிரான் அருளால் உன் மனைவிக்குச் சுகமாய் விடும் என்றே எண்ணுகிறேன்” என்ருன்.

**வீரண்ணன் :** பணம் இல்லையென்று நம்மால் செய்யக் கூடியதை நிறுத்திவிடலாமா? ஐயா, நீங்கள் யாரோ எனக்குத் தெரியாது. ஆயினும் நான் பணம் தருகிறேன். போய் மருந்து வாங்கிக் கொடும்!

**முதல்வன் :** பார்த்தாயா! கண்ணபிரான் வந்ததும் உனக்கும் நன்மையுண்டாயிற்று.

**இரண்டாமவன் :** புதியவரே, நீங்கள் யாரோ? எந்த ஊரோ?

இச்சமயத்தில் காட்சி மாற்றப்பட்டுத் திரை தூக்கப்பட்டது. வயல் ஒன்றின் அருகில் ஒரு மர நிழலில் முன் பால் கறந்த இடையன் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் மனைவி சோற்று மூட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தாள். அவனருகில் மரத்தில் இரண்டு காளைகள் கட்டப்பட்டிருந்தன. ஒருபுறம் கலப்பை கீழே கிடந்தது. உணவுகொண்டு வந்தவள் ‘தூங்குகிருரே, எப்படி எழுப்புவது! எழுந்திருக்கட்டும்’ என்று சொல்லிவிட்டு அவனருகில் வேறுபுறம் திரும்பி உட்கார்ந்தாள். கிருஷ்ணன் மெதுவாக வந்து அவளது பின்னலுக்கும் தூங்குகிறவனுடைய தலைமயிருக்கும் சேர்த்து ஒரு முடியிட்டுவிட்டுப் பின்னல் நின்ருன். அப்போது அவளுடைய மகன் மற்ெருரு மரத்தின் மறைவிலிருந்து வெளி வந்தான்.

அவனைப் பார்த்ததும், உட்கார்ந்திருந்தவள், “போக்கிரிப் பயலே, காலையில் கிருஷ்ணனேடு ஓடினையே!

வந்தாயா வழிக்கு! உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று கூவிக்கொண்டு எழுந்தாள். அப்போது சடை முடியிடப்பட்டிருந்ததால் உடனே பின்னல் இழுக்கப் பட்டாள். அதே சமயத்தில் தலைமயிர் இழுக்கப்பட்ட தால், தூக்கம் நீங்கி எழுந்த இடையன் கோபங் கொண்டு மனைவியைத் திட்டிவிட்டு முடிச்சை அவிழ்க்க லானான். யாவரும் சிரிக்கின்றனர்.

அப்போது ரங்கன் மெதுவாக, இல்லையம்மா! இனி மேல் அந்தக் குறும்புக்காரக் கிருஷ்ணனோடு நான் சேர வில்லையம்மா!" என்று அழுகுரலில் கூறிக்கொண்டே பெற்றோர் அருகில் வந்தான். அப்போது கிருஷ்ணன், "அம்மா, நீங்கள் கோபிக்க வேண்டாம். நான் இனி மேல் ரங்கனை என்னோடு கூட்டிச் செல்லமாட்டேன். தவிர இன்னொன்று: முன்னே உங்கள் கறுப்புக் கன் றுக்குட்டி காணாமற் போயிற்றல்லவா? அது அகப்பட்டு விட்டது. அதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருவதற்காகவே நாங்கள் இருவரும் போனோம்." என்றான்.

இடைச்சி, "கறுப்புக் கன்றுக்குட்டியா? என் அருமைக் கறுப்புக் கன்றுக்குட்டியா? அது அகப்பட்டு விட்டதா! எங்கே அது? பொய் சொல்லக் கூடாது! உண்மையாகவா அகப்பட்டுவிட்டது?" என்றாள். கிருஷ்ணன், "ஆம், பொய்யா, அதோ பாருங்கள்! உங்களைக் கண்டு உங்களிடம் ஓடி வருகிறது" என்றான். அப்போது அங்கே ஒரு கறுப்புக் கன்றுக் குட்டி ஓடி வந்தது. இடைச்சி, "சரி சரி போங்கள்!" என்றாள். இதற்குள் முடிச்சும் அவிழ்க்கப்பட்டுவிட்

6

டது. இடையன் அவள் கொணர்ந்த சோற்றை உண்ணலானன். இடைச்சி! "ஏ, ரங்கா காலே போன வன் சாப்பிட்டாயோ, என்னவோ! வா, சாப்பிடு" என்ருள். அவனும் சாப்பிட ஆரம்பித்தான். கிருஷ் ணன் அப்போது போகத் தொடங்க, அவள், "வா, நீயும் சாப்பிடு! என் கறுப்புக் கன்றுக்குட்டியைத்தேடிப் பிடித்துத் தந்தாயே! நீ மிகவும் நல்லவன்! இந்தா, இந்தச் சட்டியில் வெண்ணெய் நிறைய இருக்கிறது. உனக்குத்தான் வெண்ணெய் என்ருல் பிடிக்குமே, எடுத்துக்கொள் இதை!" என்ருள். திரை போடப் பட்டது. உடனே முன்னேய உரையாடல் தொடங்கியது.

**இரண்டாமவன் :** உங்கள் வரலாறு ஒன்றும் சொல்லவில்லேயே!

**வீரண்ணன் :** என் பெயர் வீரப்பன். யானிருப் பது நாகர் கோவில். இப்போது என் அத்தைப்பாட்டி வீட்டிற்குச் சோழவந்தானூருக்குச் செல்கிறேன். இதுவே என் வரலாறு.

**இரண்டாமவன் :** நல்லது. தாங்கள் செய்த இந்த உதவியை ஒருபோதும் மறக்கமாட்டேன். தங்களுக்குச் சௌகரியப்பட்டால் இரண்டுநாள் என் வீட்டில் தங்கி விட்டுப் போகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**வீரண்ணன் :** இரண்டுநாள் தங்கியிருத்தல் இய லாது. வேண்டுமானல் நாளே ஒரு நாள் இருந்து செல் லக்கூடும்.

**இரண்டாமவன் :** சரி, நாளே ஒரு நாளாவது தங்கிவிட்டுச் செல்லுங்கள்.

**வீரண்ணன் :** அப்படியே.

பிறகு இருவரும் வீடு சென்றனர். அங்கு வீரண்ணனது நண்பன் மனைவி நோயால் மிக வருந்திய நிலையில் இருந்தாள். அவர்கள் வீட்டில் அன்றுடப் பிழைப்பிற்கே சிறிது கஷ்டம்போலக் காணப்பட்டது. வீரண்ணன் மேலும் வலிந்து கொஞ் சம் பணவுதவி செய்தான். தன் வரலாற்றைப்பற்றி ஏதேதோ கதை கட்டினன். அவனிடம் இனிக்கப் பேசி அவன் மூலமாக அரண்மனை, அரண்மனைக் காவலர், படை, படைத்தலைவர், மந்திராலோசனையிடம், அதற்குச் செல்ல வழி முதலிய எல்லாவற்றையும் அவ் வொரு நாளைக்குள்ளாகவே அறிந்துவிட்டான். மந்திரா லோசனையிடத்தைக் குறித்துத் தனது நாட்டு ஒற்றர் தலைவன் கூறிய செய்திகளினும் சில செய்திகள் அதிக மாகவே இப்போது அறிந்தான். செழியன் மந்திரா லோசனை நிகழ்த்தும் நாளும் நேரமும்கூட இப்போது தெரிய வந்தது. அதாவது மறுநாள் நள்ளிரவில் அது நிகழப் போகிறது என்பதே.

மந்திராலோசனைக் கட்டிடம் அரண்மனைக்குள் ஒருபுறத்தில் இருந்தது. அதனையடுத்து அத்தாணி மண்டபமும், அரண்மனை அலுவலாளர் அலுவல் பார்க்குமிடமும் இருந்தன. அந்த அலுவல் பார்க்கு மிடத்திற்குப் பகலில் நகர மாந்தர் வந்து போவதுண்டு. ஆதலின் காவலர் பகலில் வருவார் போவார்களை அதிக மாகக் கவனிப்பதில்லை. பகலில் அங்குச் சென்று ஏதாவது ஓரிடத்தில் நள்ளிரவு வரையில் மறைந்திருந் தால் பிறகு அங்கிருந்து மந்திராலோசனைக் கட்டி

டத்தை அடையலாம் என்று திட்டமிட்டான். அன்று பிற்பகல் அவ்வலுவலகத்திற்குச் சென்று அங்குமிங்கும் சுற்றி அங்குப் பழைய ஓட்டை உடைசல் சாமான்களைப் போட்டு வைத்திருந்த அறையொன்றைக் கண்டு அதுவே ஒளிந்து கொள்வதற்கேற்றவிடம் என்று குறித்துக்கொண்டான். காவலன் சொல்லிய செய்திகளினின்று தான் ஒளிந்துகொள்ளு மிடத்திலிருந்து மந்திராலோசனைக் கட்டிடத்திற்கு இவ்வாறு செல்லவேண்டும் என்றும் திட்டமிட்டான்.

பிறகு மறுநாள் நூலேணி ஒன்றை ஒரு மூட்டையில் மறைத்து எடுத்துக்கொண்டு பகல் இருபது நாழிகைக்கு அரண்மனை அலுவலகம் சென்றான். யாருங் காணாத சமயம் நோக்கிப் பழைய சாமான்கள் போடும் அறைக்குட் சென்று அம்மூட்டையை ஓரிடத்திற் பதுக்கினான். பிறகு அஸ்தமிக்கும் வேளையில் யாவரும் வீடு திரும்பும் சமயத்தில் மேற்குறித்த அறைக்குள் தானும் ஓரிடத்திற் பதுங்கிக்கொண்டான். இரவு ஐந்து நாழிகைப் பொழுதிற்குக் காவலர் அந்தஅலுவலகத்துள் இருந்த யாவரையும் வெளியிற் போகச்செய்து, கதவுகளைத் தாழிட்டனர். அப்போது இரு காவலர் வீரண்ணன் இருந்த அறையின் பக்கமாக வந்தனர். அவருள் ஒருவன் மற்றவனை நோக்கி, " இதனுள் யாராவது இருக்கப்போகிறார்கள் ! " என்றான். மற்றவன், " நன்றாக இருக்கட்டும் ! நாம் பூட்டிக்கொண்டு செல்லுவோம். உள்ளே யிருக்கும் பிசாசு ஒரே அடியில் அவனைக் கொன்றுவிடுகிறது ! வா, நமது வேலையைப் பார்ப்போம் என்றான். பிறகு அவ்வறையை வெளியிற் பூட்டிவிட்டு அவர்கள் சென்றனர்.

தனியே விடப்பட்ட வீரண்ணன் நூலேணியை எடுத்துக்கொண்டு அவ்வறையின் ஒரு மூலையிலிருந்த மாடிப்படி வழியாக மேலேறி, தாளிடப்பட்டிருந்த மாடிக் கதவைத்திறந்துகொண்டு மாடியை அடைந் தான். அங்குப் படுத்தவாறே ஊர்ந்து சென்று மாடி யின் ஒரு ஓரத்தை யடைந்தான். அங்கே அரண் மனைக் கோட்டைச் சுவரின் பகுதி அவ்விடத்தோடு சேர்ந்திருந்தது. அங்கொரு வசதியான இடத்தில் நூலேணியைக் கட்டி அகழியின் புறமாகத் தொங்கவிட் டான். பிறகு மாடியின் மற்ருெரு கோடியை அடைந் தான். அங்கிருந்து மந்திராலோசனைக் கட்டிடத்திற்குச் செல்லவேண்டுமாஞல் ஒரு கட்டிடத்துப் பின்புறச் சுவர் வழியாக சுமார் இருபதடி நடக்கவேண்டும். அப் போது கட்டிடத்தின் மாடியை அடையலாம். மாடியி லிருந்து கீழே வருவதற்கு வழியில்லை. என்ன செய் வது என்று அவன் ஆலோசித்து இருக்கும்போது அரசன் இருப்பிடத்தினின்று மந்திராலோசனை யிடத்திற் குச் செல்ல இரகசியச் சந்துவழி ஒன்று உண்டு என் பது ஞாபகத்திற்கு வந்தது. அது எங்கிருக்கிறது என்று பார்க்க முன் கூறிய சுவர் வழியாகச் சென்று அப்பால் பத்தடி தூரம் வேறு சுவர் வழியாக வேறு பக்கம் செல்லவேண்டும் என்று கண்டான். அவ்வழியாக அரசன் மந்திராலோசனைக் கட்டிடத்தை அடைந்தபின் தான் அச்சந்தில் இறங்கி ஒற்றறிவதே நலம் என்று தீர்மானித்தான். பிறகு அம்மாடியின் மேல் மறை வானதொரு இடத்தில் உட்கார்ந்து அரசன் போக்கைக் கவனித்தவாறு இருந்தான். அப்போது பத்து நாழி கைப் பொழுது ஆகியிருந்தது.

இவ்வாறிருக்க நள்ளிரவில் செழியன் முன் குறித்த சந்து வழியாக ஆலோசனைக் கட்டிடத்திற்குச் சென்ருன். ஒரு காவலன் கையில் தீவர்த்தியுடன் அரசன் முன்பு சென்றதால் இச் செய்தி நன்ருகத் தெரியவந்தது. அரசனைக்கொண்டுபோய் விட்ட பின் அக்காவலன் மீண்டும் சந்தின் வழியாகவே திரும்பிச் சென்று விட்டான். அவன் போனபின் வீரண்ணன் சுவர்களின் வழியாகச் சந்தை யடைந்து உள்ளிறங்கி ஆலோசனையிடத்தின் பக்கமாக வந்தான். அங்கோர் வாயிலிருந்தது. அதன் கதவு உட்புறம் தாழிடப்பெற்றிருந்தது. ஆயினும் அதிலிருந்த சிறிய இடுக்கு உள்ளே சிறிது தூரம் உள்ளவற்றைத் தெளிவாகக் காட்டியது. அதன் வழியாகப் பார்க்கையில் ஆட்கள் இருப்பதும் பேசுவதும் புலப்பட்டன. அப்போது செழியன் "அமைச்சரே, தானைத் தலைவரே, கேளுங்கள் : யான் சேரசோழ நாடுகளுக்குச் சென்றதை நீங்கள் அறிவீர்கள். சேர நாட்டில் மந்திராலோசனையில் சேரர், சோழர், மற்றும் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிரும், ஒன்றுகூடிப் பேசலாயினர். அதினின்று அவர்கள் வருகிற அமாவாசையன்று தங்கள் படை எல்லாவற்றையும் ஒன்று கூட்டி ஆலங்கானத்துப் பக்கமாக இருந்து நமது நாட்டைத் தாக்கப்போகிருர்கள் என்பது புலப்பட்டது. அவ்விடத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அப்பக்கமாக நமது நாட்டுப்பகுதி அவர்கள் தங்கியிருக்கவும் போரிடவும் வசதியாயிருப்பதேயாம். அதையும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆகவே அதற் கேற்றவாறு நாமும் செயலாற்ற

வேண்டும். என்ன செய்யலாம் சொல்லுங்கள் !" என்றான்.

**அமைச்சர் :** அப்பக்கத்தில் நமது படையைக் கொண்டுசென்று வைத்து அவர்களெண்ணத்தைப் பாழாக்குவோம்.

**தானைத் தலைவர் :** அப்பக்கத்தில் நமது பாது காவலை அதிகப்படுத்தினாற் போதாதோ ?

**செழியன் :** அங்ஙனமே செய்வோம். மற்று, அங்கோரிடம் படைகள் தங்கித் தங்களுக்கு அதிக சேதமில்லாமல் எதிரிகளின் படைகளை எதிர்த்தழிக்கத் தக்கவாறு ஓரிடம் உள்ளது. அந்த இடத்தை அவர் கள் வசப்படுத்திக்கொள்ளவே அங்ஙனம் திட்டமிட்ட னர் எனக் கருதுகிறேன். அவர்கட்குமுன் நாம் அவ் விடத்தில் நமது படைகளை வைத்துவிடவேண்டும்.

**தானைத் தலைவர் :** ஆம். அங்குள்ள ஆலமரச் சோலையையே தாங்கள் குறிப்பிடுகின்றீர்கள் என் றெண்ணுகின்றேன். அப்படித்தானே ?

**செழியன் :** ஆம். அது நிற்க. நாம் நமது நாட் டைப் பாதுகாக்கவும் எதிரிகளோடு ஆலங்கானத்தில் போரிடவும் தக்கவாறு என்னென்ன ஏற்பாடுகளை எப் படி யெப்படிச் செய்யலாம் ?

**அமைச்சர் :** நமது நாட்டின் எல்லைப்புறத்து ஆங் காங்குச் சிறு சிறு படைகளை நிற்கச்செய்து அப்படைகள் ஒன்றுக்கொன்று சமயமறிந்து உதவுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம். மிகுந்துள்ள படையை ஆலங்கானத்தில் குவித்து எதிரிகளோடு போரிட

வசதி செய்துகொள்வோம். தலைநகரில் தக்க தலைவர் வசமாக ஒரு பெரும்படை யிருக்கட்டும்.

**செழியன் :** நன்று! நான் இன்று காலை நிமித்தி கரை வரவழைத்துப் படையெடுப்பிற்குறிய நாளைத் தேர்ந்தெடுக்குமாறு கூறினேன். அவரும் அந்த அமா வாசையையே நன்னாளாகக் குறித்தனர். ஆனால் ஆலங்கானத்தை அடைவதற்கு அவர்கள் நம்மினும் அதிகதூரம் கடக்கவேண்டுமாகையால், நாம் அவர்களை முந்திக்கொண்டு விடலாமென்றெண்ணுகின்றேன். ஆகவே, அமைச்சரே, தானைத்தலைவரே, நமது படை களை எங்கெங்கு நிறுத்த வேண்டுமோ அங்கங்கு நிறுத் தவும், அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுமாறு எங் கெங்கு முரசறைவோரை நிறுத்த வேண்டுமோ அங் கங்கு அவர்களை நிறுத்தவும் விரைந்து ஏற்பாடுகள் செய்வீராக! இனிக் கூட்டம் கலையலாம்.

செழியன் இவ்வாறு கூறியதும் வீரண்ணன் தனது இருப்பிடம் விட்டு வேகமாயோடிச் சுவரின் மீதேறி அலுவலகத்து மாடியை நோக்கிச் சென்றான். அப்போது அச் செயலால் சிறிது சத்தம் உண்டாகவே தனதிருப்பிடத்தை நோக்கிச் செல்ல வாயிற் கதவைத் திறந்துகொண்டு சந்து வழியை அடைந்த செழியன் சுவரின்மீது வீரண்ணன் செல்லுவதைக் கண்டான். உடனே அவனும் சுவரின்மீதேறி வீரண்ணனைப் பிடிக் கப் பின்பற்றினான். அவ்வாபத்தை அறிந்த வீரண்ணன் விரைந்தோடி மாடியை அடைந்து தான் நூலேணி தொங்கவிட்டிருந்த பக்கமாக ஓடினான். செழியனும் விடாது பின்பற்றினான். வீரண்ணன் நூலேணியை

அடைந்து அதன் வழியாக இறங்கி அகழியை அடைவ தற்கும் செழியன் நூலேணியை அடைவதற்கும் சமயம் சரியாக விருந்தது. கள்வன் இனி அகழியைக் கடந்து தப்பிச் செல்ல முயல்வானென்றும், தான் இனிப் பின் பற்றுவதால் பயனில்லை என்றும் கண்ட செழியன், உடனே தன் இடையிற் செருகியிருந்த உடை வாளை எடுத்து வீரண்ணன்மீது வீசினன். அக் குத்துவாள் கள்வனது தலையைத் தாக்கியது போலச் செழியனுக்குப் புலப்பட்டது. ஆ! என்றொரு சத்தம் வீரண்ணன் வாயினின்று புறப்பட்டது. அவன் தண்ணீரில் விழுந்ததைச் செழியன் கண்டான். "ஒழிந்தான் கள்வன்!" என்று தனக்குள் கூறிக் கொண்டு சென்றன்.

ஆனல் செழியன் வாள் உண்மையில் வீரண் ணன் தலையைத் தாக்கவில்லை. அது தலைப்பாகையின் ஓரத்தில் குத்தி அதனைக் கீழே தள்ளிவிட்டது. ஆயினும் அதனைப் புலப்படுத்திக் கொள்ளாமல் தான் இறந்து போனதாகவே எதிரி நினைக்கட்டும் என்று எண்ணி அவன் கூச்சலிட்டான். பிறகு அகழியைக் கடப்பதற் காகத் தண்ணீரில் குதித்தான். நீந்திச் செல்லும் போது, "தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று" என்று சொல்லிக்கொண்டு சென்றன்.

சென்றவன் சேர நாடு சேர்ந்து இரும்பொறை யிடம் செய்தி தெரிவிப்பதற்குள் அமாவாசை வந்து விட்டது. சேரர் படை சேர நாட்டினின்று புறப்பட்டு விட்டது. இன்னும் சோழர் படையும், வேளிர் படை யும் அந்தந்த நாடுகளைவிட்டுப் புறப்பட்டுவிட்டன.

வீரண்ணன்தான் ஒற்றறிந்த செய்தியை இரும்பொறை யிடம் கூறியபோது, அவ்வரசன், "இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆலங்கானத்தை அவர்களே முன்னர் அடையட்டும். எங்ஙனமும் போர் நடக்குமன்றோ? அதில் நமது வீரத்தைக் காட்டுவோம்! அது நிற்க. நீ ஒரு பெரும் படையுடன் சென்று பாண்டிய நாட்டின் மேற்குப் பகுதியை விரைந்தடைந்து அங்குள்ள படைகளை வென்று நேராகத் தலை நோக்கிச் செல். அங் குள்ள காவற்படையை வென்று தலைநகரைப் பிடிக்க ஏற்பாடுகளைச் செய். யாங்கள் தலையாலங்கானம் சென்று அங்குப் பாண்டியனுக்குப் பாடம் கற்பித்து விட்டுத் தலைநகரை நோக்கி வருகின்றோம்," என்றான். வீரண்ணனும் தன் வேலை மேற் சென்றான்.

## 9. தலையாலங்கானப் போர்

குறித்த நன்னாளில் போருக்குப் புறப்பட்டான் செழியன். அவனது நால்வகைப் படைகளும் அழகாய் அணி வகுத்துச் சென்றன. மலைகள் நடந்து சென்றாற் போலச் சென்றன யானைகள்; கோபுரங்கள் அசைந் தாடிக் கொண்டு சென்றாற் போலச் சென்றன தேர்கள்; தீக் கொழுந்துகள் புகையோடும் கிளம்பிச் சென்றாற் போலத் துகளிகளை யெழுப்பிக் கொண்டு சென்றன புரவிகள்; கடலலைகள் ஒன்றின் பின் ஒன்றாகச் சென் றாற் போலச் சென்றன காலாட் படைகள். எத்தனை களிறு! எத்தனை தேர்! எத்தனை புரவி! எத்தனை காலாள்! அணிகலையாது அவை செல்லும் அழகுதான் என்னே!

படை செல்லுவதாலுண்டான புகைப் படலம் ஊழி முடிவில் எழும் தீயின் புகைப் படலம் போல அல்லவா காண்கிறது! படையினர் ஏந்திச் சென்ற கொடிகள் காற்றில் படபடவென்று அடித்துக் கொள்வதா லுண்டாகும் சத்தம், ஊழித் தீயில் நாடு நகரங்கள் அழியுங்கால் உண்டாகும் படபட சத்தத்தை ஒத்தது. படையினர் ஏந்திச் செல்லும் படைக் கலங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் உண்டான கலகல வோசை, ஊழி முடிவில் உலகத்தை விழுங்குவதற்கு ஆர்த்தெழுந்த கடலொலி போலக் காணப்பட்டது. படையுடன் ஒலித்துக் கொண்டு செல்லும் முரசம் முதலிய பல வாத்தியங்களின் ஒலி, ஊழி முடிவில் உலகை யழிக்கப் பெரு மழை பொழியுங்கால் உண்டாகும் இடி முழக்கத்தை ஒத்தது.

செழியன் தான் கருதியவாறு ஆலங்கானத்தை முன்னர் அடைந்தான். ஆங்குச் செய்தற்குரிய ஏற் பாடுகளை விரைந்து செய்து முடித்து விட்டுப் பகைவர் வருகையை எதிர் நோக்கி ஆயத்தமாயிருந்தான். பின்னர்ச் சேரர் முதலிய பகைவர் அவ்விடத்தை யடைந்து போரைத் தொடங்கினர்.

தேர்களோடு தேர்கள் மோதின; அது குன்றுடன் குன்று முட்டியது போன்றிருந்தது. களிறுகளைக் களிறுகள் தாக்கின; அது மேகத்தோடு மேகம் மோதி யது போன்றிருந்தது. புரவிகளின்மீது புரவிகள் தாவின; அது தீக்கொழுந்தோடு தீக் கொழுந்து உராய் வது போலிருந்தது. காலாட்களைக் காலாட்கள்

தாக்கினர்; அது இரண்டு கடல்கள் ஒன்ருேடொன்று மோதுவது போலக் காணப்பட்டது.

எய் எய்! எறி எறி! வெட்டு வெட்டு! குத்து குத்து! என்னும் வீர ஆரவாரம் எங்கும் நிறைந்தது. அந்த ஆரவாரத்தினிடையே ஆ! ஐயோ! அப்பா! என்னும் இரக்க ஒலி எழுந்துகொண்டே யிருந்தது. முரசுகளின் அதிரொலி யொருபுறம், கொம்பு தாரை களின் பெரு முழக்கம் மற்ருெரு புறம்! இடையிடையே வெற்றிச் சங்குகளின் முழக்க வொலி! எங்கும் ஒரே பேராரவாரம் !

கையிற்று வீழ்ந்தன ஒரு சில களிறு! காலிற்றுத் தாழ்ந்தன வேறு சில களிறு! அச்சு வேறு மச்சு வேருயின சிலதேர்கள்! குத்துக்கால் வேறு,கொடுங்கை வேருயின வேறு சில தேர்கள்! காலிற்றுச் சரிந்தன சில பரிகள்! அம்புபட்டுச் சாய்ந்தன வேறு சில பாய் மாக்கள்! தாளும் தோளும் இற்றனர் சில காலாட்கள்! சிரமும் உரமும் அற்றனர் வேறு சில காலாட்கள்!

ஆ!ஆ! என அஞ்சினர். ஆழ்ந்தார் ஒரு சாரார்! கூ!கூ! என்று கூவிளிகொண்டார் மற்ருெரு சாரார்! அதோ ஒரு வீரன் வெள்ளம்போலத் திரண்டு வரும் படையைக் கற்சிலேபோலத் தடுத்து நின்று வெட்டி வெட்டிச் சாய்க்கின்ருன். மலேபோலத் தோன்றி, ஆறு போலப் பாய்ந்து ஓடி வந்த படை அவனே யணுகியதும் அடங்கிவிட்டது. அதோ மற்ருெரு வீரன் தன் கையி லுள்ள வேலேத் தன்னே நோக்கிக் கையில் உலக்கை யுடன் வரும் களிற்றின் மீது எறிகின்ருன். பட்டது மத்தகத்தில் வேல்! ஆ! வென்ற பிளிற்ருெலி! வீழ்ந்தது

யானே! ஆ! அவனை நோக்கி மற்ருெரு யானை வருகிறதே! கையில் வேல் இல்லையே! என்ன செய்வான் அவன்! அதோ ஒரு வீரன் அவன் மீது தன் வேலை எறிகிருன்! வேல் மார்பில் பாய்ந்துவிட்டதே! என்ன ஆச்சரியம்! அவ்வீரன் அழுகுரலுடன் கீழே விழவில்லையே! தன் மார்பில் தைத்த வேலைப் பிடுங்கிக் கொண்டு தன் புண்ணைச் சிறிதும் கவனியாமல் எதிர்த்து வரும் வேழத்தை நோக்கிச் சிரிக்கின்ருனே! இது என்ன வீரமோ!

இரு திறப்படையிலும் வீரர் பலர் அழிந்தனர். புரவிகள் பல இறந்தன. களிறுகள் பல மாய்ந்தன. தேர்கள் பல சிதைந்தன. காலாட்கள் பலர் பட்டனர். இரத்தம் ஆருகப் பெருகி யோடிற்று. அவ்வெள்ளத்தினிடையில் கிடந்த யானைகளும் தேர்களும், கடலினிடையே குன்றுகள் போலவும் பாறைகள் போலவும் தென்பட்டன. வீரர்களது உடற் குறைகளும் உடைகளும் இரத்த வெள்ளத்தில் மிதந்து சென்றன. ஆற்று வெள்ளத்தினிடையே நுரை செல்லுவதுபோலவிருந்தது.

வெற்றி பாண்டியர் பக்கம் திரும்பிற்று. சேரர் அது கண்டு மனம் பொருராய்த் தாம் ஏறி வந்த யானையைப் பாண்டியர் படைக்குள் செலுத்தினர். அவரது வில்லினின்று விடாமல் அம்புகள் புறப்பட்ட வண்ணமிருந்தன. ஒவ்வொரு அம்பும் ஒரு வீரனையோ ஒரு புரவியையோ வீழ்த்தியது. களிறுகளின்மீது சில அம்புகள் தைக்க அவ்வாறு தைக்கப் பெற்றவை மாண்டு

விழுந்தன. அது கண்ட செழியன் தான் ஏறி வந்த யானையைச் சேரன் முன்னர்ச் செலுத்தினன். அவனது வில்லினின்றும் புறப்பட்ட அம்புகளும் அவ்வாறே களிறு, புரவி, காலாள் ஆகியவற்றைக் கொன்றன. இருவர் அம்புப்புட்டில்களிலும் அம்புகள் தீர்ந்து விட்டன. இருவர் களிறுகளும் ஒன்றையொன்று சந்தித்தன. இருவரும் ஒருவர்மீதொருவர் வேலை எறிந்தனர். இருவரும் அவ்வேல்களின குத்துக்களினின்று தமது ஆற்றலால் தப்பித்துக் கொண்டனர். இருவரும் வாட்களை யுருவிக்கொண்டு களிறுகளினின்று கீழே குதித்தனர்.

அவ்வாட்கள் மின்னல் போல மின்னி அங்குமிங்கும் துள்ளிப் பாய்ந்தன. இடியொலிபோன்ற ஒலியையுண்டாக்கிக் கொண்டு ஒன்றை யொன்று தாக்கின. இதோ ஒரு மின்னல் வீச்சு! சாய்ந்தான் செழியன்! என்ன அதிசயம்! அதினின்று எங்ஙனம் தப்பினன்? இதோ ஒரு பாய்ச்சல்! மின்னல் வெட்டு! விழுந்தான் சேரன்! ஆ! எங்ஙனம் தப்பியெழுந்தான்? வெட்டுக்கு வெட்டு! வீச்சுக்கு வீச்சு! குத்துக்குக் குத்து! யார்வெல்லுவார்களோ தெரியவில்லையே! இதோ செழியனது புதிய வீச்சு! சேரன் வாள் வானத்தில் பறந்துவிட்டது! அவனைச் சுற்றிக்கொண்டனர் பாண்டிய வீரர்! சிறைப்பட்டான் சேரலிரும்பொறை!

ஆலங்கானத்தில் போர் நிகழ்ந்த அதே சமயத்தில் பாண்டிய நாட்டின் மேற்குப்பகுதியில் ஓரிடத்தில் வீரண்ணனது படை அங்கிருந்த பாண்டியர் படையோடு போரிட்டது. வீரண்ணன் பாண்டியரை எளி

தில் தோற்கடித்தான். உடனே அவன் தலை நகரை நோக்கி விரைந்தான். தலைநகரை யடைந்ததும் அங்குக் காவலிருந்த கார்வண்ணன் தன் படையுடன் அவனை யெதிர்த்தான். இருதிறப் படைகளுக்கும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கையில், தலையாலங்கானத்துச் சேரர் சிறைப்பட்ட செய்தி வீரண்ணனுக்குத் தெரிய வந்தது. உடனே அவன், தன் கீழ்ப்படைத் தலைவன் ஒருவனைப் போரைத்தொடர்ந்து நடத்துமாறு கூறிவிட்டு ஒரு சிறு பகுதிப் படையுடன் தலையாலங்கானத்தை நோக்கி விரைந்தோடினன்.

அங்குப் போய்ச் சேர்ந்த போது போர் முடிந்து சேரன் தலைநகருக்குக் கொண்டு போகப்பட்டு விட்ட செய்தி தெரியவந்தது. மற்றும் சோழன், திதியன் முதலிய யாவரும் தோர்று இறந்து பட்டனர் என்பதும் தெரிந்தது. 'ஆம்! தலை நகரில் நடக்கும் போரும் இதற்குள் முடிந்திருக்கும்! அங்கும் பாண்டியர் வெற்றி பெற்று நம் தலைவனை விரட்டியிருப் பார்கள்! இனிச் செய்யத்தக்கது யாது? இரும் பொறையை விரைந்து சிறை வீடு செய்யவேண்டும். அதற்கென்ன வழி? மாறு வேடத்தோடு சென்று மதுரையில் எனக்குதவியா யிருப்பவர்களைக் கொண்டு விரைந்து செயலாற்றவேண்டும்," என்றெண்ணிய வீரண்ணன் தன் சிறுபடையைச் சேர நாட்டிற்கு அனுப்பிவிட்டு மாறுவேடத்துடன் மதுரையை நோக்கி நடந்தான்.

# 10. சிறைச்சாலை

போரிற் சிறை பிடிக்கப்பட்ட மாந்தரஞ் சேரலிரும் பொறை மதுரைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குச் சிறைச்சாலையிலிடப் பட்டான். சிறையை யடைந்த சேரன் பின்வருமாறு சிந்திக்கலானன்:

''என்முன்னேருள் ஒருவனன பெருஞ்சேரலா தன், கரிகாற்சோழனல் வெல்லப்பட்டான். அப்போது எதிர்பாராவகையில் பகைப்படை வீரனெருவன் எய்த அம்பொன்று அவன் முதுகிற்பட்டுப் புண்ணுண்டாக் கியது. அப்புறப்புண்ணிற்கு நாணி அவன் வடக் கிருந்து உயிர்துறந்தான். என் மரபினருள்மற்றெருருவ னகிய சேரமான் கணைக்கா லிரும்பொறை, சோழன் செங்கணனிடம் தோல்வியுற்றுச் சிறையிலிருந்தான். அப்போது அவன் உண்ணுதற்குச் சிறிது நீர் கேட்க, சிறைக்காவலன் அரசனென்னும் மரியாதையின்றிக் காலந்தாழ்த்து நீர் கொணர்ந்தான். அது பொழுது அவ் வரசன், அரசர் குடியிற் குழந்தை யிறந்து பிறந்தாலும், அவயவங்கள் ஒன்றுமில்லாத வெறும் தசைப்பிண்டம் பிறந்தாலும், அவைமக்களாகா என்று எண்ணமல், அவற்றையும் போரிலிறந்தது போல் குறிக்க எண்ணி வாளால் வெட்டிப் பின் ஈமச்சடங்கு செய்வர். அங்ஙன மிருக்க அத்தகைய உயர் குடியிற் பிறந்த யான் நாய் போலப் பிணிக்கப்பட்டுப் பகைவனிடம் உண்ணு நீர் கேட்டு அவமானத்திற்குள்ளானேன். இதை யான் பொறேன்! இதனினும் இறந்துபடுதல் சாலச் சிறந்தது என்று சொல்லி உயிர்நீத்தான். இப்போது அத்தகைய நிலையே எனக்கும் நேர்ந்துள்ளது. பகைவர்பால்

சிறைப்படுதலைப் போன்ற இழிவு அரசர்க்கு வேறுண்டோ? அத்தகைய இழிவு எனக்கு நேர்ந்துள்ளது.

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பிர் மானம் வரின்”

என்பது வள்ளுவர் வாய்மொழி. அம்முறையே என் முன்னோரும் உயிர் நீத்தனர். யானும் அங்ஙனமே உயிர்நீத்தல் முறையாம். ஆயினும் என் மனம் அதற்கு இடம்தரவில்லை. என் பகைவனை எங்ஙனமேனும் இழிவுபடுத்தினாலன்றி என் மனம் அமைதியுறாது. பகைவனுக்கு இழிவுண்டாக்காமல் இறப்பது இழிவு என்று என் மனம் என்னை இடித்துரைக்கின்றது.

இதற்கென்ன செய்வது! பகைவன் கைப்பட்டு இறக்கும் நிலையிலுள்ள யான் பகைவனை இழிவுபடுத்த எண்ணுகின்றேன். இது ஆகிற காரியமா? “முயன்றால் முடியாதது ஒன்றில்லை.” எப்படி முயல்வது ? ஆம்; ஒருவகையில் முயன்று பார்க்கலாம். இச் சிறையினின்று யான் என் முயற்சியால் தப்பிச் செல்வேனேயாகில், அது பகைவனுக்கு இழிவுண்டாக்கும் செயலேயாம். தப்பிச் செல்ல முயல்கின்றேன். அவ்வகையில் இறந்துபடினும் சரியே. அங்ஙனமே செய்கின்றேன்.’

இவ்வாறு தனக்குள் கூறிக்கொண்டபின் தப்பிச் செல்ல ஏதேனும் வழி உளதா என்று சிறைச்சாலையை நுணுகி ஆராய்ந்தான். சிறைச்சாலையின் சுவர்கள் கருங்கல்லாலானவை. கற்களைப் பெயர்த்தெடுப்பதற்கோ யாதொரு கருவியுமில்லை. எப்பக்கம் பெயர்த்

தால் வழியுண்டாகும் என்றும் தெரியவில்லை. இரண்டாள் உயரத்தில் ஒருபுறம் ஒரு பலகணி உள்ளது. பலகணிக்கப்பால் என்ன உள்ளது என்று ஏறிப்பார்க்க வேண்டும். அதற்குச் சாதனம் இல்லை. மேலும் அதன் வழியாகத் தப்புவதானால் அதிலுள்ள கம்பிகளை நீக்கி வழியுண்டாக்கவேண்டும்.

முன்புறமுள்ள வாயில் வழியாகப் பார்த்தால், நான்கு புறமும் சிறையறைகளும் நடுவில் முற்றமும் உள்ளன. முற்றத்திற்கும் சிறையறைகட்கும் இடையிலுள்ள தாழ்வாரத்தில் காவலர் காவல் புரிந்தவாறு இருக்கின்றனர். தாழ்வாரத்தின் கூரைவழியாகச் சிறைச்சாலையின் மாடியின்மீது ஏறிச் சென்றால் ஒருவேளை தப்ப வழியுண்டாகலாம். ஆனால் நிலத்தினின்று எளிதில் ஏறமுடியாதவாறு கூரை உயரத்திலன்றோ இருக்கின்றது! அன்றியும் இவ்வறைக்குள்ளிருந்து முற்றத்தை யடைவது எப்படி? கதவு பூட்டப்பட்டுள்ளது. உணவு ஓரிடுக்கின் வழியாக உள்ளே தள்ளப்படுகின்றது. வெளியில் எப்போதும் இரு காவலர் காவல் புரிந்தவாறு உள்ளனர். தப்ப வழி ஒன்றும் தோன்றவில்லையே!

இரும்பொறை இவ்வாறிருக்கையில் வீரண்ணன் மாறுவேடத்தில் மதுரையை யடைந்து தான் முன்னம் தங்கியிருந்த தன் நண்பன் வீடு சென்றான். அந் நண்பனிடம் தந்திரமாகப் பேசிச் சிறைக் கூடத்திற்குள் சேரன் சிறைப்பட்டிருக்கும் பகுதி எது, அக்கூடம் எங்கமைந்துள்ளது, அங்குக் காவலிருப்போர் எத்தனை பேர் முதலிய செய்திகளை யெல்லாம் ஒருவாறு அறிந்து கொண்டான். பிறகு பின்வருமாறு ஆலோசிக்கலானான்:

சிறைக்கூடம் நகரின் தெற்குப்புறமாக ஒரு கோடி யில் ஒரு சிறு கோட்டை போல் அமைந்துள்ளது. அதைச் சுற்றிலும் சிறிது தூரம் வரையில் வெளியிடம் உண்டு. வெளியிடத்தைச் சுற்றி முள்வேலி யிருக்கும். எவரும் முள்வேலியைக் கடந்து போகலாகாது. சிறைக் கோட்டத்தின் நான்கு புறத்திலும் பக்கத்திற்கு இருவர் வீதம் காவலிருப்பர். சிறைக் கோட்டத்துள் புகுவதற்கு அதன் வடக்குப் புறத்தில் மட்டும் வாயிலுண்டு. அங்குச் சுமார் இருபது பேர் காவலாளி கள் இருப்பர்.

சிறைக் கோட்டம் சரி சதுரமாய் நான்கு பிரிவினை யுடையது. பிரிவு ஒவ்வொன்றிலும் நடுவில் முற்றமும் நாற்புறமும் சிறையறைகளுமாய் இருக்கும். ஒவ்வொன் றிலும் பக்கத்திற்கு இருவராக எட்டுப் பேர் காவ லிருப்பர். சேரன் சிறைக்கோட்டத்தின் தென் மேற்குப் பிரிவில் தெற்குப்புறமாய் நடுவில் மூன்று என்று இலக்கமிட்டுள்ள அறையில் வைக்கப் பட்டுள்ளான்.

'நன்று ! அவனை விடுவிப்பது எப்படி ? நகரிலுள்ள நமது ஒற்றர் காரியாலயம் செல்ல வேண்டும். அங்கு நம்பிக்கையானவரும் போர்ப் பயிற்சியுள்ளோருமாய் நால்வரைத் துணைக்கொள்ள வேண்டும். சிறைக் கோட்டத்தின் மேற்குப்புறமாக வேலியை அகற்றி வெளியிடத்தைக் கடந்து காவலரைக் கொன்று மதில் மேலேறி மாடியை அடைய வேண்டும். அங்கு முற்றத்தில் குதித்துக் காவலருடன் போராடியவாறே எங்ஙனமேனும் சேரனை அறையைவிட்டு வெளியே

கொணர்ந்து மாடி வழியாகத் தப்பிச் செல்ல வழி கோல வேண்டும். இம்முயற்சியில் யான் கொல்லப் பட்டாலும் சரி; சிறையிருக்க நேரிடினும் சரி; எங்ஙனமும் அரசனை விடுவித்தே திருவேன்!'

இங்ஙனம் கூறிக்கொண்டு ஒற்றர் அலுவலகம் சென்று அங்குத் தான் கருதியவாறே நால்வரைத் துணைக் கொண்டான். சிறைக் கோட்டத்தின் அருகில் சென்றான். அங்கு மேற்குப்புறம் அமைந்த முள் வேலியில் ஓரிடத்தில் வேலியை அகற்றி வழியுண்டாக்கினான். அவ்விடம் மக்கள் சந்தடியற்ற இடமாயிருந்ததாலும், காலம் நள்ளிரவாய் மங்கிய நிலவொளியுடன் கூடியிருந்ததாலும் அதுவரை அவனது செயலுக்குத் தடை ஒன்றும் ஏற்படவில்லை.

பிறகு இடை வெளியைக் கடந்து மதிற்புறத்தை அடைவது எப்படி? சந்தடியில்லாமல் அப்பக்கமாகக் காவல் புரியும் இரு காவலாளிகளை வாயடக்குவது எப்படி? மதில் மேல் ஏறி மாடியை அடைவது எப்படி? என்ற எண்ணங்கள் படிப்படியாய்த் தோன்றின.

நிலவொளி பிரகாசமாய் இராவிட்டாலும் இடை வெளியைக் கடக்கும்போது காவலாளிகள் கண்டு கொள்ளக்கூடும் என்று தோன்றியது. வீரண்ணன் தான் முதலில் படுத்தவாறு ஊர்ந்து செல்வதாயும், தன்னைக் காவலர் வந்து கிட்டிச் சண்டையிடும்போது மற்றவர் விரைந்து வரவேண்டும் என்றும் கூறினான். அவ்வாறே ஊர்ந்து சென்றான். அவன் பாதி வழி கடந்ததும் காவலர் இருவரும் அவனைப் பார்த்து அவனிடம் ஓடிவந்தனர். அவருள் முதலாவதாய்

வந்தவன் கிட்டத்தட்டத் தன்னையணுகியதும் வீரண்ணன் திடீரென்றெழுந்து தன் கையிலிருந்த குத்துவாளை அவன் மீது வீசினான். அதனால் குத்துண்ட காவலன் காயம் பட்டு இரத்தம் பெருகக் கீழே விழுந்தான். அதே சமயத்தில் மற்றொரு காவலன் வீரண்ணன் மீது வேலை வீசி யெறிந்தான்.

வீரண்ணன் இலாகவமாய் ஒதுங்கி அவ் வேலுக்குத் தப்பவே, காவலன் தன் வாளையுருவிக் கொண்டு பாய்ந்தான். அவ்வளவில் வீரண்ணனும் தன் வாளையுருவிக்கொண்டு அவனோடு போரிட லானான். இச்சமயத்தில் முன்னேற்பாட்டின்படி வீரண்ணனது துணைவர் நால்வரும் அங்கு ஓடிவர லாயினர். இதற்குள் குத்துண்டு கீழே விழுந்த வீரன் தன் உடலில் குத்தியிருந்த குத்துவாளைப் பிடுங்கி வீரண்ணன் மீது எறிய முயற்சித்தான். வீரண்ணனது துணைவருள் ஒருவன் இதனை அறிந்து அக்காவலனை வெட்டி வீழ்த்தினான். இதே சமயத்தில் வீரண்ணனால் மற்றொரு காவலனும் வெட்டுண்டு விழவே, வீரண்ண னும் அவனது துணைவரும் தடையொன்றுமின்றி மதிற்புறத்தை யடைந்தனர்.

மதில் மூன்றாள் உயரம் இருந்தது. அதன் மேல் ஏறுவதற்கு வீரண்ணன் ஒரு சூழ்ச்சி செய்தான். அதாவது மதிலோரமாக முதலில் ஒருவனை மதிலைப் பிடித்துக்கொண்டு உறுதியாக நிற்கச் செய்தான். மற்றொருவனை அவன் தோளின் மீதேறி அவ்வாறே நிற்கச் செய்தான். பிறகு தான் அவ்விரண்டு பேரின் மேலும் ஏறித், தான் கொணர்ந்திருந்த நூலேணியை

மதிலின் மீது பற்களைப்போல நீட்டிக்கொண்டிருந்த மதிலுறுப்புக்களில் ஒன்றில் கட்டினன். அதன் வழியாக யாவரும் ஏறிச் சிறைக் கோட்டத்தின் மாடியை அடைந்தனர். பிறகு திரும்புகாலில் பயன் படுவதற்காக நூலேணியை அங்கேயே தொங்கவிட்டு விட்டு அவர்கள் சேரன் சிறைப்பட்டிருந்த பகுதியை நோக்கிச் சென்றனர்.

அப்பகுதியை அடைந்ததும் அங்கோர் மூலையில் மாடிக் கைப்பிடிச் சுவரில் மழைநீர் போவதற்காக விருந்த ஒரு துவாரத்தில் வீரண்ணன் தான் கொணர்ந்திருந்த கயிற்றைச் செலுத்தி மற்றெரு துவாரத்தின் வழியாகக் கொணர்ந்து உறுதியாக விருக்குமாறு முடியிட்டுக் கீழே தொங்கவிட்டான்.

காலம் நள்ளிரவானதால் காவலாளிகள் அரைத் தூக்கத்தில் இருந்தனர். அதனுல் வீரண்ணன் வேலை சுலபமாகவே நடந்தது. அவனும், அவனது துணை வரும் அக்கயிற்றின் வழியாக ஓசைப்படாமல் முற்றத் தில் இறங்கினர். அங்கிருந்து சேரன் இருந்த அறையை நோக்கிச் சென்ருன் வீரண்ணன். மற்றையோர் தூண் மறைவுகளில் ஒளிந்து கொண்டனர்.

அவ்வாயிலின் பக்கத்தில் ஒரு வீரன் சுவரில் சார்த்திவைத்துவிட்டுக் கீழே உட்கார்ந்து சுவரில் சாய்ந்து தூங்கி வழிந்துகொண் டிருந்தான். அவன் இடுப்பில் சாவி தொங்கியது. வீரண்ணன் மெதுவாக வேலை யெடுத்து வாயிலில் அமைந்த கம்பிகளின் ஊடே அதை உள்ளே செலுத்தி அங்கே அரைத் தூக்கத்தில் சுவரில் சாய்ந்திருந்த சேரனை மெதுவாகத் தட்டி

எழுப்பினுன். சேரன் திடுக்கிட்டு 'யார்?' என்று கூவிக் கொண்டு எழவே, அக்கூச்சலில் காவலன் விழித்து எழுந்து எதிரில் வீரண்ணன் உருவிய கத்தியுடன் நிற்பதைக் கண்டு கூச்சலிட வாயைத் திறந்தான். அவ்வளவில் வீரண்ணன் கத்தியை அவன் மார்புக்கு நேராக நீட்டி மற்ருெரு கையால் அவன் இடுப்பிலிருந்த சாவியை எடுத்துக் கொண்டான்.

பிறகு அவன் சாவியைக் கொண்டு அறையின் கதவைத் திறக்க முயல்கையில் காவலன் கூச்சலிட்டான். உடனே வீரண்ணன் வாளால் அவனைக் குத்திக் காயமுண்டாக்கிவிட்டு விரைந்து கதவைத் திறந்தான். அதற்குள் அப்பகுதியிலிருந்த மற்ருெரு காவலன் விழித்துக்கொண்டு காவலன் குத்தப்பட்டதையும் வீரண்ணன் அருகில் கத்தியுடன் நிற்பதையும் கண்டு கூச்சலிட்டவாறே வேலைநீட்டிக் கொண்டு ஓடி வந்தான். இதற்குள் கதவு திறக்கப்பட்டுச் சேரன் அறைக்குள்ளிருந்து வெளிவந்தான். வீரண்ணன் காவலனது வேல் குத்துக்கு லாகவமாய்த் தப்பித் தன் வாளால் அவன் விலாவில் குத்திஞன். அவ்வளவில் அக்காவலன் வீறிட்டுக் கீழே விழுந்தான்.

இச்சமயத்தில் பக்கத்துப் பகுதிகளிலிருந்து காவலர் பலர் ஓடிவந்தனர். வீரண்ணன் தன் துணைவரை அவர்களோடு போரிடுமாறு ஏவிவிட்டுத் தப்பிச் செல்வதற்குத் தான் செய்துள்ள ஏற்பாடுகளைச் சேரனிடம் சொல்லி, முற்றத்தில் தொங்கவிட்டுள்ள கயிற்றைப் பற்றிக்கொண்டு அவனை மேலேறிச் செல்லுமாறு கூறிஞன். இதற்குள் வாயிற் புறத்தினின்றும் காவலர் பலர் வந்து விடவே, வீரண்ணன் பக்கத்

தார்க்கும், அவர்க்கும் இடையில் வாட்போர் மும்முரமாக நடக்கலாயிற்று. இச்சமயத்தில் சேரன் கயிற்றின் வழியாயேறி மாடியையடைந்து பின் நூலேணி வழியாகச் சிறைக் கோட்டத்தின் மாடியினின்று கீழிறங்கிச் சென்றுவிட்டான்.

போரில் காவலர் பலர் காயமுற்று வீழ்ந்தனர். இரண்டொருவர் இறந்தனர். வீரண்ணன் துணைவரிலும் இருவர் காயமுற்று வீழ்ந்தனர். இந்நிலையில் கார்வண்ணன் பத்து வீரரோடு வாயிற்புறமிருந்து வந்தான். வந்ததும் அவன் யாவரையும் கையமர்த்திப் போரை நிறுத்தினன். பிறகு வீரண்ணனையும் அவன் வீரரையும் பார்த்து, "உங்கள் கருத்து ஒருவாறு முற்றுப்பெற்றதென்று நினைக்கிறேன். அதோ, சேரன் சிறையறை திறந்துகிடக்கின்றது. அவ்வரசன் இங்கே காணப்படவில்லை. ஆதலால் அவன் தப்பிச் சென்று விட்டான் என ஊகிக்கிறேன். இனி வீணாகச் சண்டை எதற்கு? சண்டையில் நீங்கள் வெல்லப் போவதில்லை. நீங்கள் சிறைப்பட வேண்டியதே. அது நிற்க. வீரண்ண, நீ சிறந்த வாள் வீரன் என்பதை யான் அறிவேன். சென்ற ஆண்டு நவராத்திரி காலத்தில் சேரனவைக் களத்தில் வீரரெல்லாரையம் வென்று மேம்பட்டதை யானறிவேன். அதனால் எனக்கு உன்னோடு போரிட வேண்டுமென்ற ஆவல் மிகுந் துள்ளது. இன்று போரிட்டு மிகவும் களைத்திருக் கின்றாய். ஆதலின் இன்றிரவும் நாளை முழுதும் ஓய்வெடுத்துக்கொள். சிறந்த உணவையுண்டு இனிது உறங்கிக் காலங்கழி. அடுத்தநாள் இதே முற்றத்தில் நீ என்னுடன் வாட்போர் செய்! நீ என்னை வென்றால்

விடுதலை பெறுவாய்! தோற்றால் என்றும் சிறை யிருக்க வேண்டியதே! என்ன சொல்கின்றாய்?" என்றான்.

அது கேட்ட வீரண்ணன், "நீர் யாரோ எனக்குத் தெரியாது. என் செய்தி தெரிந்தும் என்னைப் போருக் கழைக்கின்றீர். அன்றியும் இப்போது நீர் வந்துள்ள கோலத்தைப் பார்த்தால் நீர் ஒரு படைத் தலைவரா யிருக்க வேண்டுமென ஊகிக்கிறேன். ஆதலின் நான் போரிடச் சம்மதிக்கிறேன். நீர் கூறிய நிபந்தனைப் படியே நடக்கட்டும்?" என்றான்.

குறித்த நாளில் போர் தொடங்கிற்று. சேரநாட்டில் யாவரையும் வென்று மேம்பட்ட திறத்தை எண்ணி வீரண்ணன் சிறிது அலட்சியமாகவே முதலில் போரிட் டான். ஆனால் விரைவில் தன் எதிரி சாமானிய னல்லன் என்பதை உணர்ந்து தன் திறத்தைக் காட்டத் தொடங்கினான். கார்வண்ணன் யாவுமறிந்தவனாதலால் தக்கபடி போரிடலானான். வீரண்ணனின் ஒரு மின் வீச்சு கார்வண்ணனை ஒரு கணம் திகைக்க வைத்தது. மறுகணம் அது சமாளிக்கப்பட்டது. அவ்வாறே கார்வண்ணனது ஒரு மின்வெட்டு வீரண்ணனைப் பொறிதட்டச் செய்தது. சுழற்சி, வெட்டு, குத்து, வீச்சு யாவும் அடுத்தடுத்து வந்து அங்குச் சுற்றி யிருந்தோரைத் திகைப்பிலும் அச்சத்திலும் ஆழ்த்தின. இரண்டு இளஞ்சிங்கங்கள் ஒன்றையொன்று எதிர்த் துப் போரிடுவது போல அவ்வீரர் இருவரும் ஒரு நாழிகைப்போது போரிட்டனர்.

பிறகு கார்வண்ணனது கை சிறிது மேலோங்கத் தொடங்கிற்று. வீரண்ணன் தற்காப்பிலிறங்க வேண்

டியதாயிற்று. அங்கிலேயில் ஒரு மின்னற் சுழற்சி வீரண்ணனது வாளே வானத்திற் பறக்கச் செய்தது. கார்வண்ணனது வாள்முனே அவனது மார்பிற்கு நேராக நீட்டப்பட்டது. சுற்றியிருந்தோர் யாவரும் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். வீரண்ணன், "வெற்றி வீரரே, இன்றே யான் தோற்றேன்" என்னும் செய்தி யுண்டாயிற்று. இனி நான் உயிர் வைத்திருப்பதில் பயனில்லே. ஆயினும் "தோற்ருல் சிறையிருக்க வேண்டும் என்று நீர் குறித்ததற்கு முன்னர் நான் இணங்கினேனுகையால், அதன்படி சிறை செல்லத் தயாராயிருக்கிறேன்!" என்ருன். கார்வண்ணன், "நன்று, உன்னிடம் யான் பேசவேண்டிய செய்தி யுள்ளது. அதைப் பின்னர்க் கூறுவேன். அதுவரை யில் நிபந்தனேப்படியே நடக்கட்டும்," என்ருன். பிறகு சிறைப்பட்ட வீரண்ணன், 'எது எவ்வாரு யினும் கருதியதை முடித்துவிட்டேன். அரசன் இனி ஊர் போய்ச் சேரத் தடையில்லே. என்னிடத்தில் இவ் வீரன் ஏதோ செய்தி பேசவேண்டு மென்கின்ருன். அது என்ன செய்தியாயிருக்கும்! இவ்வீரன் யார்? இவன் போர்ப் பயிற்சிக்கு ஈடில்லே. என் செய்தி தெரிந்தவனுகக் காணப்படுகின்ருன். இவனே நான் பார்த்ததாக எனக்குத் தோன்றவில்லே. என்னவோ, எல்லாம் போகப் போகப் பார்க்கலாம்' என்று தனக்குள் கூறிக்கொண்டான். சிறைக்குள் அவனுக்கு எல்லா உபசாரங்களும் குறைவின்றி நடந்தன. தான் கௌரவமாக நடத்தப்படுவதை உணர்ந்தான். ஒருவாறு மனந்தேறி யிருந்தான்.

## 11. ஒற்றுமை முயற்சி

வீரண்ணன் சிறைப்பட்ட நாளுக்கு மறுநாள், காலையில் பாண்டியன் சபை கூட்டிப் பேசலாயினன். அவனது உடலில் ஒருவகைப் படபடப்புக் காணப் பட்டது. சபையில் அமைச்சர், புலவர், நகர மாந்தர் முதலிய யாவரும் கூடியிருந்தனர். பாண்டியன் அவர்களை நோக்கி, "குடிமக்களே, பெரியோர்களே! சில நாட்களுக்குமுன் நம்மிடம் சிறைப்பட்ட சேரர் இரண்டு நாட்களுக்குமுன் தப்பிச் சென்று விட்டனர். மூன்றுநாளிரவில் யாமும் எமது நண்பர் கார் வண்ணரும் மாறுவேடத்துடன் நகர் சோதனைக்குச் சென்றிருந்தபொழுது சிறைக் கோட்டத்தின் புறமாகச் சென்றோம். அங்கோரிடத்தில் வேலி சிறிது நீக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஐயுற்றோம். உடனே கார் வண்ணர் அதன் காரணத்தை அறியச் சென்றார்.

சென்றவர் சிறைக் கோட்டவாயிலை அடைந்த போது அங்குள்ள காவலர் வழக்கம் போல் காவல் புரிந்து கொண்டிருந்தனராம். அவர்களை வினவியதில் அவர்கள் அன்றிரவு வழக்கம்போல் பதினைந்து நாழிகைப் பொழுதிற்குச் சுற்றிப் பார்வையிட்டபோது வேலி அகற்றப்படவில்லை எனத் திட்டமாகக் கூறின ராம். பிறகு உட்புறம் எல்லாம் சரியாயிருக்கிறதா என்று பார்க்க எண்ணிச் சில காவலருடன் அவர் உட் சென்றார். அப்போது சிறைக் கோட்டத்தின் தென் மேற்குப் புறப்பகுதியில் வாட்போர் நடப்பது போன்ற ஆரவாரம் கேட்டது. அங்குச் சென்று பார்க்கையில் சேரரைப் பூட்டியிருந்த அறை திறந்திருந்தது. அவரைக்

காணவில்லை. அங்கோர் புறத்தில் மாடியினின்று கயிறு தொங்க விடப்பட்டிருந்தது. சேரர் படைத் தலைவருள் ஒருவரான வீரண்ணர் தம் துணைவர் சில ரோடு சிறைக் காவலருடன் வாட்போர் புரிந்து கொண் டிருந்தனர். உடனே வீரண்ணர் சிறைப்படுத்தப் பட்டார்.

இனி, சென்ற சேரர் வறிதே காலங் கழிக்க மாட்டார். நம்மீது போர் தொடுப்பது திண்ணம். அதற்குமுன் விரைந்து நாம் அவர்மீது போருக்குச் செல்லுதல் நலம் என்று எண்ணுகிறேன். உங்கள் கருத்து யாதோ? அறிவிப்பீர்களாக!'' என்றான். உடனே ஒரு படைத் தலைவன் எழுந்து, "அரசே, கட்டளை யிடுங்கள்! இதோ சென்று அச் சேரரைச் சிறைப் பிடித்துக் கொணர்கின்றேன்!'' என்றான். அப் போது சபையிலிருந்த **குறுங்கோழியூர் கிழார்** என்னும் புலவர் எழுந்து, "வேந்தே, மிக்க பகைகொண்டு, வலிய படையுடன் போந்து, போரிட்ட பகைவர்மாட்டுச் சினங்கொள்ளுதல் யாவர்க்கும் இயற்கையே. மற்று, சிறைப்பட்ட பகைவர் சிறையினின்று தப்பியோடினா ராயின் அச்சினம் எல்லை கடத்தல் நேரிதேயாகும். அதனால் நீவிர் போர் குறித்தது ஓர் வியப்பன்று. மேலும், போர் எனில் எங்கே என்று விரும்பிக் காத் திருக்கும் வீரரும் நிரம்ப நும்பால் உளர் என்பது இப் போது இங்கு எமக்கு முன் எழுந்து பேசியவரால் தெரிய வருகின்றது. இந்நிலையில் 'சினந் தணிக! போரைத் தவிர்க!' எனக் கூறுதற்கு யாரால் இயலும்? ஆயினும் ஒன்று கூற விரும்புகின்றோம்! சித்தமானால் தெரிவிக்கின்றோம்!

**அரசன் :** புலவீர், தங்களைப் போன்ற பெரியாரது ஆலோசனையை யன்றோ இதுபோது யாம் விரும்பியது. சித்தமாயின் என்பது வேண்டாம். தாம் கூற விரும்பிய உறுதி மொழியை உடனே கூறுமாறு வேண்டுகின்றோம்.

**புலவர்:** சுருங்கக் கூறின் சினந் தணிக என்பதே எமது உரை. காரணம் யாதோ எனின் தோற்றோடிய வர்மீது படையெடுப்பது ஆண்மை யன்று என்பதே. தோற்றவர் மீண்டு படையெடுத்து வருவாராயின், அப் போது போர் தொடுத்தலே ஆண்மையாம்.

**செழியன்:** நன்கு கூறினீர். எனது சினத்தில் இதனை அறியாது போனேன். ஆயினும் இது குறித்து விரைந்து செய்தல் வேண்டும் என்னும் ஓரெண்ணம் என் மனத்துள் புகுந்து வாட்டுகின்றது.

**புலவர்:** ஆம்; அதுவும் இயற்கையே. செய்யத் தக்கது ஒன்று உளது. அதாவது, பகைவர், மேலும் ஒரு போதும் பகை கொண்டு போருக்கு எழா வண் ணம் செய்துவிடுதலேயாம்.

**செழியன்:** என்ன! பகைவரைப் போருக்கெழா வண்ணம் செய்து விடுவதா! அதெப்படி? நீர் கூறுவது முன்னுக்குப் பின் முரணுகக் காணப்படுகின்றதே!

**புலவர்:** மனமிருந்தால் வழி உண்டு.

**செழியன்:** மனமிருக்கின்றது! வழியைக் கூறுவீர்!

**புலவர்:** சமாதானமாகி ஒன்றுபட்டு வாழ்தலே அதற்கு வழி! ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு! ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே!

**செழியன்:** பகைவனுடன் ஒன்றுபடுவதா? யான் அதற்கு உடன்பட்டாலும் பகைவன் அதற்கு உடன் படமாட்டானே!

**புலவர்:** பகைவன் உடன்படுமாறு செய்தல் எமது கடன்.

**செழியன்:** என் மனம் ஏதோ குழம்புகின்றது!

**புலவர்:** தோற்றேடிய இழிவை அடைந்தவரைச் சமமாக எண்ணிச் சமாதானம் பேசி ஒற்றுமைப்படுதல் வெற்றி வீரருக்கு வேப்பங்காயாகத்தான் இருக்கும். ஆயினும் அன்பு, சமாதானம், ஒற்றுமை இவற்றைப் போலச் சிறந்தது வேறென்றில்லை. தோற்றவர் சமாதானம் பேசுவதில் என்ன வியப்பிருக்கின்றது? என்ன மேன்மை யிருக்கின்றது? வென்றவர் - வெல்லக்கூடிய வல்லமை யுள்ளவர்—அன்பும் சமாதானமும் காட்டினல் அதன் பெருமை யன்றே பெருமை! சமாதானமும் ஒற்றுமையும் போராகிய கொடிய நோயைத் தீர்க்கும் மருந்துகளாம். போரின் கொடுமையைச் சற்றெண்ணிப் பார்ப்பீராக!

நும்மீது உயிரையே வைத்து நுமக்காகத் தமது இனிய உயிரையும் தியாகம் செய்ய முனைந்த உங்கள் ஆருயிர் நண்பர் தமது சுற்றத்தார் மார்பில் புடைத்துக் கொண்டு அப் படுகளத்தில் முகத்தில் புண்பட்டு மாண்டு கிடக்கின்றார். அப்போது நும் மனம் படும் பாட்டைச் சற்று மனத்திரை முன்னே படந்தீட்டிப் பார்மின்! அதனல் விளைவது என்ன? மேலும் சினம்! மேலும் போர்! மேலும் கொடுமை! மேலும் அழுகை!

**செழியன்:** நன்று! போரின் கொடுமையைத் தவிர்க்க யான் தாங்கள் கூறும் வழி நடக்கின்றேன். பகைவனை இசைவிக்கத் தங்களால் கூடுமோ?

**புலவர்:** இயன்றது செய்வேன்! இறைவன் திருவுள்ளப்படி நடக்கட்டும்!

**செழியன்:** நன்று! அவ்வகையில் முயலுக!

**புலவர்:** அரசே, யான் விரும்புவது போல ஒரு நிருபம் எழுதித் தருக. தங்கள் பெருமைக்குக் குறைவுண்டாகா வண்ணம் எல்லாவற்றையும் செய்து முடிப்பேன். போரைக் குறித்து வெற்றி விழாக் கொண்டாடுக! அவ்விழாவிற்குச் சேரரையும் அவரது துணைவரையும் வந்திருக்கச் செய்கின்றேன்.

**செழியன்:** அவ்வண்ணமே வரைந்து தருவேன். வினையை இனிது முடிக்க.

பிறகு புலவர் பாண்டியனிடம் நிருபம் பெற்று அவனது அவைக் களத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்று சேரன் சபையை அடைந்தார். அப்போது சேரன், சபையில் வீராவேசத்துடன் பேசலானன். அவன் சபையோரை நோக்கி,

"குடிமக்களே, பெரியோர்களே,

யாம் போரில் தோற்றுச் சிறைப்பட்டோம் என்பதை நீங்கள் அறிவதற்கு முன்னமே இதோ இங்கு வந்து பேச முன் வந்திருக்கின்றோம். வெற்றி தோல்விகள் ஒருவர் பங்கல்ல வென்பதை இப்போரில் உணர்ந்தோம். எமது வலிமை எவ்வளவு! எமது படை வலிமை எவ்வளவு! எமது துணைவலிமை எவ்வளவு! ஆயினும் யாம் தோற்கவும் சிறைப் படவும் நேர்ந்தது என்றால் அதனை ஊழ்வலி என்னுமல்

வேறு என்ன வென்று சொல்வது? ஆயினும் அவ்வூழ் வலி எமது குடிக்கு இழிவு ஏற்படாதவகையில் இப் போது இங்கு வந்து பேசச் செய்துள்ளது. இதற்காக இறைவனுக்கு வணக்கம் செய்கின்றேன்.

யாம் தோற்றது ஊழ்வலியால் என்று முன் னர்க் கூறினேமாயினும் யாம் போரில் செருக் குற்றுச் செய்த செயல் ஒன்றே தோல்வியை அடைவித்தது என்று துணிதற்கு இடமுள்ளது. அதாவது அணிவகுப்புக் கலையாமல் அவரவர் அவ ரவர்க்கு உரிய இடங்களில் இருந்து கவனமாகப் போர் புரியவேண்டும் என்னும் போர்விதியை மதியாமல் ஊக்கமிகுதியால் பகைவர் அணிவகுப்புக்குள் நுழைந்து போரிடலானேன். அதனாலேயே இவ்விழுக்கு நேர்ந் தது. இத்தோல்வியால் எமது படை வலிமை சிறிதும் குறையவில்லை. எமது ஊக்கமும் தளரவில்லை. ஆனால் நமது வீரண்ணர் சிறையிலிருந்த எமக்குத் துணை புரிய வந்து தாம் சிறைப்பட்டது ஒன்றே எமக்கு வருத்தத் தைத் தருகின்றது. அவரை விடுவிக்கவேண்டிய பொறுப்பு நம்மீது சார்ந்துள்ளது. அதனால் மீண்டும் போர் தொடங்கி அவரை விடுவிக்கத் துணிந்துள் ளேன்! அமைச்சரே, போருக்குரிய ஆயத்தங்களை விரைவிற் செய்க! வீரண்ணரை மீட்கும் வரை என் கண்கள் துயிலமாட்டா" என்றான். இச்சமயத்தில் குறுங்கோழியூர் கிழார் சபைக்குள் புகுந்து அரசன்முன் நின்று, "வேந்தே, வாழி! நுமது மரபிற்கேற்ற வகையி லேயே மொழிந்தீர்! வாழ்க நும் கொற்றம்!" என்றார்.

**சேரர்:** புலவரே, வருக! வருக! தக்க சமயத் தில் வந்தீர். யாம் கூறியவற்றை யெல்லாம் செவியுற்றீர்

என்றெண்ணுகின்றேம்! யாம் குறித்த செய்தி உமக்கும் நன்றெனவே படுகின்றதன்றே?

**புலவர்:** அது கிடக்க. அரசே, கடலின் ஆழத்தையும், உலகின் பரப்பையும், காற்று வீசும் திசையின் அளவையும், மற்றும் ஆகாயத்தின் அளவையும் கணக்கிட்டு அறியினும் அறியலாம். தமது அறிவு, அன்பு, கண்ணேட்டம் இவற்றை அளந்தறிதற்கு ஆகுமோ? தங்கள் குடை நிழலில் வாழும் மக்கள் சோற்றை ஆக்குதற்குரிய நெருப்பின் வெம்மையையும், ஞாயிற்றின் வெம்மையையும் அறிவார்களே யல்லாமல், பகைவரின் வெம்மையை அறிவரோ? மேலும் அவர்கள் இந்திர வில்லை அறிவாறே யன்றிப் பகைவரது கொலை வில்லை அறிவரோ? புதுப்பறவை வந்தாலும் பழம் பறவை போனாலும் அவற்ருலுண்டாகும் தீமைகட்கு அஞ்சாதவாறு மிக்க பாதுகாவலை உடையவரன்றே தாம்! ஆயினும் இச்சமயத்தில் யான் ஒன்று கூற விரும்புகின்றேன். கூறுக எனின் கூறுகின்றேன்!

**சேரர்:** "கூறுக எனின்" என்கின்றீரே! நும் போன்ற சான்றேரது கருத்துக்கள் இச்சமயத்தில் எமக்கு இன்றி யமையாதன அன்றே? தாமே மனமுவந்து கூற முன்வரும்போது யான் வேண்டாம் என்பேனு? கூறுமாறு பணிவோடு வேண்டுகின்றேன்!

**புலவர்:** தெற்கே குமரி, வடக்கே பெருங்கல்லாகிய வேங்கடம்; கிழக்கிலும், மேற்கிலும் கடல் என்னும் எல்லைக்குட்பட்ட தமிழ் நாட்டார் யாவரும் ஒருங்கே புகழுமாறு தீமையைப் போக்கி, செங்கோலைச் செய்து, ஆறிலொரு கடமை வாங்கி, நடுவு நிலை தவ

ருது நீதி செலுத்தி, ஆணை யென்னும் சக்கரத்தை உருளச்செய்து நிலமுழுதும் ஆண்ட அரசரது வழித்தோன்றலே !

மதமிகுந்த யானை தன் மிகுந்த வலிமையால் எதையும் மதியாது சென்று, தன்னைப் பிடித்தற்காகச் சூழ்ச்சியோடு அமைக்கப்பட்ட குழியில் வீழ்ந்தாற்போல, தாம் பகைவரது அணிவகுப்புக்குள் புகுந்து சிறைப் பட்டீர். மேல் அக்களிறு, தனது கொம்பாலே கரையைக் குத்தி, மண்ணைப் பெயர்த்துக் குழியைத் தூர்த்து வழி யுண்டாக்கிக்கொண்டு, குழியினின்று மேலேவந்து தன்னினத்தோடு போய்ச்சேர்ந்தாற் போல, உமது வலிமையால் சிறையினின்று விடுபட்டுத் திரும்பி இங்கு வந்தீர். இந்த உமது செயல் பகைவர்க்குத் தாழ்வை உண்டாக்குவதே யாகுமன்றோ? இதனைக் கேள்வியுற்றுத் தங்களைப் பார்க்கவே இங்கு வந்தேன். இனி யான் கூற விரும்பியதைக் கூறுகின்றேன் : போர் எக்காரணத்தால் விளைந்தது என்று ஆராயாமல், தமது அரசர் போர்விளைத்த காலத்தில் அவர்க்குத் துணையாய்ச் சென்று அவருக்காகத் தமது இனிய உயிரையும் கொடுத்தல் போர்வீரர்க்குக் கடமையாகும். ஆனால் அரசர்க்கோ, தக்க காரணம் கருதிப் போர் விளைத்தல் கடமையாம். இதனைத் தங்கட்கு உணர்த்த விரும்புகின்றேன்.

**சேரர் :** என்ன ! யாம் இப்போது தக்க காரணம் இல்லாமலா போர்விளைக்கப் புகுகின்றோம்? ஆயின் எமது பேச்சைத் தொடக்கத்தினின்று நீவிர் கேட்கவில்லை என்று எண்ணுகின்றேன்.

**புலவர் :** காரணம் இருப்பதாகக் கொள்ளுவதும் இல்லாததாகக் கொள்ளுவதும் அவரவர் மனத்தைப் பொறுத்தது.

**சேரர் :** எமது படைத் தலைவர் வீரண்ணரைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டாமா? தோற்றதா லுண்டான இழிவு எமக்கு நீங்கவேண்டாமா?

**புலவர் :** அவை யிரண்டும் போரிடாமலே ஏற்படுவதாயிருந்தால்?

**சேரர் :** போரிடாமல் அவை ஏற்படுவது எப்படி?

**புலவர் :** தூது அனுப்புவதன் மூலந்தான்!

**சேரர் :** தோற்ற அரசர் வென்ற அரசரிடம் தூதனுப்புவதால் என்ன நேரிடும் என்பதை அறிவீரோ?

**புலவர் :** நேரிடும் செயல் அனுப்பும் தூதுவருடைய திறமையைப் பொறுத்தது.

**சேரர் :** உம்மையே தூதனுப்புவதாக வைத்துக் கொள்ளுங்கள். நீர் என்ன சாதிப்பீர்?

**புலவர் :** தங்கள் மேன்மைக்கு இழுக்கு உண்டாகாமல் வெற்றிகரமாகவே காரியம் முடிப்பேன்.

**சேரர் :** நடவாத காரியத்தைச் சொல்லிக் காலத்தை வீணாக்க வேண்டாம்.

**புலவர் :** காலத்தை வீணாக்க யான் கயவனல்ல! வென்றவரிடமிருந்தே சமாதானவோலை கொண்டுவந்திருக்கின்றேன்.

**சேரர் :** புலவரே, என்ன விளையாடுகிறீரா?

**புலவர் :** விளையாடுவதற்கு யான் சிறு பிள்ளையல்ல! இதோ ஓலை! பதட்டமில்லாமல் நிதானமாய்ப்

படித்துப் பாருங்கள். வீரமும் மேன்மையும் படைத்த இரு பெரு வேந்தர் பகைத்துப் போரிட்டுக் கொலையும் கொள்ளையும் உண்டாக்கக் காரணமாயிருப்பது எமக்கு வருத்தத்தைத் தந்தது. அதனால் செழியரிடம் சென்று பேசி, அவரது கருத்தை மாற்றிச் சமாதான வோலை பெற்றுவந்தேன்.

**சேரர் :** எங்கே, அவ்வோலையைக் கொடுங்கள் பார்ப்போம்.

புலவர் ஓலையெடுத்துக் கொடுக்கச் சேரர் வாங்கி வாசிக்கின்றார் :

"மன்னர் பெருமான் சேரருக்கு, வணக்கம்.

வீரத்தையே பெரிதாகக் கருதிப் போரையே பெரிதும் மதித்த என்னைப் புலவர் பெருமான் குறுங்கோழியூர்கிழார் தெருட்டியருளினார். அன்புநெறி, சமாதானம், ஒற்றுமை இவற்றின் அருமை பெருமைகளை நன்கெடுத்துக் காட்டினார். அவர்பால் உயர்ந்த கருத்துக்களை அறிந்து கொண்டேன். தங்களைச் சிறையில் வைத்ததைக் குற்றமாகக் கருதுகிறேன். மன்னரைச் சிறைப் படுத்துவது மன்னர் குலத்தையே இழிவு படுத்துவதாகும் என்பதை உணர்கிறேன். நமது முன்னோர் நமக்குத் தேடிவைத்தவாறு அவரவர் நிலம் அவரவர்க்கு உரியதாகுக ! சென்றதை மறந்து பகையின்றி ஒற்றுமையுடன் வாழ்வோம். தங்கள் படைத் தலைவர் வீரண்ணர் தங்கள்பால் ஒப்படைக்கப்படுவார். மற்று, கடந்த போரில் எமக்கு வெற்றியுண்டானது குறித்து எமது குடிமக்கள் வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாட விரும்புகின்றனர். புலவர் நல்லுரையால் அதனை மாற்றிக் கொற்றவையைக் கொண்டாடும் விழாவாக

அதனைக் கொண்டாடக் கருதியுள்ளேன்! கொற்றவையைப் பரவுதல் நுமக்கும் நன்மையே யாமன்றே? ஆதலின் அச்சமயம் எமது தலைநகர்க்கு வந்து எம்மைப் பெருமைப்படுத்துமாறு வேண்டுகின்றேம்.

இங்ஙனம், தங்களை நண்பராகக் கருதும்,

**பாண்டியன் நெடுஞ்செழியன்.**

**சேரர் :** எல்லாம் சரியே! யான் தோற்றது குறித்துக் கொண்டாடும் வெற்றி விழாவிற்கு யான் செல்லுவதா? அது இயலாத காரியம்.

**புலவர் :** சற்று நிதானமாக ஆலோசிக்குமாறு வேண்டுகின்றேன். வென்ற மன்னர் எத்தனை படிகள் இறங்கிவந்துள்ளார் என்பதைச் சிந்தியுங்கள். நீவிர் ஒருபடியேனும் இறங்கி வராதிருத்தல் நியாய மன்று. மற்று இன்னொன்று: தாம் தங்கள் படை வலிமை சிறிதும் குறையவில்லை என்று கூறுவது தவறு. தங்களுக்குத் துணைவராயிருந்த சோழர், வேளிர் முதலிய யாவரும் வலியழிந்துவிட்டனர். அவர்கள் துணை இனி உமக்கு இல்லை. சோழர் வெற்றிக் கொண்டாட்டத்திற்கு வர இசைந்துவிட்டார். போரில் வெற்றி தோல்விகள் ஒருவர் பங்கல்ல என்பதை உணர்ந்ததாகத் தாங்களே தெரிவித்தீர்கள். வெற்றி தோல்விகள் கிடக்க! உங்கட்கு மிகவும் உற்ற நண்பரானவர் போரில் கண்ணிழந்து, கையிழந்து, காலிழந்து போகக்கூடும். அவர்களது உறவினர் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழக்கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக, போர் என்றவுடனேயே வீரன்னைவரை அவர் கொலைசெய்துவிடவும் கூடும். இப்படி ஏதாவது ஆனால் உமது கருத்து நிறைவேறிய தாக ஆகிவிடுமா? நிற்க, ஒன்று உறுதியாகக் கூறு கிறேன். வெற்றிவிழாக் கொண்டாட்டம் உண்மையில் கொற்றவை கொண்டாட்டமாகத்தான் நிகழப் போகின்றது! ஆதலின் தாங்கள் அங்குச் செல்லுதல்

பெருமைக் குறைவாகாது. இன்னென்று: அவ்விழா வில் அவ்வரசரைப் பலர் பாடல் பாடிப் புகழ்வரன்ருே? அவ்வாறே அங்குத் தங்களை யான் புகழ்வேன்!

**சேரர் :** புலவர் திலகமே! உம்மை எவ்வாறு புகழ்வதென்றே தெரியவில்லை. போர் எமக்கு விருப்பமானதேயாயினும், அது எவ்வளவு கொடுஞ் செயல் என்பதை இப்போது நன்குணர்கின்றேன். சமாதானத்தின் மேன்மையும் நன்கு விளங்குகின்றது.

**புலவர் :** ஆயின் இவ்வோலைக்கு 'மறு மொழி யாக யான் கூறுமாறு ஒரு ஓலை எழுதித்தர வேண்டு கின்றேன்.

**சேரர் :** எமது பெருமைக்கு இழுக்கு வாராதிருப் பின் எழுதித் தருகின்ருேம்.

**புலவர் :** இன்னுமா ஐயம்! உமது பெருமைக்கு சிறுமை நேராதென உறுதி கூறுகின்றேன்.

**சேரர் :** நன்று! ஓலை பெறுக! பிறகு சேரர், புலவர் கூறியவாறு ஓலை எழுதித் தருகின்ருர்:

"மன்னர்பெருமான் பாண்டியருக்கு, வணக்கம். தங்கள் ஓலை வரப்பெற்றேன். அன்பும், சமாதானமும், ஒற்றுமையும் எவ்வளவு உயர்வானவை என்பதை உணர்ந்தேன். தங்கள் வெற்றிவிழாவாகிய கொற்றவை விழாவிற்கு யான் வரத்தடை யில்லை. அவ்விழாவில் புலவர் எம்மைப் பாராட்டிப் பாடுதல் கூடும். அது தங்கட்கு உடன்பாடாயின் வருகின்ருேம்.

இங்ஙனம்,
தங்களை நணபராகக் கருதும்,
**மாந்தரஞ்சேரலிரும்பொறை.**

**புலவர் :** இவ்வோலையின் இறுதியிற் கண்ட செய்தி முன்னரே ஆலோசித்து முடிவு கட்டப்பட்டது. எனினும் தங்கட்குப் பெருமை தரவேண்டியே இக் குறிப்பைக் குறித்துள்ளேன். யான் கொடுத்த

வோலேயே வெற்றிக் கொண்டாட்டத்திற்கு அழைப் பாகுமாயினும் மற்ருேர் ஓலேயும் தங்கட்குக் கிடைக்கு மாறு செய்வேன். தவருது வருக! நன்மையுண்டாம்! மற்று, ஒன்று மறந்தேன். தங்கள் படைத்தலேவர் வீரண்ணர் வெற்றிவிழாவின்போது தங்களிடம் ஒப்படைக்கப்படுவார். அவரை முன்னரே ஒப்படைக்கு மாறு வற்புறுத்தல் வேண்டாம்.

**சேரர்:** நன்று! அங்ஙனமே!

பிறகு புலவர் திரும்பிச் சென்ருர். செல்லும் போது தமக்குள், வீரம், போர், வெற்றி என்னும் பெயர்களால் எவ்வளவு கொடுமை விளேகின்றது! இவ்வரசர்களேத் திருத்துவதற்குள் பெரும்பாடு ஆகி விடுகிறது. ஏதோ ஒருவாறு காரியம் முடிந்தது, என்று சொல்லிக்கொண்டே சென்ருர்.

## 12. வெற்றிக் கொண்டாட்டம்

“ஆ! இவ்வளவு விடியற்காலத்திலேயே நகர் முழுவதும் நன்கலங்கரிக்கப்பட்டுவிட்டதே!”

“அடிக்கொரு அழகிய பந்தல்! சித்திரங்கள் வரையப்பெற்ற திரைச் சீலேகள், மகர தோரணங்கள்! பழுக்காயும் விழுக்குலேயும்! தொங்கல்களின் அழகு தான் என்னே! காணக் கண்கோடி வேண்டும்”.

“ஆறு கிடந்தாற் போன்ற நீண்டு அகன்ற தெரு! இருபுறமும் உயர்ந்து தேவருலகிற் சென்று தம் பெருமையை எடுத்துக்காட்டுமாறு விளங்கும் மாட மாளிகைகள், கூட கோபுரங்கள்! கொடி, தோரணம், பொலம்பாலிகை முதலியவற்ருல் அலங்கரிக்கப்பட் டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகவன்ருே விருக் கின்றது!

“விழாவினே நாட்டிலுள்ளார்க்குத் தெரிவிக்கும் முரசொலி காற்றெடுத்த கடலொலி போல அல்லவா காணகின்றது!”

"இதோ கோயில்களில் விழாக் கொண்டாடுதற் கென எடுத்த கொடிகள்! இவ்வில்லங்களில் உயர்ந்து படபடவென்றடித்துக்கொள்ளும் கொடிகள் இவை தண்டத் தலைவர் இல்லங்கள் எனத் தெற்றெனக் காட்டுகின்றனவே! இத்தெருவில் பல தான தருமங் களைக் குறித்தற்காக உயர்ததப்பட்ட கொடிகள் ஐயம் பெறுவாரை வாருங்கள் வாருங்கள் என்று அழைப்பது போல அல்லவா அசைந்தாடிக்கொண்டிருக்கின்றன!"

"வீதியில் படைகள் பவனி வருவதைப் பார்ப் போம். முன்னே களிறுகளின் காட்சி! பொன்னாலான இவற்றின் நெற்றிப் பட்டங்கள் எப்படி மின்னு கின்றன! யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே என்பது சரியாகவே உள்ளது."

"அணியணியாகத் தலையாட்டத்தோடு கூடிய குதிரைகள் அவற்றின்மீது கவசமும் வேலும் தரித்த வீரர்! இவர்கள் அசைந்தாடிச் செல்லும் காட்சியே காட்சி!

"ஆ! ஆ! அழகிய தேர்கள்! பொன்னும் மணி யும் இழைத்துக் கொடிகள் கட்டித் தூக்கிய குன்றுகள் மன்னவனின் வெற்றிக் கொண்டாட்டத்தைக் காண வருவது போலல்லவா இருக்கின்றன!"

ஆ! எவ்வளவு படை வீரர்! இவைகளின்வாளும் வேலும் மின்னுவது எவ்வளவு அச்சத்தைத் தரு கின்றது; இன்னும் இவர்கள் போரில் முனைந்துவிட் டாலோ! பகைவன் இவர்களைக் கண்டு அஞ்சியோடி யதில் வியப்பென்ன விருக்கின்றது!

"இதோ இன்னிசை! இப்போது பாடும் பண் காதிற்கு எவ்வளவு இனிமை தருகின்றது! இதோ இங்கு நின்று இதனைக காதாரக் கேட்டுச் செல்லு வோம். ஆ! அடுத்துள்ள ஆடரங்கில் நடனம் நிகழும் ஆரவாரம் கேட்கின்றது. அங்குச் சென்று கண் படைத்த பயனைப் பெறுவோம்!"

இவ்வாறு மதுரை நகரமாந்தர் விழாக் கொண்டாட்ட நாளன்று மதுரைத் தெருக்களில் தத்தம் நண்பரோடு கூடிப் பேசிக்கொண்டு கூட்டங் கூட்டமாகச் சென்றனர். அன்று பாண்டியனரண்மனை தனியொளி வீசி விளங்கியது. பொன்னும் மணியும் வாரியிறைத்தாற்போன்று அதன் அலங்காரம் காணப்பட்டது. அத்தாணி மண்டபத்தில் அரசன் வீற்றிருக்கும் கோலம், இந்திர சபையில் இந்திரன் இப்படித்தான் வீற்றிருப்பான் என்பதை எடுத்துக்காட்டிற்று. அவருக்கு எதிரில் இருபுறங்களிலும் வரிசை வரிசையாக ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார், புலவர், நகரமாந்தர் ஆகியோர் தங்கள் செல்வம் இத்தகையதெனத் தங்கள் ஆடையணிகளால் விளக்கிக் காட்டுவாராய் அமர்ந்திருந்தனர்.

"போரில் தோற்ற மன்னரெல்லாம் வந்துள்ளனரே! அவர்களை நமது மன்னர் கௌரவித்து உயரிய இருக்கை அளித்து அளவளாவுகின்றனரே! ஆ! என்ன அதிசயம்!"

"இது மன்னரை யெல்லாம் ஒற்றுமைப்படுத்தப் புலவர் குழாம் செய்த சூழ்ச்சி!"

"இது வெற்றி விழாவேயானாலும் கொற்றவை விழாவாகக் கொண்டாடப் போகின்றனர்!"

இவ்வாறு சபையிலிருந்த பொது மக்கள் தங்களுக்குள் இரகசியமாகப் பேசிக்கொண் டிருந்தனர். விழா நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. ஆடல் பாடல், பந்தயப் போர்கள், விளையாட்டுக்கள் இவை குறித்த குறித்த நேரங்களில் முறையாக இனிதுநடைபெற்றன. ஏனாதிப் பட்டம் பெற்ற படைத் தலைவர் மன்னன் பெருமையை பாராட்டிக் கூறி வாழ்த்தினர். சிறந்த அணிகலன்களை அணிந்த யவனமகளிர் யவனநாட்டினின்று கொணர்ந்த தேறலைப் பொன் கலங்களில் வார்த்து மன்னனுக்

களித்தனர். அரசன் போரில் திறங்காட்டிய படை வீரர்க்குப் பரிசளிக்கப் புகுந்தான்.

"வில்லின் விசையை அடக்கிய அம்பின் வலியைத் தாங்கிய மார்பினையுடைய வீரரைக் கொணர்க!"

"பரியைச் செலுத்த வேண்டிய அளவிற்கு இழுத்துப் பிடிக்கும் ஆற்றலைக் கொண்ட தோளினையுடைய வீரரை இங்குக் கொணர்க!"

"அகழியிலும் மதிலின் மீதும் நின்று போரிட்டு வருந்திய வீரரைத் தருக!"

"முரசம் அதிர, நெருப்பைப் போன்ற கொடிய பகைவர் அணியுட் புகுந்து யானைகளை வெட்டிச் சாய்த்துப் புண்பட நின்ற வீரர்களை இங்குத் தருக!"

"அம்பும், வாளும், வேலும் பட்டுப் புண்ணுகிப் போர்க்களத்தில் வீரங்காட்டி நின்ற வீரரை இங்கு வரச் செய்க!"

"போரில் வியக்கத்தக்க செய்கைகளைச் செய்து வெற்றியுண்டாக்கக் காரணமாயிருந்த வீரரை இங்கு வரச் செய்க!"

இவ்வாறு அரசன் கூறக் கூற வீரர் பலர் முன் சென்று அரிய பொருள்களைப் பரிசிலாகப் பெற்று மீளலாயினர். பிறகு செழியன் எழுந்து நின்று, அருகிலமர்ந்திருந்த அரசர் குழாத்தை நோக்கி,

"மன்னர் பெருமக்களே,

வினை வயத்தால் மனம் வேறுபட்டு நாம் ஒருவரோடொருவர் போரிட்டு இன்னல்களுக்கு இலக்கானோம். அவ்வின்னல்கள் இன்பங்களாக மாறுமாறு, இவ்விழா, கொண்டாடப்படுகின்றது. நம்மில் இனிப்பகை நேராதிருப்பதாக! அண்மையில் நிகழ்ந்த போருக்குமுன் அவரவர்க்கு எந்தெந்த நாடுகள் சொந்தமாமாயிருந்தனவோ, அவையவை அவரவர்க்கே இனியும் சொந்தமாக விருக்கட்டும்! சேரர் பெருமானுக்கு முன்னமே

யாம் வாக்களித்தவாறு அவரது படைத்தலைவர் வீரண்ணரை அவர்பால் இதோ ஒப்படைக்கின்றோம்'' என்றான்.

பிறகு "யாரங்கே! வீரண்ணரை ஈங்குக் கொணர்க!'' என்றதும் வீரர் இருவர் இருமருங்கும் நடந்துவர வீரண்ணார் நடுவில் பெருமிதத்துடன் நடந்து வந்தார். அவர் சபையின் நடுவிடத்தை யடைந்ததும் கார்வண்ணன் எழுந்து 'வீரண்ணரே, உமது வீரமும் போர்த்திறமையும் அரச விசுவாசமும் இணையற்றன. அன்று நான் உம்மோடு பேச வேண்டியதிருக்கின்றது என்று கூறினேனன்றோ! அது இதுவே! யாங்கள் உம்மைச் சிறையிட விரும்பவில்லை. அன்றே விட்டு விடத்தான் எண்ணினோம். ஆயினும் ஏதாவதொரு வகையில் உம்மைக் கௌரவித்து அனுப்ப எண்ணியே அன்று சிறைப்படுத்தினோம். சென்றவைகளை மறந்து இனி நாம் நட்பினராவோம்! என்றான்.

வீரண்ணன் அதற்கு மறுமொழியாக "கார்வண்ணரே, உமது பெருந்தன்மையும் படைக்கலப் பயிற்சியும், வீரமும் என்னைத் திகைக்கச் செய்கின்றன. இத்தகைய பெருவீரரை நண்பராக அடைய யான் பேறு பெற்றிருக்கவேண்டும்! உங்கள் அன்பிற்கு வணக்கம்!'' என்றான். பிறகு சேரவரசர் எழுந்து, "செழியர் செம்மலே, வீரமே பெரிதாகக் கொண்டு வலிய பகையை வளர்த்துப் போர்புரிந்து மேம்படுவதைக் காட்டிலும், அன்புடன்கூடி, ஒற்றுமைப் பட்டு அளவளாவுவது எத்துணை மேம்பாடு உடையது என்பதை இப்போதே உணர்கின்றேன்! இனி நம் மரசர் கூட்டத்துள் பகை இல்லாது ஒழிவதாக! எம்மையும் எமது படைத்தலைவரையும் பெருமைப்படுத்தியதற்காக எமது நன்றி! என்றார்.'' அப்பால் அங்குக் கூடியிருந்த பிற அரசரும் தத்தம் தகுதிப்படி பேசுதற்குரியவைகளைப் பேசினர். அதன்பின் **மாங்குடி மருத**

ஞர் என்னும் புலவர் எழுந்து, பாண்டியனை வாழ்த்துவாராய், "செழியர் பெரும, பொய்யொன்ருல் தேவருலகம் அமிர்தத்தோடு கிடைக்குமாயினும் அப் பொய்யைக்கூருது மெய்யையே கடைப்பிடிப்பாய் நீ! மண்ணுலகத்தாரோடு விண்ணுலகத்தாரும் ஒருங்கு கூடிப் போருக்கு வரினும் பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகமாட்டாய் நீ! தென்றிசைக்கண் உள்ள மலைகளில் வாணன் வைத்த விழுநிதி பெறினும் அது பழியோடு வருவதாயின் அதனை விலக்குவாய் நீ! எத்தகைய உயர்ந்த பொருளாயினும் ஈதல் உள்ளத்தோடு அதனைப் பரிசிலர்க்குக் கொடுத்துப் புகழைப் பெறுவாய் நீ! இத்தன்மைகளை யுடைய உனக்கு நிகர் நீயேயன்றிப் பிறரில்லை! நின் குலத்திற்கு முதலாயதும் எல்லாரும் தொழுவதுமாகிய பிறை மேற்குத் திசைக்கண் நின்று நாடோறும் சிறப்பதுபோல, நின் வெற்றியால் நின்மரபினர் கொற்றமும் வழிவழிச் சிறக்க!" என்ருர். பிறகு **குறுங்கோழியூர்கிழார்** எழுந்து சேரரை வாழ்த்துவாராய், "சேரர் பெருமானே, வாழ்க! மாற்றரசர் பணிந்து தந்த திறையால் தம்மை அடைந்தவருடைய வறுமையைப் போக்கி அவர்களது சுற்றத்தாரையும் பாதுகாக்கின்ற கொல்லிமலை யரசர் வழியில் தோன்றியவனே, உன்னைப் பாடிய செவ்விய நாக்குப்பின் பிறரைப்பாடாதவாறு பரிசிலைக் கொடுக்கும் பெருந்தகையாளா, மாந்தரஞ்சேரலிரும்பொறை பாதுகாத்த நாடு தேவருலகத்தை யொக்கும் என்று பலரும் சொல்லக் கேட்டுவந்து, அது அங்ஙனமே இருக்கக்கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்! உனது பெருஞ்செல்வம் எல்லை யற்றதாய்ப் பெருகி வாழ்க!" என்ருர். பிறகு பல்வேறு புலவர்கள் ஆங்கு அமர்ந்திருந்த மன்னரை யெல்லாம் வாழ்த்திப் பாடிப் பரிசில்களைப் பெற்றனர். விழா இனிது முடிவுற்றதாக; நமது வரலாறும் இனிது முடிவுறுகின்றதன்ருே!

104632

# CHEL̲IYAR CEMMAL

BY

VIDWAN V. NARASIMHAN, M. A.,

**PALANIAPPA BROTHERS**

TRICHY & MADRAS-5.

**Price : Re. 1-0-0**